OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 JUL 1950
MADRAS

198579

# காலம் கடந்த கண்ணீர்

ஸ்ரீ பத்மநாராயணன்

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சந்தானமய்யர் களைப்படைந்தவராய் அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்து, தன் ஜரிகைத் தலைப்பாகையையும், உடுப்புகளையும் கழற்ற ஆரம்பித்தார் அதே சமயத்தில் ஒரு கான்ஸ்டேபிள் உள்ளே நுழைந்து அவரிடம் ஒரு காகிதத்தை நீட்டினான் அது பக்கத்தில் சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள மயிலம்பட்டி கிராமத்தின் மணியக்காரர் அனுப்பிய 'ரிப்போர்ட்டு'

அதைப் படித்துவிட்டு. சந்தானமய்யர், 'சீ விடிந்தெழுந்திருந்தால் இந்தத் தாலூகாவில் கொலையும் தற்கொலையும் தான் தாண்டவமாடுகின்றன நமக்கும் ஓய்ச்சல் ஒழிவில்லை என்ன உத்தியோகமிது? என்று முணுமுணுத்துக்கொண்டார் வந்த கான்ஸ்டேபிளிடம், 'சரி நான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன் நீ இன்னும் மூன்று கான்ஸ்டேபிள்களுடன் மயிலம்பட்டிக்குப் புறப்படத் தயாராயிரு வண்டியையும் ஏற்பாடு செய்.' என்று கூறிவிட்டு அவர் சாப்பிடப் போனார்

சாப்பிட்டுவிட்டு சற்றுக்கூட இளைப்பாறவில்லை விரைவிலேயே உடுப்புக்களை எடுத்து அணிந்து கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு விட்டார்.

நான்கு கான்ஸ்டேபிள்களுடன் மயிலம் பட்டியை அடைந்தார் சந்தானமய்யர்.

"அதோ இருக்கிறதே சத்திரம், அதில்தான் ஒரு அனாதைப் பிணம் இருக்கிறது நேற்று ராத்திரி ஒரு கிழவன் சத்திரத்துக்குள் நுழைந்து தனக்கு ஏதாவது சோறு போட வேண்டுமென்று கேட்டானாம், இப்பொழுதான் அன்னதானமெல்லாம் நிறுத்தப்பட்டு மூன்று வருஷமாகிறதே ஆகையால் அவருக்கு ஒன்றும் போடமுடியவில்லை அவன் பசியுடன் திண்ணையிலேயே படுத்துக் கொண்டாராம் இன்று விடியும் நேரத்தில் அவரைப் பார்த்த சத்திரத்து பேஷ்கார் இறந்துகிடந்ததாக என்னிடம் வந்து சொல்லவே. நானும் தாமதிக்காமல் தங்களுக்கு 'ரிப்போர்ட்' அனுப்பினேன்'' என்று அக்கிராம மணியகாரர் விவரித்துக்கொண்டே. சர்க்கில் இன்ஸ்பெக்டரை சத்திரத்துக்கு இட்டுச் சென்றார்.

அது ஒரு பாழடைந்த சத்திரம் ராணி மங்கம்மாள்காலத்தில் கட்டப்பட்டது. அதன் பெரும்பாகம் இடிந்து கிடந்தது புழக்கத்துக்கு உபயோகமானது குறுகலாக நீண்டோடிய அதன் பிரதான வாயில் பாகம் மட்டும்தான் அதுவும்கூட அச்சத்திரத்தின் ஏகாங்கவாசியான நிர்வாகி பேஷ்காரின் தலையில் எப்போது விழுவோம் என்று காத்துக்கொண்டிருந்தது! திண்ணைப்பாகமும். மேல் முகடு இல்லாமல் திறந்தவெளிதான்! அதில் சாதாரணமாக யாரும் படுத்துக் கொள்வதில்லை ஆனால் அக்கிழவர் துணிந்து படுத்துக்கொண்டார் நள்ளிரவில் சத்திரத்தில் சோறு இல்லையென்று தெரிந்ததும், ஊருக்குள் போய் யாசிப்பதற்கு அவர் கால்களில் திராணி இருந்தால்தானே! ஆகையால் படுத்து நித்திரை புரிந்தார்—மீளா நித்திரையாக!

சந்தானமய்யர் மயிலம்பட்டியை அடையும்போதே இருட்டும் சமயம். கையெழுத்து மறையும் நேரம் தாமதிக்காமல் நேரே சத்திரத்துக்குப் போனார் அவர் கையில் ஒரு குறிப்புடயரி இருந்தது பிரேதத்தின் நிலைமை அது கிடக்கும் இடத்தின் விவரங்கள் எல்லாம் அதில் எழுதவேண்டும். மணியகாரரும் பின் தொடர்ந்தார்.

இறந்த கிழவர் மல்லாந்து விரைத்தபடி படுத்துக்கிடந்தார் அரையில் கட்டியிருந்த ஒருகந்தலைத்தவிர வேறு வஸ்திரம் அவர்மேல் இல்லை பக்கத்தில் அவர் ஊன்றுகோலாக உபயோகித்த கழியும், சிறு மூட்டையும் கிடந்தன புதைபொருள் காட்சிச் சாலையில், 'இது மனிதனின் எலும்புக்கூடு என்று எழுதி பக்கத்தில் வைக்கப்பட்டிருக்குமே, அந்த கூட்டிற்கும் அங்கு இறந்துகிடந்த மனிதனுக்கும் வித்தியாசம் அதிகம் இல்லை அவருடைய சதைகள் எறும்புகளுக்குள் மடங்கி அமுங்கிக் கிடந்தன காலும் கையும் ஒரே குச்சிதான்.


சந்தானமய்யருக்கு இதைப்போன்ற சாவுகளும், கொலைகளும் புதிதல்ல உத்தியோக ஹோதாவில் இறந்த பிரேதங்களைப் பார்த்து, தொட்டு, புரட்டி, இழுத்து எல்லாம் செய்த அவர் மனம் யந்திரம்போல் உணர்ச்சியற்றதாகியிருந்தது. கொலையுண்டவனை அவர் பரிசோதிக்கையில், அவனது சுற்றத்தார் சுற்றி நின்று அடிவயிற்றிலிருந்து துக்கம் பீறிட ஓலமிட்டழுவார்கள். அவரோ ஒரு உணர்ச்சியுமில்லாமல் அவர்களைப் பார்த்து, "சீ. கழுதைகளா, விலகிப் போங்கள் நாய் மாதிரி அடித்துக் கொள்வானேன்? கொலை செய்வானேன்?'' என்று விரட்டியடித்துவிட்டுத் தன் உத்யோக நடைமுறைகளை முடித்துக் கொள்வார்.

அன்றும் அப்படித்தான் இறந்த மனிதன் மேல் வெட்டுக்காயங்கள் ஏதாவது இருக்கின்றனவா. என்பது போன்ற விவரங்களையெல்லாம் குறித்துக்கொண்டார். அவர் மேல் காயம் ஒன்றும் இடையாது பசியின் கொடுமை தாங்காது ஆவி உடலைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும் என்று ஊகித்தார் ஆனால் ஏதாவது விஷமுண்டு மாண்டிருந்தால்? எதற்கும் அடுத்து வைத்தியப் பரிசோதனை இருக்க வேயிருக்கிறது என்று நினைத்துத் தன் காரியங்களை ஒருவாறு முடித்துக்கொண்டார்

இறந்தவரின் முகத்தை மாத்திரம் அவர் தெளிவாகப் பார்க்கவில்லை அதையும் பார்த்துவிடுவோம் என்று எண்ணி விளக்கை முகத்திற்கு நேரே காட்டச்சொன்னார். சந்தானமய்யர் அதை உற்றுப்பார்த்தார் இறந்தவரின் முகம் நீலம் பூத்துப்போயிருந்தது கன்னங்கள் குழிவிழுந்திருந்தன மூக்கு மாத்திரம் அளவுக்கு மீறி நீண்டிருந்தது ஆள் இனம் கண்டு கொள்வது சற்று சிரமம்தான் மறுமுறையும் அவர் அந்த முகத்தை உற்றுப்பார்த்தார் ஐயோ. ஏன் இவர் முகம் கறுத்துவிட்டது? சற்று பயந்துவிட்டார் என்று கூடச் சொல்லலாம்.

சந்தானமய்யர், அவரை அடையாளம் கண்டுகொண்டார் அவர் மனம் துணுக்குற்றது அவரது உத்யோக வாழ்க்கையில் உண்மையிலேயே ஒரு பிரேதத்தைக் கண்டதும் அன்றுதான் பின் வாங்கினார் அது பயத்தினால் என்று கூடச்சொல்ல முடியாது இரக்கம் கூட அல்ல அது. ஆனால் என்ன? ஏன் இப்படி அவரையறியாமல் சலனமடைகிறது அவர் மனம்? அவர் கூடக் கண் கலங்கிவிட்டார். கண்ணீர் துளும்பிற்று. தன் அவஸ்தைகளை அருகிலுள்ளவர்கள் பார்த்துவிடாதபடி ஒருவாறு சமாளிக்க முயன்றார் ஆனாலும் அவர் அந்த முயற்சியில் பூரணமாக வெற்றி பெறவில்லை

"அந்த மூட்டையை அவிழ்த்து அதிலுள்ளதை எடுங்கள்'' என்று



கான்ஸ்டேபிள்களுக்கு உத்திரவிட்டார் கம்பிய குரலில் அதற்குள் ஒரு காகிதம் மட்டும் இருந்தது அதை 'வெடுக்'கென கைப்பற்றிக்கொண்டார் ஏன், அதில் தன்னைப்பற்றி ஏதாவது எழுதியிருந்தால்? என்ற பயம் அவருக்கு.

"சரி இப்பொழுதே ஒரு வண்டியில் இந்தப் பிணத்தை ஆத்தூர் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிக்குக்கொண்டு போங்கள் நானும் வேறு வண்டியில் வந்து சேருகிறேன் என்று இரண்டு கான்ஸ்டேபிள்களுக்கு உத்திரவு கொடுத்துவிட்டு. மற்ற இருவருடன் வேகமாகத் தன் வண்டியில் ஏறிக்கொண்டார் சந்தானமய்யர்.

இரண்டு வண்டிகளும் நகர ஆரம்பித்தன என்ன நினைத்தாரோ தெரியவில்லை தனக்குச் சிரமமாயிருக்கிறது, வண்டியில் படுத்துக்கொள்ளவேண்டும். என்று கூறி, கூட இருந்த இருவரையும் முதல் வண்டியிலேயே ஏறிக்கொள்ளும்படி இறக்கிவிட்டார் அதில் இடம் இல்லாததால் ஒருவன் நடந்தே பின் தொடர்ந்தான்.

சிரமம் என்று சொன்னாரே அது உண்மையில் சிரமம் அல்ல அவரது மனச்சாட்சிதான் அவரை அப்படிப் படுக்க வைத்தது பாவம், அந்தக் கிழவர் இறந்தது தன்னால் தான் என்பதை அவர் ஊகித்துக்கொண்டார். தன்னுடைய ஈனச் செய்கையின் நினைவு அவரது மனத்தைப் புரட்டிப் புரட்டி அடித்தது.

* * * *

சமையல் ராமய்யர் என்றாலே சேலம் ஜில்லாவில் தெரியாதவர்கள் இடையாது சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் அந்த ஜில்லாவிலேயே அவரது சமயலுக்கு ஏகப்பட்ட கிராக்கி ஒவ்வொரு கல்யாணத்திற்கும் ஐநூறு அறுநூறு என்று ஒப்பந்தம் பேசிக்கொண்டுதான் போவார். நள பாக ராமய்யர் என்றுகூட அவரை கூப்பிடுவார்கள் அவரது சமயலில் கைமணம் ஜாஸ்தி

தன்னுடைய இருபதாவது வயதிலிருந்தே அவர் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார். வருஷம் ஒன்றுக்கு சுமார் பத்தாயிரம் ரூபாய் வரை அவர் சம்பாதித்தார் சீமான்கள் வீட்டு விசேஷங்களுக்குத்தான் அவர் போவார். அந்த யோகம் சுமார் ஐந்தாறு வருஷங்கள் நடந்தது.

ஒரு சமயம் சேலம் ஜில்லா ஜட்ஜ் வீட்டில் அவர் சமையலுக்குப்போயிருந்தபோது. அவருடைய சாப்பாட்டின் அபூர்வமான ருசியைக்கண்டு அவர் மயங்கி. ராமய்யரைத் தன் வீட்டில் சமையலுக்கு அமர்ந்துகொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார் ராமய்யரின் துரதிர்ஷ்டமோ, ஜட்ஜின் நல்லகாலமோ தெரியாது. அவரும் அதிகத் தயக்கமில்லாமல் 'சரி என்று ஒப்புக்கொண்டுவிட்டார். அதற்கு வேறொரு காரணமும் இருந்தது ராமய்யர் மிகவும் மானஸ்தர். அந்தக்காலத்திலோ, சமையல் செய்யும் தொழிலாளிகள் எருக்கஞ்செடி போன்று ஏராளம். அவர்களது பெருமைப் பேச்சுகளும், ஏச்சுகளும் தொழில் முறையில் ராமய்யருக்குப் பிடிக்கவில்லை உண்மையில் கொஞ்சம் பயந்த சுபாவம் உள்ளவர் ஆகையால் 'சிவனே' என்று ஜட்ஜ் வீட்டில் கொடுக்கும் ஐம்பது ரூபாய் சம்பளத்துடன் திருப்தியடைந்தார். பரந்து பிரகாசிக்கும் அவரது திறமை ஒரே குடும்பத்துக்குள் அடைக்கலம் புகுந்தது

இளம் வயதினரான ராமய்யருக்கு நல்ல பெண்ணாகப்பார்த்து விவாகம் செய்வித்தார் ஜட்ஜ் தம்பதிகள் இருவரின் உழைப்பையும் பெற்று, அவர்களையும் சம்ரட்சித்து வந்தார் அவர்

பல வருஷங்கள் அவர்களுக்குக் குழந்தையே பிறக்கவில்லை ஆகையால் ஜட்ஜின் ஒரே குமாரனை சந்தானத்தை எடுத்து வளர்த்துக் கொஞ்சினார் ராமய்யர் சந்தானத்திற்குத் தாயாரும் இறந்துவிட்டாள். ஜட்ஜ் மறு விவாகம் செய்து கொள்ளவும் விரும்பவில்லை. ஏனெனில் அவருக்கு அப்போதே வயது ஐம்பதை எட்டிவிட்டது

தாயற்ற சந்தானத்தை ராமய்யர் தம்பதிகள் அன்புடன் பேணி வந்தனர். சந்தானத்திற்கும் பத்து வயதாயிற்று அச்சமயத்தில், தங்களுக்குப் புத்திர சந்தானமே இல்லையென்று முடிவு கட்டிவிட்ட ராமய்யருக்கு அபூர்வமாக ஒரு பெண் பிறந்தாள் லக்ஷ்மி என்று அவளுக்குப் பெயரிட்டார்

லக்ஷ்மியும் பெரியவளாக வளர்ந்து பதினாறு வயதை அடைந்தாள் ஜட்ஜ் அவர்களும் 'ரிடயர்' ஆகி ஓய்வுபெற்று பத்து வருஷங்களாகிவிட்டன ராமய்யரும் அவரது குடும்பமும் அவரது குடும்பத்தின் அங்கத்தினர்களாகவே தான் இருந்துவந்தனர்.

சந்தானத்திற்கோ, செல்வத்தின் கொழிப்பினால் படிப்பு வரவில்லை. சேர்க்கை தோஷமும் சேர்ந்துகொண்டது பல தடவைகள் தவறி ஒரு விதமாக இண்டர் மீடியேட் தேறிவைத்தான் அவனது முரட்டு சுபாவத்திற்கேற்றபடி, அவனை நண்பர் ஒருவரின் சிபாரிசுடன் போலீஸ் இலாகாவில் சப்-இன்ஸ்பெக்டர் வேலை வாங்கிக் கொடுத்தார் அவன் தந்தை.



ராமய்யரும் அச்சமயம் தன் மனைவியை இழந்தார். வீட்டில் தானும் தன் குமாரத்தி லக்ஷ்மியும்தான். சந்தானத்தை சப் இன்ஸ்பெக்டராகப் பல ஊர்களுக்கு மாற்றிக்கொண்டேயிருந்தனர், அடிக்கடி அவன் தந்தையிடம் வந்துவிட்டுப் போவான்.

பருவத்தை எய்திய லக்ஷ்மி வீட்டிலிருப்பதும், செல்வச் செருக்குள்ள சந்தானமும், அங்கு வந்து போவதும், ஊரார் வாயில் முடிபடாமல் சும்மாயிருக்குமா? லக்ஷ்மியும் சந்தானமும் தகாத உறவு கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் பேசி வந்தனர் ஆனால் பேதை லக்ஷ்மி ஒன்றும் அறியாள்! சந்தானமும் அவளைப்பற்றி விகல்பமாக நினைத்தவனில்லை மேலும் அவனுக்கு டில்லியிலிருந்தும், பம்பாயிலிருந்தும் பல பெரிய இடங்களிலிருந்தெல்லாம் ஜாதகங்கள் குவிந்த வண்ணமிருந்தன தன் கற்பனைக் காதலி எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று அவன் எண்ணியிருந்தான் தெரியுமா? அவளை பிரம்மா இனிமேல்தான் சிருஷ்டி செய்ய வேண்டும்!

ஒட்டியிருக்கும் வரை, பாசத்தின் ஆழத்தை நாம் உணர்வதில்லை பிரிந்தால்தான் அது நமக்குப் புலனாகும்

பாசம் சேர்வதும் அப்படி, அறுவதும் அப்படி!

ஒரு தடவை சந்தானத்திடம், "உனக்கென்ன வீட்டில் லக்ஷ்மி இருக்கிறாள்," என்று குத்தலாக அவனிடம் ஒரு நண்பன் சொன்னபோது, அவனுக்குப் கோபம் துளுத்தது அலட்சியமாக "அவள் கிடக்கிறாள் மூதேவி, சமையற்காரனின் பெண்ணைப் போய்த்தான் தொட வேண்டுமாக்கும்' என்று சொல்லி விட்டான். இது அவளுக்கும் தனக்கும் தகாத உறவொன்றும் இடையாது என்று ஸ்தாபிக்கச் சொல்லப்பட்ட வார்த்தைதான். ஆனாலும் அதுவே. தனக்கும் லக்ஷ்மிக்கும் உள்ள அந்தஸ்து வித்யாசத்தைப் பனிச்சென்று அவனுக்குப் புலப்படுத்தியது

அன்றிலிருந்து "தொட்டால் ஒட்டிக்கொள்ளும்" என்ற கதையாக, லக்ஷ்மியையும் ராமய்யரையும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை அவர்களுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை ராமய்யருக்கு அது வியப்பாகயிருந்தது ஒரு தடவை. 'சந்தானம், என்னடா என்னோடு பேசமாட்டேன்கிறயே நான் ஒண்ணும் உனக்கு மாமனார் ஆகிவிட மாட்டேன். வெட்கப்படாதே. உனக்கு எத்தனையோ சீமான்கள் பெண்கொடுக்கக் காத்திருக்கிறார்கள்." என்று கேட்டதற்கு சந்தானம் சொன்ன பதில் இது. "நீ பேசாதீர். உம் ஊத்தை வாயை மூடிக்கொண்டு சமையலைப் பாரும்' — என்பதுதான்


இந்த முப்பது ஆண்டுகளாக சந்தானத்துடன் எவ்வளவோ கேலியாக அவர் பழகியதுண்டு. ஏன் அவருடைய ஊட்டந்தானே அவன் உடலில் வேலை செய்கிறது? ஆனால் அன்று அவன் சொன்ன பதில் அவரது மென்மையான ஹிருதயத்தைப் பிளந்துவிட்டது. அவரும் அன்றிலிருந்து, 'என்ன இருந்தாலும் நாம் சமையல்காரன் தானே'' என எண்ணி அவனுடன் கேலிப் பேச்சுக்களை நிறுத்திக்கொண்டார்.

வீட்டின் பெரியவர் ஜட்ஜோ எழுபது வயதுக் கிழவராய், கண் பார்வை மங்கி காதுகள் மந்தமாகி மூலையில் கிடந்தார் .அவருக்கு வேண்டிய உதவிகளை லக்ஷ்மியும் ராமய்யரும் தளராது செய்துவந்தனர்.

சில மாதங்களில் சந்தானத்திற்கு ஒரு பெரிய இடத்துப் பெண் மனைவியாக வந்து அமைந்தாள். அவளுடன் ஒரு சமையல்காரனையும் இரண்டு வேலைக்காரிகளையும் அழைத்து வந்தாள் அந்தப் புதிய மாட்டுப்பெண் கிழவரும், தனக்குப் புதிய உதவிகள் வந்துவிட்டன, லக்ஷ்மியும் கலியாண வயதையெட்டிவிட்டாள் என்பதை உணர்ந்து, ஒரு நாள் ராமய்யரைக் கூப்பிட்டு, 'அப்பா ராமா, உன் பெண்ணுக்கு நல்ல இடமாகப்பார் நான் பணம் தருகிறேன். கல்யாணத்தைச் செய்துவிடு என் பிள்ளை என்ன சொன்னாலும் கொஞ்சம் பொறுத்துக்கோ. அவனோ சிறுசு. நான் உனக்கென்று ஒரு ஐயாயிரம் ரூபாய் பாங்கில் போட்டு வைக்கிறேன் நீ இனிமேல் வேலை செய்வதற்கு சக்தியில்லாதவனாகிவிட்டாய்," என்று அன்புடன் மொழிந்தார்.

சில மாதங்களில் வைத்தியக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவனுக்கு லக்ஷ்மியை மூவாயிரம் ரூபாய் வரதட்சிணையுடன் விவாகம் செய்துவைத்தார் ராமய்யர். பூராச் சிலவும் ஜட்ஜ்தான் ஒப்புக்கொண்டார். சந்தானத்திற்கு இந்தச் செய்கை கட்டோடு பிடிக்கவில்லை. ராமய்யரை அவன் வெறுக்கத் தொடங்கித்தான் பல மாதங்களாயிற்றே!

ஆகையால் அவன் தன் வீட்டில் கல்யாணம் நடக்கக்கூடாது என்று தடுத்துவிட்டான். அவனும்மனைவியும் முகூர்த்தத்திற்குக்கூடப் போகவில்லை, "கிடக்கிறது தரித்திரம் இவன் பெண்ணை யாருக்குக்கொடுத்தால் எனக்கென்ன?" என்று சொல்லி விட்டான் அவன்.



எப்பொழுது கல்யாணத்திற்கு அவன் வராமல் தன்னை அலட்சியம் செய்தானே அன்றிலிருந்து அவன் முகத்திலேயே விழிப்பதில்லை என்று ராமய்யரும் முடிவு கட்டிவிட்டார். ஜட்ஜ் தனக்கு ஏதாவது பிற்காலத்திற்கு உதவி செய்வார் என்று நம்பி அவரும் வேறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அங்கேயே குடியிருக்க ஆரம்பித்தார்.

ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து சாந்திமுகூர்த்தம் வைக்க ஏற்பாடு செய்தார் அதற்கு அவர் கையில் பணம் இல்லை தன் எஜமானரிடம் கேட்கலாமென்று ஜட்ஜின் வீட்டிற்குக் கிளம்பினார். அப்போதுதான் அங்கு அவருக்கு உடம்பு வெகு தடபுடலாகியிருந்தது. டாக்டர்கள் வந்த வண்ணமாகயிருந்தனர்.

ராமய்யர் மிகவும் கவலையுடன் அவர் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார் அப்போது அங்கு யாரும் இல்லை. "மாமா!" என்று கூவிக்கொண்டே துக்கம் தொண்டையை அடைக்க அவரருகில் உட்கார்ந்தார் ராமய்யர்.

அப்பா வந்தாயா? உன் பெண்ணும் மாப்பிள்ளையும் சௌக்கியமா? உன் விஷயமாக நான் சந்தானத்திடம் இப்போதுதான் சொல்லியிருக்கிறேன். மேலும் இந்தா இதை வாங்கிக்கொள் உனக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுக்கும்படி இதில் எழுதியிருக்கிறேன். அதையும் அவனிடம் வாங்கிக்கொள்? நீ பாவம் சுயமாகச் சம்பாதித்திருந்தால் உன்னிடம் இப்போது லட்ச ரூபாய்க்கு மேலிருக்கும். பாவி நான் கெடுத்தேன்.........ஐயோ.... தொண்டையை......அ... டை...க்... கி...ற...தே...தண்ணீர்......கொண்டு..."

ஹீனமான குரலில் பேசி வந்த கிழவர் ஜலம் கேட்டார் ராமய்யர் தண்ணீரைக் கொண்டுவருவதற்குள் அவரது ஆவி உடலைவிட்டுப் பிரிந்தது பரக்கப் பரக்க ஓடி எல்லோரையும் அழைத்துவந்தார் ராமய்யர்.

'அபசகுனம் மாதிரி நீர் வந்ததினால் தானே என் அப்பா இறந்தார்? ஆமாம்......கையில் என்ன காகிதம்?' என்று சந்தானம் அவரிடம் எரிந்து விழுந்தபடியே அதை 'வெடுக்'கென்று பிடுங்கினான். பிரித்துப் படித்தான் அதில் 'சமையல் ராமய்யருக்கு என் நன்கொடையாக ரூபாய் ஐயாயிரம் கொடுக்கவும் என்று தனக்கு எழுதியிருந்தது

'ஒரு சமையல்காரப் பயல் எவ்வளவு சலுகை கொண்டாடுகிறான்? ஆகட்டும் இவனை ஒரு கை பார்க்கிறேன்' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டான் சந்தானம்.

தந்தை இறந்ததை வியாஜமாக வைத்துக்கொண்டு ஒரு கேஸை ஜோடனை செய்தான் சப் இன்ஸ்பெக்டர் சந்தானம். தன் தந்தையிடம் வஞ்சகமாக கையெழுத்து வாங்கிக்கொண்டு, அதன் மேலே தனக்கு ஐயாயிர ரூபாய் கொடுக்கும்படி எழுதிக்கொண்டு, அவர் உயிருடன் இருந்தால் தன் வஞ்சகம் வெளியாய் விடுமென்று பயந்து அவரையும் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டார் ராமய்யர், என்பதுதான் அவனது குற்றச்சாட்டு

தந்தையின் ஈமச்சடங்குகளுடன் இந்த வழக்கும் நடந்துகொண்டிருந்தது ராமய்யரின் மனநிலையை எழுத்தினால் விவரிக்க முடியாது வளர்த்த கடாவே மாரில் பாய்ந்தது

கஷ்டங்கள் தனியாக வருவதில்லை ஒன்றன் பின் ஒன்றாக அவை தொடர்ந்துகொண்டே வரும் சுபாவமுடையவையல்லவா?

ராமய்யர், லக்ஷ்மியின் கல்யாணத்தில் செய்து போடுகிறேன் என்று வாக்குறுதி கொடுத்த வைரத்தோடுகளை, அப்போது பண நெருக்கடியால் போடமுடியாமல் சாந்தி முகூர்த்தத்தில் போடுவதாக சம்பந்தி வீட்டாரிடம் உறுதி கூறியிருந்தார் அதற்குள், ஜட்ஜ் கொடுப்பதாகச் சொன்ன ஐயாயிரம் ரூபாயும் வந்து விடும் என நம்பியே அவர் அப்படிச் சொல்லியிருந்தார். சம்பவங்கள் இப்படி விபரீதமாக முடிந்து, கடைசியில் தன்மீது கொலைக் குற்றமே சாட்டப்படும் என்று அவர் கனவிலும் கருதவில்லை.

ஆகவே, மாப்பிள்ளை வீட்டாரும், வைரத்தோடு போடும் வரை பெண்ணும் தகப்பனேடேயிருக்கட்டும் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்கள் அதே சமயத்தில் அவருக்குக் கையில் விலங்கும்' விசாரணை முடியும்வரை காராக்கிருகத்தில் காவலில் இருக்கும் பாக்கியமும் கிடைத்தன. பணத்திமிரும், அதிகார மமதையும் எதைத்தான் செய்யாது?

ராமய்யருக்கு உறவினர்கள் யாருமே இந்த உலகில் கிடையாது என்று சொல்லலாம் ஆனால் அவருக்கு ஒரே ஒரு அக்காள் மாத்திரம் சிறுவயதிலேயே விதவையாகி, ஏதோ ஒரு பட்டிக்காட்டில், தொண்டு கிழமாக கணவன் வீட்டாரிடம் ஜீவனாம்சம் வாங்கிக்கொண்டு அடைத்துக்கிடந்தாள். கையில் விலங்குடன் சென்ற அவர், லக்ஷ்மியைப்பார்த்து கண்ணீருக்கிடையே, "கண்மணீ, நீ ஆத்தூருக்கு அருகில் உள்ள மயிலம்பட்டிக்குப்போ அங்கே மீனாக்ஷிப் பாட்டி என்று கேள் அவள் என் அக்கா அவள் கூட இருக்கிறாளோ, போய்விட்டாளோ தெரியாது இருந்தாலும் அவள் கணவன் வீட்டு மனுஷாள் ரொம்ப நல்லவர்கள். உனக்கு அங்கே ஆதரவு கிடைக்கும் என் விதி எப்படி முடிந்தாலும் சரி. நீ அங்கிருந்து உன் கணவனுக்குக் கடிதம் எழுது அவன் மனமாவது கரையாதா? நான் போய் வருகிறேன், நீ தீர்க்க சுமங்கலியாய் இருக்கவேண்டும் அதுவே என் பிரார்த்தனை," என்று அவசரம் அவசரமாகச் சொல்லிவிட்டு போலீசாருடன் நகர்ந்தார்

லக்ஷ்மியின் கண்கள் இருண்டன; தலை சுழன்றது; மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள். வானமும் இருண்டது, உலகுக்கெல்லாம் தன் தண் கதிர்களைப் பால்போலப் பொழியும் சந்திரனையும். அடர்ந்த மேகங்கள் தன் கருமையினால் மறைத்து அண்டம் அதிர 'இடித்துச் சிரித்தன! ராமய்யர் கைவிலங்குகளுடன் அவற்றிற்கடியே சென்றுகொண்டிருந்தார் காவலுடன்!

வழக்கு நடந்தது மூன்று மாதங்கள் நடந்தது. ராமய்யர் சார்பில் வக்கீலோ, சாட்சிகளோ கிடையாது; அவர் தம் மனச் சாட்சியையே முன் வைத்துப் பேசினார் முடிவில், நீதிபதி தம் தீர்ப்பில். "பிரதிவாதி காலம் சென்ற வாதியின் தந்தையை, வெள்ளைக் காகிதத்தில் ஏமாற்றிக் கையெழுத்து வாங்கிக் கொண்ட பிறகு, கழுத்தை நெறித்துக் கொல்ல ஒருவித உத்தேசமும் இருந்திருக்க முடியாது. ஏனெனில் அவரே இரண்டொரு தினங்களில் இறந்து விடுவார் என்று அவரது டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவரை பிரதிவாதி காத்திருந்து, அவர் இறந்த பிறகு மேற்படி தொகையை அவர் வாதியிடம் வசூலிக்க முடியும், ஆகையால், துர் எண்ணத்துடன் அவரிடம் ஏதோ பொய் சொல்லிக் கையெழுத்து வாங்கியிருக்கலாம் என்று நான் சந்தேகப்படுகிறேன். கொலைக்குற்றத்திலிருந்து அவரை விடுதலை செய்கிறேன் ஆனால் பொய் தஸ்தாவேஜை சிருஷ்டித்த குற்றத்திற்காக அவருக்கு இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்,"—என்று எழுதிவிட்டார்.

ராமய்யரும் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்பட்டார் பலத்த இடி, வானத்திலிருந்த மேக மண்டலத்திடையிலிருந்து முழக்கமிட்டது மின்னலோ கண்ணைப் பறித்தது. நீதிபதியின் கண்களை அது ஓரளவு குருடாக்கிற்று! சப் இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் கண்களை முன்னமேயே அது அந்தகனாக்கி விட்டது என்றே சொல்லலாம்?

பின்னால் வந்த இரண்டாண்டுகளில் ராமய்யருக்கு ஒவ்வொரு நாளும் நாளொரு கம்பியும் பொழுதொரு கூழுமாகக் கழிந்தது. லக்ஷ்மிக்கு, மயிலப்பட்டி கிராமத்தில் கிழ அத்தையுடன் அலக்ஷியம் செய்துவிட்ட கணவனையும், அன்புக்குரிய தந்தையையும் மாறி மாறி நினைந்து கண்ணீரில் கழிந்தது. சந்தானமோ வெற்றிப் பெருமிதத்துடன் சமூகத்தில்தான் ஒரு பெரிய மனிதன் என்ற ஹோதாவுடன், சர்க்கிள் இன்ஸ்பெக்டராக உயர்த்தப்பட்டான் தவறு செய்பவன் தப்புவதும், நிரபராதி அல்லலுறுவதும்தானே இன்றைய உலகில் நாம் காண்பது?



விடுதலை நாளும் வந்தது ராமய்யர் வேலூர் மத்தியசிறைச்சாலையிலிருந்து வெளியேறி. எப்படியோ ரயிலேறி. ஆத்தூரையடைந்து, அங்கிருந்து மயிலம்பட்டிக்கு ஐந்து மைல் நடந்துவிட்டார் தன் அருமைப் புதல்வியைக் காணவேண்டுமென்ற துடிப்பு அவரது கால்களுக்கு உரத்தை ஊட்டியது மயிலம்பட்டியை அவர் அடையும்போது இருட்டிவிட்டது சத்திரத்துத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு முதலில் அங்கு யாரையாவது தன் மகளைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளலாமென்று நினைத்து அங்கு இருந்த பேஷ்காரைக் கேட்டார். அவர், அந்தப் பெண் அத்தை போன வருஷம் இறந்துவிட்டதால், சென்னையிலுள்ள அநாதாஸ்ரமத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டதாகவும், அவள் கணவன் எங்கோ டாக்டர் வேலை பார்ப்பதாகவும் சொன்னார் பசிக்கிறது என்று கேட்க, சத்திரத்தில் தானம் கிடையாது என்று சொல்லிவிட்டார், பேஷ்கார்.

மறுநாள் விடிவதற்குள் நடுக்கும் குளிரிலும் காற்றிலும் ஒட்டிய வயிறுடன் உலர்ந்துகிடந்த அவரது உடலினின்றும், ஆவி விடைபெற்றுக்கொண்டது தன் வாஞ்சையின் பிம்பமாகிய லக்ஷ்மியை அவர் ஹிருதயத்திலிருந்து பிரிக்க வலிமைபொருந்திய யமனாலும் முடியவில்லைபோலும்! ஏனெனில் அவரது வாயுதடுகளின் தோற்றம் லக்ஷ்மி என்று உச்சரித்துவிட்டு மூடியதுபோன்று தென்பட்டது சந்தானமய்யருக்கு.

* * * *

சந்தானமய்யர் அச்சமயம் ஆத்தூரில் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்தார் வண்டியில் படுத்தவாறே இறந்தவரிடமிருந்து கைப்பற்றிய கடிதத்தை அதன் சிறு விளக்கொளியில் படிக்கத்தொடங்கினார். அதில், எழுதியிருந்ததாவது:—

'என் குழந்தை லக்ஷ்மி வைரத்தோடும் காதுமாக அவள் கணவனுடன் கை கோத்து நிற்க, அவர்கள் அருகே என் வளர்பபுக் குமாரன் சந்தானம் புன்னகையுடன் குடும்ப சகிதம் நின்று ஒரு புகைப்படம் எடுத்து அதை நான் எப்போதும் பார்த்து மகிழும் நாள் எப்போது வரும்?என்று மாத்திரம் எழுதப்பட்டிருந்தது அதைப் படித்த சந்தானமய்யருக்கு தன் துரோகம் தன் மனச்சாட்சியை எரிக்க அவ்வளவு தங்கமான இருதயம் படைத்த மனிதனுடன் மன்றாடி மன்னிப்புக்கோர அவரும் இறந்துவிட்டாரே என்ற பச்சாத்தாபம் நெஞ்சையறுக்க, இன்னது செய்வதென்றே தெரியாமல் தன்வசமிழந்தார்.

மெல்ல ஊர்ந்து வண்டியும் இரவு ஒன்பது மணிக்கு ஆத்தூர் ஆஸ்பத்திரியை அடைந்தது 'அவசரக்கேஸ் பிரேத பரிசோதனை, என்றதும் அங்கிருந்த இளம் டாக்டரும் எல்லா உபகரணங்களுடனும் ஓடிவந்தார், அருகே சந்தானமும் நின்றார் பளிச்சென்ற விளக்கொளியில் பிணத்தின் முகத்தைப் பார்த்த டாக்டர் 'ஆ'வென்றலறிவிட்டார் சந்தானம் பிரமித்துவிட்டார்.

'என் மாமனார் ஸார்' என்றார் டாக்டர்

'நீரா வைரத்தோடு கேட்டுப் பிடிவாதம் செய்தது? என்றார் சந்தானம்.'

'நானில்லை என் அம்மா. பாவம் அவளும் இறந்து இன்றைக்கு ஒரு மாதமாகிறது என்றார் டாக்டர். அவரும் சந்தானத்தை இன்னாரென்று உணர்ந்துகொண்டு, 'உம்மால்தானய்யா இவர் ஜெயில் வாசம் செய்ய நேரிட்டது என்று ஆத்திரத்துடன் கூறவே மன்னித்து விடுங்கள் நான் நன்றிகெட்டவன்' என்று கதறி டாக்டர் முன்னிலையில் சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டார் சந்தானம்.

'இவருடைய கஷ்டங்களுக்கு நானும் காரணம்தான்,' என்று டாக்டர் கூறவே, இருவரும் ஒருவருக்கொருவர் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டனர்

சில நாட்களில், லக்ஷ்மியின் இருப்பிடத்தை சத்திரத்து பேஷ்கார் மூலமாக அறிந்து கொண்டு, சந்தானமய்யர் வாங்கிக் கொடுத்த வைரத்தோடுகளோடு டாக்டர் அவளது கைத்தலங்களை அன்புடனும் ஆர்வத்துடனும் பற்றினார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

—

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது
சங்கர் பிராண்ட்
சூலம் மார்க்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்
சர்க்கார் சோதனைச்சாலையின் நற்சாட்சி பத்திரம் பெற்றது!
Govt Test House .. Alipore
TEST CERTIFICATE
No CT-PC-1260 dated 1st & 6th Dec 1949
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்.
தொழிற்சாலை: தாழையூத்து, திருநெல்வேலி ஜில்லா.
ரிஜிஸ்டர்ட்ஆபீஸ்: 11-12, ஸெகண்ட்லைன் பீச், மதராஸ் 1.

# அதிர்ஷ்டப்புயல்!

—கோமதிஸ்வாமிநாதன்—

டைரக்டர் ரத்தினசாமி: சினிமா உலகிலிருந்து பல வந்தமாக ஓய்வுகொடுக்கப்பட்டு மாஜி டைரக்டராக்கப்பட்டவர்.

சுந்தரி:—ரத்தினசாமியின் மனைவி.

சேகர்:—ரத்தினசாமியின் நண்பர்.

## 1

[பிற்பகல் ரத்தினசாமி ஈஸிசேரில் படுத்தவாறு ஏதோ ஒரு பத்திரிகையை தலைகீழாகப் பிடித்துக் கொண்டு உற்று கவனித்துக் கொண்டிருக்கிறார். சுந்தரி வருகிறாள்]

சுந்தரி:—[பயந்துபோய்] ஐயய்யோ! உங்களுக்கு உடம்பு சரியில்லையா? பேப்பரை தலைகீழாகவச்சு படிக்கிறீங்களே! டாக்டரைக் கூப்பிடக்கூட ஆள் இல்லையே!... அட ஈச்வரா!

ரத்தினசாமி:—(பேப்பரை விலக்கிக்கொண்டு) ஏய்! ஏன் இப்படி கூச்சல் போடறே! எனக்கு பைத்தியம் பிடிச்சுடுத்துன்னு நினைச்சுட்டியா?

சுந்தரி:—ஐயய்யோ! நான் நினைச்சது சரியாப்போச்சு! பைத்தியங்கள்தான், நான் பைத்தியமில்லே! நான் பைத்தியமில்லே! என்று சொல்லுவாங்க! ஆண்டவனே! அவர் கையிலே காசு பணம்தானில்லை. புத்தியுமா இப்படி திடீர்னு இல்லாம போகணும்?

ரத்தினசாமி:—ஏய் காட்டுப்புறம்! உனக்குத்தான் மூளை சரியாக இல்லை! இந்த பேப்பர்லே ஒரு சினிமாஸ்டார் படத்தை போட்டிருக்கான். அந்த படத்தை எந்த கோணத்திலிருந்து பார்த்தால் கவர்ச்சிகரமாக இருக்கும் ஏதாவது படத்திற்கு புக் பண்ணினால் படம் 'பாக்ஸ் ஆபீஸ் ஹிட்' ஆக இருக்குமா என்று யோசிக்கிறேன்.

சுந்தரி:—நம்ப பிழைப்பேதான் எசக் கோணலா இருக்கே! இந்த லக்ஷணத்திலே எவளையோ போய் தலைகீழாய் நிறுத்தி வைத்து கழுத்தை யறுக்க வேண்டாம். நீங்க எப்படி கழுத்தை ஒடிச்சுப் பார்த்து படம் எடுத்தாலும்தான் பொது ஜனங்கள் கண்டிப்பாய் பார்க்மாட்டேங்கராங்களே!

ரத்தினசாமி:—பொது ஜனமாம் பொது ஜனம்! எல்லாம் ஒரே தவளைக் கூட்டம்!! ஆட்டு மந்தை!

சுந்தரி:—மற்றப் பேர் யாரும் 'பொது ஜனம்' என்று குறிப்பிடறபோது அதிலே நீங்களும் அடங்கியிருக்கீங்க என்பதை மறந்துட்டீங்களா? நீங்களும் ஆட்டு மூளையோட தான் ஒரே மாதிரி ஐந்தாறு படங்களைப் பிடித்துத் தள்ளினீர்கள் ஒன்றாவது சேர்ந்தாற்போல் மூன்று நாள் ஓடவில்லை.

ரத்தினசாமி:—ஒரு பயலுக்காவது என் 'ஐடியா'க்களை ரசிக்கத் தெரியவில்லை! ஹாலிவுட் டைரக்டர்கள்கூட என்னிடம் பிச்சை வாங்க வேண்டும்!

சுந்தரி:—போதும்! போதும்! நாமே இப்போ பிச்சை வாங்கர நிலைமையிலேதானிருக்கிறோம்! நம்மிடம் ஒருவரும் பிச்சைக்கு வரவேண்டாம்!...வீட்டிலே ஒரு சாமான் கிடையாது யாரையாவது போய் பார்த்து பணத்திற்கு ஏதாவது ஒருவழி பாருங்கள்! யமகிங்கரன் மாதிரி இப்போது வீட்டுக்காரன் வந்து நிற்கப்போறான்!

ரத்தினசாமி:—மார்கண்டேயன்' படத்திற்கு யமனாக அவனை புக் பண்ணிவிட்டால் போகிறது!

சுந்தரி:—வயிற்றைப் பற்றி எறிகிறது உங்கள் ஹாஸ்யம்! இப்படித்தான் இருக்கிறது உங்கள் படமும்!...வெளியிலே போய் பணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்?

ரத்தினசாமி:—இந்த டைரக்டர் ரத்தினசாமி ஒருத்தர் முன்னாலேயும் போய் பல்லை காண்பித்துக்கொண்டு நிற்க மாட்டார்! அதிருஷ்டம் அவரைத் தேடி வரும்

சுந்தரி:—தேடிண்டு வந்து வீட்டு விலாசம் தெரியாமல் திரும்பிப் போகும்.

(வாசலில் மோட்டார் ஹாரன் சப்தம் கேட்கிறது)

ரத்தினசாமி:—உள்ளே போ! காளி மாதிரி நிற்காதே! யாரோ பட முதலாளிதான் என்னை தேடிண்டு வந்திருக்காப் போலிருக்கு! அதிருஷ்டம் இப்படித்தான் வரும்.

[சுந்தரி வாசல் பக்கம் போய் பார்த்து வருகிறாள்]

சுந்தரி:—குப்பைத் தொட்டிக்கு அதிருஷ்டம்! கார்ப்பொரேஷன் குப்பை வண்டி மோட்டார், தொட்டிகளை சுத்தமாக்கிவிட்டுப் போகிறது!

ரத்தினசாமி:—சரி! சரி!

[போகிறார்கள்]

## 2

[இரண்டு நாட்களுக்குப் பிறகு]

சுந்தரி:—இப்படி சும்மா சிலைபோல உட்கார்ந்திருந்தா காலக்ஷேபம் எப்படி நடக்கும்?...கல்லுப்பிள்ளையாரா நீங்கள்? இரண்டு நாளா இப்படி உம் என்று இருப்பதைப் பார்த்தால் எனக்கு பயமாக இருக்கிறது! மூளை கீளை...

ரத்தினசாமி:—ஹோப்லெஸ்!...இந்த இடத்திலே டயலாக் எடுபடாது! சிலையோ! என் குரல் கேட்கவில்லையோ!' என்று பூரிகல்யாணி ராகத்தில் பிரமாதமாய் பாடணும்!

சுந்தரி:—அதுதான் உங்களைப்பார்த்து முகாரி ராகத்தில் பஞ்சப்பாட்டை பாடுகிறேனே!

ரத்தினசாமி:—நிறுத்து! நிறுத்து! கொஞ்சம்கூட பிரயோஜனமில்லை! ஆக்ஷன் போதாது! மூஞ்சியிலே எக்ஸ்பிரஷன் இல்லவே இல்லை! 'உங்களைப் பார்த்து' என்னுமிடத்தில் மூஞ்சியிலே அப்படியே பாவம் ததும்ப வேண்டாமா?

சுந்தரி:—அடராமா! என்ன ஒரு பைத்தியத்தின் பெண்டாட்டி என்றுஎல்லோரும் சொல்லுவதற்கல்லவா விதி ஆளாக்கிவிட்டது....இதோ பாருங்கோ! உங்களுக்கு வாழ்க்கைப்பட்ட பாவத்திற்கே நூற்றெட்டு தடவை கங்கையில் மூழ்கி எழுந்திருக்கணும்! பாவமாம்! புண்ணியமாம்! ரேஷன் அரிசி வாங்கவேண்டும்! கையிலே ஒரு தம்பிடிகூட கிடையாது என்டது நினைவிருக்கட்டும்.... ஆண்டவனே! ஆண்டவனே!

ரத்தினசாமி; (காதில் சரியாய் போட்டுக்கொள்ளாமல்) நோ! நோ! ஆண்டவனே என்கிற இடத்திலே பஞ்சமத்திலே எடுக்கக்கூடாது! ஷட்ஜமத்திலே எடுக்கணும்...எங்கே! முகாரியை லேசா இழுப்பார்ப்போம்



சுந்தரி:—உங்களுக்கு முத்திப்போச்சு! நீங்க எடுத்த படங்கள்தான் குட்டிச் சுவராய்ப்போனதென்றால் மூளையுமா அப்படி போகணும்?

ரத்தினசாமி:—இதோ பார் சுந்தரி! எதற்காக இப்படி அசோக வனத்திலுள்ள சீதையை பயமுறுத்தும் ராக்ஷசி போல் என்னைப் பாக்கிறாய்? 'சீதா வனவாசத்திலே உனக்குக்கூட அந்த வேஷத்தை கொடுத்திருக்கலாம்!

சுந்தரி:—வேஷம் போட்டுக்காமலேயே வனவாசம் போகும் நிலையில்தான் நாம் இருக்கிறோம்!

ரத்தினசாமி:—இதோ பார் சுந்தரி! நான் கலைக்காகவே பிறந்தவன் கலையை உத்தாரணம் பண்ணுவதுதான் என் நோக்கம். அது என் பிறப்புரிமை! காரியத்தைச் செய்யவேண்டியதுதான் நம் கடமையே தவிர அதன் முடிவைப் பற்றிக் கவலைப்பட நாம் யார்? கீதா ரகசியமே அதைத்தானே கூறுகிறது!

சுந்தரி:—அந்த கீதா ரகசியம் வயிற்றுப் பசி வியவகாரத்துடன் ஒத்து வராது! பசிக்கிறது என்று சொல்லிவிட்டு பேசாமல் உட்கார்ந்துவிட முடியாது!........என் வயிற்றெரிச்சலை இன்னும் கொட்டிக்கொள்ளாமல், சிநேகிதர்கள் யாரையாவது பார்த்து பணம் வாங்கி வாருங்கள்.

ரத்தினசாமி:—பேசாமலிரு! ராவணா பிலிம்ஸார் 'கும்பகர்ணனின் விழிப்பு' என்ற படத்தை எடுக்கப்போவதாக பேச்சு அடிபடுகிறது! டைரக்ஷன் பொறுப்பு என்னிடம்தான் வந்து சேரும் அதுவரை கொஞ்சம் பொறு

சுந்தரி:—உங்க கும்பகர்ணன் எழுந்து நின்று ஓடும் வரை நம் வயிறும் தூங்கும் என்று நம்புகிறீர்களா? நீங்கள் இதுவரை தயாரித்த படங்கள் தூங்குவது போதாதென்று கும்பகர்ணனை வேறு தயார் பண்ணி படுக்கப் போடப்போகிறீர்களாக்கும்?

ரத்தினசாமி:—அதிகப் பிரசங்கி! எதிர்த்துப் பேசுவது போதாதென்று என்னை இகழ்ச்சியாகவுமா பேசுகிறாய்?

[கையிலிருந்த புஸ்தகத்தை சுந்தரி மீது எறிகிறார் சுந்தரி அழ ஆரம்பிக்கிறாள்.]

ரத்தினசாமி:—(சற்று யோசித்து) சபாஷ்! சபாஷ்! இப்போ அழுத மாதிரி இன்னும் கொஞ்சம் அழ பார்ப்போம்! பிரமாதம்! பிரமாதம்! ஆஹா ஹா! சோகரசத்திற்கு பிரமாதமான எக்ஸ்பிரஷன் கொடுக்கிறாயே! எங்கே! இன்னும் கொஞ்சம் கார்வை கொடுத்து அழு! சவுண்டு ஓகே மானிட்டர்! இந்த ஸ்டைலிலே அந்த நல்லதங்காளில் நடித்த பீடை அழுதிருந்தால் எனக்கு என்னபேர் வந்திருக்கும் தெரியுமா?

சுந்தரி:—அழுமூஞ்சி அற்புதம் என்று பட்டம் கொடுத்திருப்பார்கள் உங்களுக்கு

[ரத்தினசாமியின் நண்பர் சேகர் வருகிறான்)

சேகர்:—அவள் அப்போது அழாத போனாலும் மொத்தத்திலே படம் இப்போ அழுதுண்டே தான் ஓடறது! ஐந்து ரூபாய்க்குமேலே ஒரு ஷோவிற்கு வசூலாக மாட்டேனென்கிறதாம்.

ரத்தினசாமி:—நோ! நோ! சிலோனிலே படம் ரொம்ப சக்ஸஸ்புல்லா ஓடறதாக கேள்விப்பட்டேனே!

சேகர்:—ஆமாம்! படத்துடன் போன ரெப்ரசென்டேடிவ் அங்கே ஜனங்கள் செய்த கலாட்டாவினால்பயந்துபோய் படத்தை கையிலெடுத்துக்கொண்டு அடுத்த ரயிலைப் பார்த்து ஓடிவிட்டானாம்? அது நல்ல ஓட்டமில்லையா?

ரத்தினசாமி:—அது கிடக்கட்டும்! எங்கே வந்தே? என்ன விசேஷம்?

சேகர்:—உங்களை ராவணா பிலிம்ஸ் முதலாளி பார்க்கணும் என்றார்.

ரத்தினசாமி:—சுந்தரி! பார்த்தாயா? அதிருஷ்டம் இவரைத் தேடிவரும் என்று சொன்னேனா இல்லையா? ராவணா பிலிம்ஸ் புரொடக்ஷன் என்றால் இந்த ரத்தினசாமி முத்திரை அதில் பதிந்தாகவேண்டும்! இந்ததடவை அவர்கிட்டே கராலா முப்பதினாயிரம்கேட்கபோகிறேன்! அதில் உனக்கு ஒரு வைர நெக்லேஸ்! எங்கே கொஞ்சம் சிரி! ... ஏன் சேகர்! "கும்பகர்ணன் விழிப்பு" விஷயமாகத்தானே என்னை பார்க்கவேண்டுமென்று சொன்னார்?

சேகர்:—அவர் கம்பெனியே தூங்கிப் போய்விட்டதே! மார்பியா இஞ்செக்ஷன் கொடுத்தாச்சு! இனிமே விழிப்பே கிடையாது ராவணா பிலிம்ஸ் இனிமேல் படத்தொழிலுக்கு பதிலா பப்படாத்தொழிலோ அப்பள வியாபாரமோதான் பண்ணவேணும்!........அவர் உங்களுக்கு எப்போதோ நூறு ரூபாய் கைமாற்று கொடுத்திருக்கிறாராம் அதை உடனே வாங்கிவரச் சொன்னார்!

ரத்தினசாமி:—என்ன! என்ன? படமில்லையா? பணம் வாங்கிக்கொண்டா வரச்சொன்னார்! ஐயய்யோ!

[தலையில் கைவைத்துக்கொண்டு சாய்கிறார்]

சுந்தரி:—அபார அதிருஷ்டம்! அதிருஷ்டம் காற்றாக அடிக்கவில்லை! புயலாகவே அடித்துவிட்டது!

சேகர்:—அடராமா! (போகிறார்கள்.)



100-ல் 80 பாம்பு தீண்டியதால் பயமடைந்து மூர்ச்சையானவைகளாக இருக்கும் மீதியில் 15% பாம்பு கடித்தும் விஷம் இறங்காததாயிருக்கலாம். 5% தந்தி கொடுத்த பிறகு தக்க வைத்திய சிகிச்சை செய்யப்பட்டவைகளாக இருக்கும்' என்று முடிவு கட்டினுன்.

ராமுவுக்குக்கோபம் வந்துவிட்டது. பாம்பு போலவே சீறினுன். முன்னைவிட வாக்கு வாதம் பலத்தது. இருவரும் பல பாம்புகளையும் சர்ப்பங்களையும் தங்கள் தர்க்கத்தில் வீசி எறிந்தார்கள் நடுநிசியில் இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தது எனக்கு பயமாகவே இருந்தது தூக்க மயக்கத்தில் எங்கு பார்த்தாலும் பாம்பாகவே எனக்குத் தோன்றியது அவர்கள் இருவருடைய பேச்சும் பாம்பின் சீறலைப் போலவே எனக்குத் தொனித்தது

தூங்கிவிட்டேனே என்னவோ திடீரென நிசப்தம் சுந்தரம், ராமு இருவரும் போய்விட்டார்கள் திண்ணையில் தூணில் சாய்ந்து தூங்கிவிட்ட நான் மெள்ள எழுந்து உள்ளே போனேன் நடுஇரவு வரையில் கிராமபோன் கேட்டுக்கொண்டிருந்த சிறுவர் பெரியோர் எல்லோரும் கால்மாடு தலைமாடாக தூங்கிக்கொண்டிருந்தார்கள்

கிராமபோன் மிஷினைப் பார்த்ததும் எனக்குக் கோபம் வந்தது பிளேட்டையும் எடுத்துவைக்காமல் மிஷினையும் மூடாமல் பயல்கள் தூங்கி விட்டார்கள் பாம்புபோலவே நெளிந்து பளபளவென்று தோன்றிய கிராமபோன் பிக் அப்ஸ் மடக்கி மிஷினை மூட அருகில் சென்றேன். அந்த பக்கம் புஸ்ஸென்று சீறி எழுந்தது.

உடல் நடுங்க அப்படியே நின்றுவிட்டேன். அந்த பிக்கபுடன் இணைந்து ஒரு பாம்பு—ஆம பாம்பு மிஷினிலிருந்த பிளேட்டை முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்தது.

பாடாத மகுடி பிளேட்டுக்கே பாம்பு வந்துவிட்டதே பிளேட்டு போட்டிருந்தால் என்ன கதியாயிருக்கும் என்று நினைத்து யாரையாவது எழுப்பலாமென்று சுற்றுமுற்றும் பார்த்தேன் என் மனைவியை எழுப்பிவிட்டால் எனக்குக் கொஞ்சம் தைரியம் வரும்.

அதற்குள் மிஷினுக்கு அருகில் படுத்துக்கொண்டிருந்த என் கடைசி மருமகன் ஏதோ உளறிக்கொண்டு புரண்டான் அவன் கால்கள் மிஷினில் மோத பிக்கப் திடீரென்று விழுந்தது. அந்தப் பாம்பும் கண்ணாடி விரியன் என்று நினைக்கிறேன். பிளேட்டின் மேல் விழுந்து சுற்ற ஆரம்பித்தது

உடனே பிளேட் பாட ஆரம்பித்துவிட்டது அப்படியே அந்த மகுடி இசையில் பாம்பைவிட நான் அதிகமாக மயங்கிவிட்டேன்.

"என்னடா இழவு இந்த வேளையிலே 'பிளேட்டு' என்று இரைந்து கொண்டே பாட்டி எழுந்துவிட்டாள். பையன்களும் எழுந்து விட்டார்கள். ஒரே குழப்பம் என் மனைவிதான் எல்லோரையும் அடக்கினுள்

'இதென்ன விளையாட்டு வேண்டியிருக்கு...குழந்தை மாதிரி" என்ருள்

இப்பொழுது நான் தைரியத்துடன் மிஷினை நெருங்கிப் பார்த்தேன் பாம்பைக் காணவில்லை கையில் ஒரு பிளேட்வைத்திருந்தேன் அது எப்படி என் கையில் வந்தது என்று எனக்கே தெரியாது அது 'ஆடு பாம்பே என்ற பிளேட்

எல்லாரும் தூங்குகிறபோது பிளேட் என்ன வேண்டியிருக்கு என்று என் மனைவி மீண்டும் கண்டித்தாள்.

பாம்பு நிஜமாக வந்தது என்று சொன்னுல் இவர்கள் நம்புவார்களா? என் மனத்தில் ஏற்பட்ட பீதிதானென்று முடிவு கட்டிவிடுவார்கள். யார்தான் நம்புவார்கள்? நானே நம்பவில்லை!


## சிறந்த கூந்தல் உணவு



உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

**காமினியா ஆயில்** (ரிஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர். இன்றே பரிக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்

**ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)**

இணையற்ற வாசனை. நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.



## ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்



கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்காலகேள்விகட்கு ரூ.2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூபா 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ 35. ஜாதகம் கணிக்க ரூபா 3. ஒரு தசாவிற்கு புக்தி வாரியாக எழுத ரூ.12

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது

★

மானேஜர்

**வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,**

**தெப்பக்குளம், P. O. (தென் இந்தியா)**




# கலா மண்டபம்

<u>நமது பம்பாய்க் கடிதம்</u>

## அழகி நஸீம்

☆

"அழகு ராணி" என்று சொல்லப்படும் நஸீம் என்னும் சினிமா நக்ஷத்திரத்தை சென்ற வாரம் நான் தற்செயலாக பார்க்க நேர்ந்தது கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், அவளிடம் பேச்சுக் கொடுத்தேன் அவளும், மிகவும் மலர்ச்சியான முகத்துடன் பேசத் தொடங்கினுள்.

நஸீம், அவளுடைய யௌவனகாலத்தில், உண்மையாகவே, 'அழகு ராணி' தான். பம்பாயில், அவளுக்கு மிஞ்சிய அழகுள்ளவர்கள் வசிவருஷங்களுக்கு முன், இல்லாமலிருந்தது அவளுக்கு இப்பொழுது30-வயது ஆகியும் அவளுடைய அழகு இன்னும் போகவில்லை என்றே சொல்ல வேண்டும்

"ஒரு நடிகைக்கு முக்கியமாக அழகு தேவை அழ கில்லாதவர்கள் நடிகையாக முடியாது. ஒரு நடிகை, மிகவும் அழகாகயிருந்தால், அவள் சில சமயங்களில் சரியாக நடிக்காவிட்டாலும், அவளைத்தான் சினிமா விசிறிகள் மிகவும் விரும்புவார்கள். அழகாய்ப் பிறப்பதற்கு கொடுத்துவைக்க வேண்டும் ஆகையால், ஒவ்வொரு நடிகையும், அவர்களின் அழகை, மிகவும் ஜாக்கிரதையாக காப்பாற்ற வேண்டும்", என்று ஒரே மூச்சில் என்னிடம் சொன்னுள்.

நஸீம். வீட்டில் சமைத்துக்கொண்டு மற்ற வேலைகளையும் செய்துகொண்டு, குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு கஷ்டப்படுவதைவிட, சினிமாவில் நடித்துக் கொண்டிருப்பது சுலபம் தான் என்று கருதுகிருள் ஆனுல், தற்சமயம், அனேக நடிக நடிகைகள் ஒரே சமயத்தில் அனேக படங்களில் நடிப்பதை அவள் ஆமோதிக்கவில்லை. ஒரே சமயத்தில் ஆறு அல்லது ஏழு படங்களில், நடிகைகள் நடித்தால், அவர்களின் தேகாரோக்கியம் கெட்டுப்போவதுமல்லாமல், அவர்களின் பெயருக்கே ஹானி ஏற்படுமென்று நஸீம் கருதுகிருள்.

மற்ற நடிகைகளைப்போல், நஸீம் அநேக படங்களில் ஒரே சமயத்தில் நடிப்பதில்லை. மிஞ்ஜி மிஞ்ஜிபோனுல் ஒரு வருஷத்தில் இரண்டு படங்களில் நடித்தால், அதுவே அதிகம் கண்ட பட முதலாளியின் படங்களில் நஸீம் நடிப்பதில்லை. தான் நடிக்கும் பாத்திரங்களை அவள் மிகவும் ஜாக்கிரதையாக தேர்ந்தெடுக்கிருள்

நஸீமுடைய சொந்த பெயர் ரோஷன் ஆராபீகம் அவளுக்கு நஸீம் என்னும் பெயர், கீர்த்திபெற்ற டைரக்டரும் நடிகருமான ஷோரப் மோடி கொடுத்தது அவள், ஒரு உயர்ந்த முஸ்லிம் வம்சத்தில், டெல்லியில், ஜனவரி 2-ம் தேதி, 1920 வருஷம் பிறந்தாள். அங்கு பத்தாம் வகுப்புவரையில்படித்தாள். அவளுக்கு சிறு வயதிலிருந்தே சினிமாவில்சேர்ந்து நடிக்கவேண்டுமென்று ஒரு அபார ஆசையிருந்தது அவளுடைய தந்தை, அவளுடைய எட்டாம் வயதில் இறந்தவுடன், தன் தாயாருடன், பம்பாய்க்கு வந்து சேர்ந்தாள் ஒரு உபாத்தியாயரின் உதவியால், நல்ல சங்கீதமும், நடனமும் பயின்ருள் இந்த உபாத்தியாயர், இவளுடைய நடிப்புத் திறமையைக் கண்டு அவருடைய நண்பரான ஷோரப் மோடியிடம், அவளை அறிமுகப்படுத்திவிட்டார். அவ்வளவுதான். அவள் சினிமாவில் சேர்ந்ததிலிருந்து, நக்ஷத்திரமாக திகழ ஆரம்பித்துவிட்டாள்.



அழகி நஸீம்

அவளுடைய முதல் படம் மினர்வாவின் 'ஹேம்லெட்' இது 14வருஷங்களுக்குமுன் பிடிக்கப்பட்டது. அவள் இதுவரையில் 25 படங்களுக்குமேல் நடித்திருக்கிருள். இவளுடைய நடிப்புத் திறமை, 'புகார்' என்னும்படத்தில் மிகவும் சிறப்பாகயிருந்தது தற்சமயம், நஸீம், 'ஷீஷ் மஹல்' 'தர்பார்' என்னும் இரண்டு படங்களில் நடித்து வருகிருள்.

—தி. மா ராமசந்திரன்

உலக நாடக மேடை

# ரோமாபுரியில் நாடகம்

(சக்திதாஸன் சுப்ரமண்யம்)

கிரீஸ், ரோம் ஆகிய இரண்டும் மிகப் புராதன நாடுகள்தான் இருந்தாலும் கிரீஸ் தேசத்திலே நாடகக்கலையானது எவ்வளவு உன்னதமாக வளர்ந்ததோ அப்படி ரோமாபுரியில் வளரவில்லை. ரோமாபுரி மக்கள் சாம்ராஜ்ய வேட்டையில் கவனம் செலுத்தினார்கள்; கலை வளர்ச்சியில் அவ்வளவாக் கவனம்செலுத்தவில்லை.

புராதன ரோமாபுரியில் வருஷம் மும்முறை நாடகம் நடக்கும். தியேட்டர், கிரீஸில் எப்படியிருந்ததோ அதே 'காப்பி' தான். ஆனால் ஒரே ஒரு மாறுதல்! வேஷம் போட்டுக்கொள்கிற 'கிரீன் ரூம்' கூரையை நடிப்பதற்குரிய 'ஸ்டேஜ்!' மேடையாக உபயோகித்தார்கள்.


அந்தக் காலத்திலே ரோமாபுரியிலே அடிமைகள் உண்டு. இந்த அடிமைகள்தான் நடிகர்கள் கண்யமுள்ள பெரிய மனிதர்கள் இந்த நாடகங்களுக்குப் போகமாட்டார்கள் நாடகத்துக்கோ நடிகர்களுக்கோ அந்த நாளில் ரோமாபுரியில் கௌரவமான அந்தஸ்து இடையாது. நடிகன் ஒருவன் செத்துப்போனால் மத குருக்கள் அவனுக்கு ஈமச்சடங்கு செய்யமாட்டார்கள். நாடகக் கொட்டகைக்குள் செல்கிறவர்களும் நாடகத்தில் நடிப்பவர்களும் மிகக் கேவலமானவர்கள் என்று கருதப்பட்டார்கள்.

பகல் நேரத்திலே சாப்பாட்டுக்கு முன்போ, பின்போ நாடகம் நடிக்கப்படும். சாதாரணமாக ஒரு நாடகம் இரண்டு மணி நேரம் நடக்கும் நடிகர்கள் கிரேக்கர்களைப்போல் உடுத்திக்கொண்டு வருவார்கள். பெண் வேஷங்களைச் சிறுவர்கள் ஏற்று நடிப்பார்கள்.

சரியான புல் வெளியிலே மரத்தினாலே ஒரு மேடை கட்டப்பட்டிருக்கும். நடிகர்கள் இந்த மேடையின் மீது நடிப்பார்கள். நாடகம் பார்க்க வருகிறவர்கள் தரையில் உட்கார்ந்து பார்ப்பார்கள். இல்லாவிட்டால் நம்ம ஊரிலே தெருக்கூத்து பார்க்கப் போகிறவர்கள் கையுடன் ஒரு நாற்காலியும் எடுத்துக்கொண்டு போவது போல உட்காருவதற்கு ஏதாவது கொண்டுபோவார்கள்.

'நாடகம் பார்க்க வருகிற மகாஜனங்கள் எப்பொழுதுபார்த்தாலும் சப்தம் போட்டுக்கொண்டும் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டும் இருப்பார்கள் நாடகம் நடந்துகொண்டிருக்கும்போது 'விஸில்' அடிப்பதும் 'உஸ்' என்பதும் நம்ப ஊருக்கு மாத்திரம் சொந்தம் என்று நினைக்கவேண்டாம். ரோமாபுரி மகாஜனங்களும் அதிலே தேர்ந்த ரஸிகர்கள்தான்.

கி. மு. 55-ல், ரோமாபுரியில் கிரீக் தியேட்டரைப்போல ஒரு தியேட்டர் கல்லால் கட்டப்பட்டது. சுமார் பதினேழாயிரம் ஜனங்கள் உட்காருவதற்கு வசதியுடனிருந்தது. கிறிஸ்தவ சகாப்தம் தோன்றுவதற்குப் பதின்மூன்று வருஷங்கள் முன்பு மேலே மூடப்பட்ட தியேட்டர்கள் தோன்றின.



மியூஸிகல் பிக்சர்ஸ் 'ஜாதூ'வில்' நளினி ஜயவந்தின் பதக்கத்தைப் பிடிக்கிறார் காதலன் சுரேஷ்





'நை பாஸ்' என்ற ஹிந்திப் படத்தில் மிகத் திறம்பட நடிக்கும் கௌஸல்யா.

# சினிமா பார்ப்பவர்கள்

'பைராகி'


படம் பிடிப்பதிலிருந்து அது திரையிடப்படும் தியேட்டர் வரையில் படம், படத்தின் முதலாளி, டைரக்டர், நடிகர், தியேட்டர் முதலிய எல்லாரையும்பற்றி இந்தப் பகுதியில் எழுதப்பட்டுவிட்டது ஆனால், சினிமா பார்க்கச் செல்லுபவர்களைப்பற்றி இதுவரை ஒன்றும் எழுதப்படவேயில்லை.

ஒரு புதுப் படம் திரையிடப்பட்டால், அதை முதலில் பார்த்துவிட வேண்டுமென்று ஒவ்வொருவருக்கும் ஆவலாய்த்தான் இருக்கும் அந்தப் படம் நல்லதோ கெட்டதோ ஒரு சில வாரங்கள் ஓடுவது நிச்சயம். அப்படியிருக்கையில் நாற்றுக் கணக்கில் ஜனங்கள் முண்டியடித்துக்கொண்டு. மணிக் கணக்கில் வேர்க்க விறுவிறுக்க 'கியூ'வில் வெயிலில் நின்றுகொண்டு டிக்கட்டுக்காக காத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட எல்லோருக்கும் டிக்கட்டு கிடைத்துவிடும் என்று சொல்வதற்கில்லை இப்படிச் செய்வதால்தான் 'பிளாக் மார்க்கட்டுக்காரர்களுக்கு கொண்டாட்டம் ஏற்பட்டு, டிக்கட்டுகளை முன்னதாகவே வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள் ஜனங்களும் தங்கள் ஆவல் மிகுதியால் அதிக விலை கொடுத்து டிக்கட்டு வாங்கி சினிமா பார்க்கிறார்கள் பொது ஜனங்களே மறைமுகமாய் இவ்விதம் செய்தால், கருப்பு மார்கட்டை சர்க்கார் எவ்விதம் ஒழிக்க முடியும்?

தியேட்டருக்குள் சென்றுவிட்டால் தாங்க முடியாத கூட்டம் ஒருபுறம் பெரியவர்கள் சப்தம் மற்றொரு புறம் கைக்குழந்தைகளின் அலறல் பேசுவதும், பாடுவதும் சரியாகக் காதில் விழுவதில்லை இந்த சப்தத்தின் இடையே நாம் எவ்வாறு சினிமாவை ரசிக்க முடியும்? படம் சில தினங்கள் ஓடி, கூட்டம் சற்று குறைந்ததும் போவது என்று வைத்துக்கொண்டால்தான் சினிமா பார்ப்பவர்களாகிய நமக்கு சௌகரியமாயிருக்கும்.

படம் நடந்துகொண்டிருக்கையில் ஒருவருக்கொருவர் குசலப் பிரச்னம் விசாரித்துக் கொள்வது, திரையில் காணப்படும் காட்சிகளைப்பற்றியோ, கதையின் போக்கைப்பற்றியோ சம்பாஷிப்பது முதலியவற்றால் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு எவ்வளவு அசௌகரியம் ஏற்படுகிறது என்பதை உணருவதே இல்லை.

முன் சீட்டில் பெண்கள் உட்கார்ந்திருந்தால், பின் சீட்டில் உட்கார்ந்திருப்பவர் தவறுதலாக (அல்லது விஷமத்துக்காக!) காலை முன்னே நீட்டுவதன் மூலம் அநேக சமயங்களில் பெரிய சண்டையில் முடிவடைகிறது.



டயானுலின்: பியானோ வாசித்துக்கொண்டிருந்த இவர் ஒரே வருஷத்தில் நாலு படங்களில் நடித்து இப்பொழுது அமெரிக்காவின் மிகப் பிரபல நடிகையாகி விட்டார்.

காசைக் கொடுத்து டிக்கட்டை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டால் தங்கள் இஷ்டப்படி எதுவேண்டுமானாலும் செய்யலாமென்று ஒரு சிலர் நினைத்து விடுகிறார்கள். உட்கார்ந்திருக்கும் நாற்காலிக்கு அடியிலேயே வெற்றிலைப் பாக்கு எச்சிலைத் துப்புவது. போன்ற ஆபாசச் செய்கையால், அடுத்த காட்சிக்கு வந்து அதே இடத்தில் உட்கார நேரிடும் ஆசாமிக்கு எவ்வளவு அருவருப்பாய் இருக்கும். என்பதை சற்று யோசித்துப் பார்த்து, துப்புவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பிரத்தியேக தொட்டியில் துப்புவதுதான் முறையாகும்

தரையில் உட்கார்ந்திருப்பவர்கள் சீட்டியடித்து சப்தம் செய்வது, பெரும்பாலும் தமிழ் படங்கள் திரையிடப்படும் தியேட்டர்களில்தான் அதிகம் காணப்படுகிறது. கண்டோன்மெண்டு போன்ற தியேட்டர்களில் ஆங்கிலப் படம் நடக்குமிடத்தில், இவ்வித ஆபாசங்களும், எச்சிலைக் கண்ட இடத்தில் துப்புவதும், சீட்டியடிப்பதும் நடப்பதே இல்லை நாம் அந்தத் தியேட்டர்களுக்குச் சென்றாலும் நல்ல முறையில்தான் நடந்துகொள்ளுகிறோம் தமிழ்ப் படங்கள் நடக்கும் தியேட்டர்களிலும் நாம் ஏன் அவ்விதம் நடந்து கொள்ளக்கூடாது?

இதையெல்லாம் நன்குணர்ந்து பிறரையும் நம்மைப்போல் பாவித்து தங்களால் எவ்விதத்திலும் மற்றவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வண்ணம் நடந்துகொள்வது, சினிமா பார்க்கச் செல்லும் ஒவ்வொருவரின் கடமையாகும்.



# வீரமணி

பூ-ரா

ஆறுமுகத்தைச் சொல்லக் குற்றமேதுமில்லை அன்று காலையில் வீட்டிலிருந்து கிளம்பும்போதே தன் மனைவி காத்தாயியுடன் பிரமாதமாகச் சண்டை போட்டுவிட்டு, கோபத்தில் பழையதுகூடச் சாப்பிடாமல் வந்துவிட்டான் தெருவைத் தாண்டுவதற்கு முன் அவன் கோபம் தணிந்துவிட்டது ஆனால் பசி மட்டும் தணியவில்லை ஒரு பிடித்துண்டாவது கைவசமிருந்தால் பசியைப் பொருட்படுத்தியிருக்க மாட்டான் அவன் பீடிக்காக சட்டைப்பைக்குள் ஒதுக்கி வைத்திருந்த இரண்டேகாலணா சில்லரையை காத்தாயி முதல் நாளிரவே துடைத்துவிட்டாள் அந்தச் சண்டையின் மூலகாரணமே இந்தச் சில்லரை விஷயம்தான் தனக்குத்தானே அவன் செய்துகொண்ட வேதாந்த உபதேசங்களும் உற்சாகமூட்டும் வகையில் அவ்வளவாகப் பலன் தரவில்லை எனவே தவிர்க்க முடியாத நிர்பந்த நிலைமையில் ஆபீஸ் மாடிப்படிசுக்கடியில் சற்றே மறைந்துகொண்டு தெர்மாஸ்ப்ளாஸ்'கின் மூடியைத் திறந்தான்

அது காஷியர் வீரமணியின் ப்ளாஸ்க் வீரமணி அவனை ஹோட்டலுக்குப்போய் ஒரு கப் காப்பிவாங்கி வரச்சொல்லி அனுப்பியிருந்தான் வழியெல்லாம் மனச்சாட்சியுடன் போராடிக்கொண்டே வந்த ஆறுமுகம் கடைசியில் சபலத்திற்குப் பணிந்துவிட்டான் 'இந்தச் சூடான காப்பியில் ஒரே ஒருவாய் சாப்பிட்டாலென்ன?' என்று எண்ணினான் அவனும் கடைசியில் ஓர் மனிதன்தானே?

ஆனால் ஆறுமுகத்தின்வாய் ஒன்றும் அத்தனை சிறிதல்ல அதை நிரப்பிவிட்டுப் பார்க்கும்போது ப்ளாஸ்க் கிட்டத்தட்ட காலியாயிருந்தது இப்போது வீரமணிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டு நின்றான் அவன்.

'அடே ஆறுமுகம்!' என்று யாரோ அதட்டவே அலறியடித்துக்கொண்டு திரும்பினான் அவன் மீசையில் வழிந்திருந்த சில காப்பித் துளிகள் தரையிற் சிந்தின மானேஜரின் காரியதரிசியான மிஸ் சுலோசனா அங்கு நின்றாள் ஒருபுறம் நகைப்பும் மறுபுறம் கோபமுமாக அவனை ஏற இறங்க நோக்கிவிட்டு. சுத்த அல்பப் பயலடா நீ என்று அவள் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

'இல்லிங்க...... என்று பல்லையிளித்துக்கொண்டு அவன் திணறினான் அந்த இடத்துக்கு யாரும் வரக்கூடுமென்று அவன் நினைக்கவேயில்லை அதுவும் மிச்சமிருக்கும் காபியையும் குடித்தே தீர்த்துவிடலாமாவென்று அவன் தீவிரமாய் யோசித்துக்கொண்டிருக்கும் தருவாயில் குறுக்கீடு நேர்ந்துவிட்டது

'ஆறுமுகம், உள்ளதைச் சொல்லு' உன்னை யார் காப்பி வாங்கிவரச் சொன்னது?' என்று சுலோசனா கேட்டாள்

'ம்...ம்...ம் வீரமணி ஐயாவுங்க...

'அதை இப்படித்தான் திருட்டுத்தனமாய்க் குடிக்கிறதோ?'

'பசி தாங்கலிங்க.'

'அட முட்டாள்! அதை அந்த ஐயாவிடம் முதலிலேயே சொல்லியிருக்கக்கூடாதா? அவர் எவ்வளவு நல்லவர்! நீ கேட்டால்கூடக் கொஞ்சம் காசு கொடுத்திருக்கமாட்டாரா?...சரி போனால் போகிறது அதில் காப்பி ஏதாவது மிச்சமிருக்கிறதா இல்லையா?'

ஆறுமுகம் ஒரு கண்ணை மூடிக்கொண்டு மற்றதினால் 'பிளாஸ்க்கினுட்புறம் நோக்கிவிட்டு உதட்டைப் பிதுக்கினான் 'இருக்குதுங்க ஆனா அப்பிடியொண்ணும் ஐயாகிட்டே காட்டுற மாதிரியாயில்லே என்று ஈனஸ்வரத்தில் பதில் வந்தது

'அதையும் இங்கேயே காலிபண்ணிவிடு. பிளாஸ்கை அலம்பிக்கொண்டு வா, ஓடு'

அந்த உத்தரவை நிறைவேற்றி வைத்தான் ஆறுமுகம் அடுத்தபடியாக அவள் என்ன செய்யச் சொல்லப் போகிறாளோவென்று அவனுக்குப் பயந்தான் ஆனால் மிஸ் சுலோசனா அமைதியான வதனத்துடன் தன் சொந்த தர்மாஸ் பிளாஸ்க்கை எடுப்பதைக் கண்டதும் அவன் விஷயத்தைப் புரிந்து கொண்டான்

'இந்தக் காப்பியை அதில்விட்டுக் கொள்.' என்று நீட்டினாள் அவள்

'ஐயையோ!...அப்பிடின்னா உங்களுக்கு......?'

'எனக்கில்லாவிட்டால் பரவாயில்லை வீரமணி ஐயாவுக்குத்தான் காப்பியில்லாவிட்டால் வேலை ஓடாதே...இதைக் கொண்டுபோய்க் கொடு. போ.'

ஆறுமுகம் போகவில்லை கொஞ்சம் தயங்கி நின்றான்.

'என்னடா...?'

'ஆனா நீங்க...'

அவன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சுலோசனா, 'பயப்படாதே நான் அவரிடம் சொல்ல மாட்டேன்' என்று தைரியமூட்டிய தன் பேரில் நகர்ந்தான்

ஆறுமுகத்துக்கு அப்படி அபாரமான புத்திசாலித்தனமொன்றும் கிடையாது ஆனாலும் அவன் கூட எண்ணிக்கொண்டான். 'ஏது? இந்த அம்மாள் எப்போதுமே பிறத்தியார் விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளாமல் தன் காரியத்தைப் பார்த்துக்

கொண்டு இருப்பவளாயிற்றே இன்று ஏனோ நம் வீரமணி ஐயா விஷயத்தில் விசேஷ அக்கரை காட்டுகிற மாதிரி தோன்றுகிறது. ஒரு வேளை இவர்களுக்குள் ஏதாவது...?"

o o o

விதி எத்தனையோ விதமான விளையாட்டுகளை நடத்துகின்றது. பொறுப்புள்ள ஸ்தானங்களுக்கு தகுதியற்ற மனிதர்களையே நியமித்து வைக்கிறது அறிவும் திறமையும் முன்னுக்கு வர முடியாமல் தவிக்கின்றன எங்கு பார்த்தாலும் இந்த ஒரே பல்லவிதான் சென்னையில் புகழ் பெற்ற வியாபார ஸ்தாபனமாகிய நகுலன் கம்பெனியின் மானேஜர் பதவியில் சிவஸ்வாமி அமர்த்தப்பட்டதற்கும் அவரது தகுதியோ அனுபவமோ காரணமல்ல

சிவஸ்வாமியின் குணாதிசயங்களே ஒரு அலாதி. தம் கீழ் வேலைசெய்யும் ஊழியர்களின் மதிப்பையும் அன்பையும் அவர் கவரத் தவறியது இயற்கையே கேவலம் அதிகாரம் என்ற கோல்கொண்டு எல்லோரையும் உருட்டி மிரட்டமுயன்றார் பிற உத்தியோகஸ்தர்களைவிட வயதில் சற்று இளையவனும் நல்ல முகக்களையுடையவனுமிருந்த காஷியர் வீரமணியிடம் அவருக்கு ஒரு தனிப்பட்ட வயிற்றெரிச்சல் இருந்து வந்தது சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் அதை வெளிக்காட்டினார் வீரமணி மானேஜரைப் பார்த்துத் திட்டு வாங்கிக்கொண்டு கவிந்த முகத்துடன் வரும் போதெல்லாம் மற்றவர்கள் பரிதாபப் படுவார்கள் அது வீரமணியைத் தவிர வேறு யாராவதாக இருந்தால் எப்போதோ பொறுமையிழந்து வேலையை விட்டு ஓடியிருப்பார்கள், அல்லது சிவஸ்வாமியின் கன்னத்தைப் பெயர்த்துக் கையில் கொடுத்திருப்பார்கள்

ஆனால் வீரமணி பொறுமையைக் கைவிடவில்லை எத்தகைய மனக் கவலையையும் மாற்றுவதற்கு அவனுக்கு இரு மார்க்கங்களிருந்தன ஒன்று காப்பி. மற்றது மிஸ் சுலோசனாவின் முக தரிசனம்

மிஸ் சுலோசனா சிவஸ்வாமியின் காரியதரிசி அழகும் சாந்தமும் அவள் பெண்மையின் லக்ஷணங்கள் தன் கடமைகளைத் திறமையுடன் செய்வாள். மானேஜர் வீரமணியை அனாவசியமாகக் கஷ்டப்படுத்துவது அவள் மனதுக்கு வருத்த மளித்ததெனினும், உள்ளூர அவளிடம் அனுதாபப்படுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாத நிலையிலிருந்தாள்

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு அந்தக் காரியாலயத்தில் காஷியர் வேலை காலியாயிற்று. மூவாயிரம் ரூபாய் 'ஸெக்யூரிடி டிபாஸிட்' கட்டக் கூடிய விண்ணப்பதாரர்களுக்காக விளம்பரம் செய்யப்பட்டது. வீரமணி ஒருவன்தான் மனுச் செய்துகொண்டான். பல உயர்ந்த பரீக்ஷைகள் தேறிப் பட்டம் பெற்றிருந்த இவ் வாலிபன் இத்தகைய வேலையில் வந்து சேர்வானேன் என்று சுலோசனா அப்பொழுதே நினைத்தாள் ஆனால் அவன் வரவு அவளிதயத்திலும் ஓர் புத்துணர்ச்சியை உண்டாக்கியிருக்க வேண்டும் தன்னையறியாமலே அவன்பால் சுலோசனாவின் உள்ளம் அன்பு சுரந்தது

வீரமணி சங்கோசி: அவளிடம் பேச வேண்டும் பழக வேண்டுமென்று கரைகடந்த ஆவலிருந்தும் கூச்சத்தினால் பின்னுக்கிழுக்கப்பட்டான் அவளும் அவனைக் குழப்பத்துக்குள்ளாக்க விரும்பவில்லை எப்போதாவது சந்திக்க நேர்ந்தால் இருவரும் ஒரு சாதாரணப் புன்னகையைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வர் வெறும் பரிச்சயமொன்றைத் தவிர அதற்கு வேறெந்த அர்த்தமுமிருப்பதாகத் தோன்றாது ஆனால் ஒரே கூரையின் கீழ் ஒருவருக்கொருவர் வெகு அருகாமையிலேயே இருக்கிறோம் என்ற நினைவே அவர்களது உள்ளத்தில் ஓர் மந்திர சக்தி போல் வேலை செய்தது பியூன் ஆறுமுகம் எண்ணியது ஓரளவு சரிதானென்றாலும், அதே அபிப்பிராயத்தில் மற்ற குமாஸ்தாக்களும் தம்முன் காதைக் கடித்துக்கொள்ளும் நிலைமைக்கு விஷயங்கள் வந்து விடவில்லை

மிஸ் சுலோசனா ஏழைக் குடும்பத்துப் பெண் வயது முதிர்ந்த பெற்றோருக்கு ஒரே மகள் அவள் கல்வியின் பொருட்டுத் தாய் தந்தையர் எடுத்துக்கொண்ட சிரமங்களும் செய்திருந்த தியாகங்களும் வீண் போகவில்லை தன் உழைப்பால் வந்த ஊதியத்தைக் கொண்டு அவர்களைப் பராமரித்து வந்தாள் குடும்பத் தொல்லைகளுக்கு ஈடு கொடுத்து வருவது போதாதென்று சில நாட்களாக ஆபீஸிலும் சில உபத்திரவங்கள் ஏற்படத் தொடங்கியிருந்தன உலகம் பொல்லாதது என்றறிந்தும் அதனுடன் போராடியாக வேண்டியிருந்தது தன் கஷ்டத்தை வாய்திறந்து யாரிடமும் சொல்லாமல் சமாளித்து வந்தாள்.

அவள் பெற்றோர் சொன்னதிலும் உண்மையிருக்கத்தானிருந்தது அம்மா சுலோசனா! நீ வயது வந்த பெண். இந்த ரீதியிலேயே வெகு நாள் தள்ளுவது உசிதமல்ல அது முடியவும் முடியாது. ஆகவே நீ உனக்குப் பிடித்த புருஷனைப் பார்த்து சீக்கிரம் கலியாணம் செய்துகொள்வது நலம் எங்களைப் பற்றிக் கவலைப் படாதே நாங்கள் விருத்தாப்பியர்கள் பகவான் விட்ட வழியே செல்கிறோம். நீ சுகமாய், சந்தோஷமாயிருந்தால் எங்களுக்கு அதுவே போதும்" என்று அவர்கள் பன்முறை சொல்வதுண்டு

"என் கலியாணத்துக்கென்ன அவசரம் அப்பா? என்னை மட்டுமில்லாமல் உங்களையும் ஆதரவாய்க் கவனித்துக்கொள்ளக்கூடிய நல்ல புருஷன் கிடைக்கும்போது பார்த்துக்கொள்ளலாம்' என்று அவள் தட்டிக்கழித்துவிடுவாள் இருந்தாலும் அபலையான ஒரு கன்னிப்பெண் தக்க ஆடவனின் துணையின்றி வாழ்க்கைச் சுழலில் இறங்கிப் பின் தப்பிக் கரையேறுவது சற்றுக் கடினமான காரியம்தானென்பதை அவள் நாளுக்கு நாள் தெளிவாய் அறிந்துகொண்டாள் மானேஜர் சிவஸ்வாமியின் விசித்திரமான நடத்தை அவளை எச்சரிக்கை கொள்ளச் செய்தது

* * *

மானேஜர் கூப்பிடுகிறாரென்று ஆறுமுகம் வந்து சொன்னதும் வீரமணி எழுந்து தன் கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு கிளம்பினான் வழக்கம்போல் வசைமொழிகளை ஒரு காதால் வாங்கி மறு காதால் வெளியேவிட அவன் தயாராய்த்தானிருந்தான் 'அட கடவுளே! இன்னும் எத்தனை காலைக்குத்தான் இந்த வேதனையை அனுபவிக்கவேண்டுமோ' என்று அவன் நெஞ்சு ஒரு பக்கம் கூக்குரலிட்டது மானேஜர் பேட்டியின் பலன்களை மறப்பதற்காக முன் கூட்டியே ஒரு கப் காப்பிக்கு ஆறுமுகத்திடம சில்லரையை எறிந்தான் சிவஸ்வாமியின் அறைக்குள் அவன் நுழைந்ததுமே அவன் சகபாடிகளெல்லோரும் தத்தம் கைமேலிருந்த வேலையை விட்டு விட்டு உள்ளே என்ன நடக்கிறதென்று ஒட்டுக் கேட்கச் சித்தமாயினர் மாறுதலற்ற அவர்களது வேலை நியமத்திற்கு விறுவிறுப்பூட்ட இம்மாதிரியான சிறு நிகழ்ச்சிகளும் தேவையாய்த்தானிருந்தன.


'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' என்ற கதையில் வரும் ஓநாயைப்போல் மானேஜர் சம்பாஷணையை ஆரம்பித்து வைத்தார் 'மிஸ்டர் வீரமணி நீர் இன்று ஆபீஸிற்கு அரை மணி நேரம் லேட்டாய் வந்தீராமே'

'நான் லேட்டாய் வரவில்லை ஸார், நம் கடிகாரம்தான் முக்கால் மணி 'பாஸ்ட்'டாகப் போகிறது என்றான் வீரமணி

'என்ன! கடிகாரம் வேகமாய்ப் போகிறதா? அதை நீர் ஏன் கவனித்துச் சரி பார்த்திருக்கக்கூடாது?

'எனக்குக் கடிகார ரிப்பேர் தெரியாது.'





'அது தெரியாமலா காஷியர் வேலை பார்க்க வந்துவிட்டீர்? நல்ல ஆளையா நீர்......' காஷியர் உத்தியோகத்திற்கும் கடிகார ரிப்பேருக்குமுள்ள சம்பந்தம் சிவஸ்வாமி ஒருவருக்குத்தான் வெளிச்சம்! முகத்தைச் 'சிடு சிடு' வென்று வைத்துக்கொண்டு டிராயரைத் திறந்தவர் பிரம்மாண்டமான ஒரு காகிதக் கட்டை எடுத்தார். அதைப் பார்த்ததுமே வீரமணிக்கு வயிற்றில் புளியைக் கரைத்ததுபோலிருந்தது ஆயிரம் திட்டு வாங்குவதொன்றும் பிரமாதமல்ல ஆனால் இந்த மானேஜர் வெகு சிக்கலான வேலைகளையெல்லாம் தன் தலைமேல் சுமத்தி விடுவதுதான் அவனுக்குப் பிராணாவஸ்தையாக இருந்தது.

"இந்த 'ஸ்டேட்மெண்ட்'டைப் பூர்த்தி செய்து நாளைக் காலையில் என்னிடம் தரவேண்டும்" என்றார் மானேஜர். அந்தக் கட்டை வாங்கி வீரமணி மேலும் கீழும் பார்த்தான். அவனுக்குத் தலைகால் புரியவில்லை.

'என்ன விழிக்கிறீர்?'

'இவ்வளவு பெரிய வேலையை நான் மட்டும் தனியாக எப்படிச் செய்து முடிப்பதென்றுதான் யோசிக்கிறேன்.........'

'மிஸ்டர் வீரமணி அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது. நான் சோம்பேறித்தனத்தை அனுமதிக்க மாட்டேன். கஷ்டமோ சுலபமோ, 'ஸ்டேட்மெண்ட் தயாராகிவிடவேண்டும் அது உமது பொறுப்பு' வேறு வேலைகளைக் கவனிக்கத் தொடங்குபவர்போல் சிவஸ்வாமி பேனாவைக் கையிலெடுத்தார். இந்த மூர்க்கனிடம் பேசிப் பிரயோஜனமில்லையென்று கண்ட வீரமணி காகிதக் கற்றையைத் தூக்கிக்கொண்டு வெளியேறினான் மானேஜர் அறையின் மூலையில் மறைவான ஓரிடத்தில் அமர்ந்திருந்த மிஸ் சுலோசனாவின் அருளொழுகும் நீலோத்பல நயனங்கள் தம் பார்வையை அவன் மீது வீசின.

'ஐயோ பாவம்! அனாவசியமாகக் கஷ்டப்படுத்தப் படுகிறார்.' என்று அவளது உதடுகள் முணுமுணுத்தன. தலைகுனிந்தவண்ணம் சென்ற வீரமணி அவளைக் கவனிக்கவோ, அவ்வார்த்தைகளைக் கேட்கவோ இல்லை நேரே போய்த் தன் மேஜையடியில் உட்கார்ந்து அந்தச் சனியன் பிடித்த வேலையை ஆரம்பித்தான்

அன்று மாலை சுமார் ஆறு மணியிருக்கும். மானேஜர், மற்ற குமாஸ்தாக்கள் எல்லோரும் தம் வீடு சென்றுவிட்டனர். பியூன் ஆறுமுகம்கூட போயாயிற்று. பாவம் வீரமணி மட்டும் மின்சார விளக்கினடியில் உட்கார்ந்துகொண்டு போராடியவாறிருந்தான். அந்தப் போராட்டத்திலும் அவனுக்குத் தோல்வி மேல் தோல்வி கேவலம் கூட்டல் கழித்தல் கணக்குகள்கூட அவனைக் கைவிட்டுவிட்டுத் தில்லு முல்லு செய்தன. ஒவ்வொரு தடவை கூட்டும்போதும் ஒவ்வொரு வித்தியாசமான விடை வந்தது தன் சுருட்டை மயிர்களினூடே விரல்களைச் [illegible] சலுத்திப் பிய்க்க முயன்றவனாய் [illegible] பிடித்தவன்போல் உட்கார்ந் [illegible] ட்டான்.

அப்படி எவ்வளவு [illegible] ம் இருந்தானோ, சொல்ல முடி [illegible] அவன் தோள் மீது மிருதுவா [illegible] கரத்தின் ஸ்பரிசம் பட்டது. அவ [illegible] காதருகே, 'மிஸ்டர் வீரமணி!' என்ற இனிய குரல் அழைத்தது கனவிலிருந்து விழித்த வீரமணி திகைத்துப் போனான்

மிஸ் சுலோசனா இதழ்களில் மெல்லிய புன்னகை தவழ அங்கு நின்றாள்.

'ஏன்? என்னையா...? மானேஜர் கூப்பிட்டாரோ...? என்று ஏதோ உளறினான்.

அவள் அவனைப் பரிதாபத்துடன் நோக்கினாள். 'இல்லை மானேஜர் அப்போதே போய்விட்டார். நானாகத்தான் வந்தேன்.' என்றாள் அவள் வீரமணி சற்றுத் தெளிவடைந்தான்.

'அப்படியானால் நீங்களும் வீட்டுக்குப் போகவில்லையா?'

அதற்குத்தான் கிளம்பினேன் ஆனால் நீங்கள் இங்கே இப்படிக் கணக்கைக் கட்டிக்கொண்டு அல்லல் படுவதைப் பார்த்த பிறகு எனக்குப் போக மனம் வரவில்லை...எங்கே. கொஞ்சம் 'ஸ்டேட்மெண்'டைக் காட்டுங்கள் எதுவரை ஆகியிருக்கிறது பார்க்கலாம்.

தான் கிறுக்கித் தள்ளியிருந்த நாலைந்து பக்கங்களை வீரமணி கூச்சத்துடன் எடுத்து நீட்டினான் 'முடிந்த வேலை மொத்தத்தில் கால் பங்குகூட இல்லை' இதற்கு மேல் என்னால் முடியவில்லை.' என்றும் அவன் தெரிவித்தான்.

'பரவாயில்லை நான் முடித்துத் தருகிறேன் நீங்கள் கொஞ்சம் இளைப்பாறிக் கொள்ளுங்கள்' வீரமணி மறுக்கு முன் அவள் மேஜையடியில் போய் உட்கார்ந்து காகிதங்களைப் புரட்டினாள் அவள் பேனா கிறுகிறென்று வேலை செய்தது அவன் சிறிது நேரம் பேச நாவெழாமல் நின்றான். பின் ஒருவாறாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு தொண்டையைக் கனைத்தான்

'நீங்கள் ரொம்ப இளகிய மனது படைத்தவர்களம்மா ஆனால்...அதற்கு மேல் என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. அந்தக் கேள்வியைக் கேட்கஅவன் தயங்கினான்

"நீங்கள் கேட்க விரும்புவதென்னவென்று எனக்குத் தெரியும்' என்று சுலோசனாவே சொன்னதும் அவன் அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"இந்த வேளையில் நீங்களும் நானும் தனியாயிருப்பதுபற்றி யாராவது அவதூறு கிளப்பலாமென்றுதானே நீங்கள் பயப்படுகிறீர்கள்?"

'ஆ...மா...ம்" நம்யோசனை இவளுக்கெப்படித் தெரிந்தது? என்று புரியாமல் அவன் குழறினான்.

"அந்த அவதூறு உங்களைப் பாதிக்கக் கூடாதேயென்பதா உங்கள் கவலை?'

'அல்ல அல்ல, இவற்றிலெல்லாம் ஆண்பிள்ளைகளுக்கு அதிகப் பிரச்னைகள் ஏற்படுவதில்லை ஆனால் என் பொருட்டு இத்தனை சிரமம் எடுத்துக்கொள்ளும் நீங்கள் பின்னால் வருந்தும்படியாக ஏதாவது வதந்திகள் உலவினால்..."

'மிஸ்டர் வீரமணி! உலகம் என்ன சொல்லும். சொல்லாது என்று கோட்பாடு உண்டு. அதற்குக் கண்களே கிடையாது நடந்ததை நடக்காததாயும், நடவாததை நடந்ததாகவும் திரிக்கும் மனித இயல்பு யாரையும் விட்டுக்கொடுப்பதில்லை எனவே, உலகத்தின் அபிப்பிராயத்தை நான் மதிப்பதில்லை நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்'

அவளது ஆணித்தரமான. அறிவு நிரம்பிய வார்த்தைகள் வீரமணியை அதிசயிக்கச் செய்தன. அவள் நடத்தையின் அமைதியிலும் அத்தகைய உறுதியிருந்தது

சுலோசனா வேலையைத் தொடர்ந்தாள் வீரமணி சற்று தூரத்துக்கப்பால் ஒரு மேஜையின்மீது சாய்ந்து நின்றான் அன்றுதான் அவளுடன் முதன் முறையாக வாய்விட்டுப் பேசியிருந்தான் இப்போது விளக்கினடியில் அமர்ந்து வேலையிலாழ்ந்திருந்த அவளைக் கூர்ந்து கவனித்தான் அவள் ஓர் தேவதைபோல் காக்ஷியளித்தாள். அவன் கண்கள் சுலோசனாவின் அழகை அள்ளிப் பருகின இடையே அவன் நெஞ்சிலிருந்து ஓர் நீண்ட பெருமூச்சும் வெளிவந்தது "ஆ! இந்தப் பெண்ணரசியை மட்டும் என் துணைவியாகப் பெற்றால்...!" அவனுள்ளம் மீண்டும் கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கிற்று, நேரம் செல்வது தெரியவில்லை.

வெளியே தெருவில் சந்தடிகளெல்லாம் ஒன்றன் பின்னொன்றாய் அடங்கிவிட்டன. ஜன நடமாட்டம் நின்றுவிட்டது. ஆனால் வேலையிலேயே கண்ணாயிருந்த சுலோசனா இன்னும் தலையைக்கூட நிமிரவில்லை அவள் வேலைசெய்யத் தான்மட்டும் சும்மா கையைக் கட்டிக்கொண்டு நிற்பது வீரமணிக்கே பிடிக்கவில்லை. என்றாலும் சுலோசனா அங்கிருக்கும்வரை தனக்கு ஒரு வேலையும் ஓடாதென்று அவன் அறிவான்.

மணி பன்னிரண்டடிக்கச் சில நிமிஷங்களே இருந்தன 'இதோ வேலை முடிந்து விட்டது' என்று அவள் எழுந்தாள் ஸ்டேட்மெண்டில் அவளது முத்து முத்தான கையெழுத்தையும், நுட்பமான கணக்குகளும் திறமையுடன் போடப்பட்டிருந்த மாதிரியையும் கண்ட வீரமணிக்கு சுலோசனாவின்பால் மதிப்பு பெரிதும் உயர்ந்தது காகிதங்களை ஒழுங்குபடுத்தி தன் வசமிருந்த பணப்பெட்டியையும் ஜாக்கிரதையாகப் பூட்டியபின் வீரமணி புறப்பட்டான் இருவரும் ஆபீஸின் வாசலுக்கு வந்தனர் நிர்மானுஷ்யமாயிருந்த தெருவில் சீட்டியடித்துக்கொண்டே ரோந்து வந்த ஒரு பீட் கான்ஸ்டபிள் தனிமையில் நிற்கும் இவ்விருவரையும் ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு போனான்

'மிஸ் சுலோசனா! உங்கள் உதவிக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். என்னால் உங்களுக்கு வீடு செல்ல மிகவும் தாமதமாகி விட்டது இப்போது டிராம் பஸ், ரிக்ஷா எதுவும் கிடைக்காத வேளை. ஆகையால் நான் உங்களை வீட்டில்கொண்டு விட்டுச் செல்ல அனுமதிக்க வேண்டுகிறேன்'

'வந்தனம். மிஸ்டர் வீரமணி. எனக்கும் துணையின்றிச் செல்வது உசிதமாகப் படவில்லை......வாருங்கள்' என்றாள் சுலோசனா இருவரும் நடந்தனர்.

* * *

ஏதோ நினைத்துக்கொண்டவன்போல் கேட்டான் வீரமணி 'மிஸ் சுலோசனா! இந்த உத்தியோகத்தை நீங்கள் விரும்புகிறீர்களா?

'வேலை செய்து ஜீவிப்பதில் தவறொன்றுமில்லை ஆனால் முறைதவறி நடந்துகொள்ளும் யஜமானர்களிடம் அல்லது மேலதிகாரிகளிடம் வேலை செய்யும் துர்ப்பாக்கியத்துக்காளாகாமல் கூடியவரை விலகி நிற்பது நலம்' என்றாள் அவள்

'என்னிடம் சிவஸ்வாமி காட்டும் அகாரணமான துவேஷத்தை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்போலிருக்கிறது'

'உங்களிடம் அவர் நடந்துகொள்ளும் விதம் மட்டுமல்ல ஒரு பெண்ணாகிய என் விஷயத்திலும் அவர் அசட்டுப் பிசட்டென்று நடக்கத் தொடங்கிவிட்டார். எனவே விரைவில் இந்தக் கம்பெனியை விட்டொழித்துப் போக முயற்சிக்கிறேன்'

வீரமணிக்குத் திக்கென்றது. 'ஆ! அப்படியா? என்று அவன் துடித்தான்.

சுலோசனா மேலும் சொன்னாள். 'அவர் நோக்கம் எனக்கு நன்கு புரிகிறது ஆனால் அந்த வலையில் சிக்க நான் தயாராயில்லை மனிதர்களை அவர்களது குணத்தாலும் நடத்தையாலும் மதிப்பிடவேண்டுமேயன்றி செல்வத்தையும் அந்தஸ்தையும் கொண்டல்ல. 'ஏழைப் பெண் என்று என்னிடம் தம் கைவரிசையைக் காட்டுகிறார்.'

அவன் பற்களை நெறநெறவென்று கடித்தான். மானேஜர் சிவஸ்வாமியாயிருந்தாலென்ன. அல்லது வேறு யாராயிருந்தால்தானென்ன? தன்னை உருட்டி மிரட்டுவது ஒரு விஷயம் தான் இதயத்தில் வைத்துப் பூஜிக்கும் அப்பொற்கொடியாளிடம் விளையாடுவது வேறு விஷயம் பரம சாதுவான வீரமணியின் ரத்தமே கொதித்தது.



'நிஜமாகவா அந்த அயோக்யன் உங்களிடம் அப்படி விபரீதமாக நடந்துகொள்கிறான்? என்று அவன் உறுமியபோது சுலோசனாகூடச் சற்றுப் பயந்துவிட்டாள்

'வேண்டாம் மிஸ்டர் வீரமணி இதற்காக நீங்கள் போய்க் கலாட்டா செய்துவிடாதீர்கள் அனாவசியமான கஷ்டங்களுக்கு இடமேற்படும் 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்று நாம் ஒதுங்கிவிடுவதே சரி'

வீரமணி ஒன்றும் பதில் பேசவில்லை இருவரும் கொஞ்ச தூரம் மௌனமாய் நடந்தனர் திடீரென்று அவன் பேசினான் வஞ்சக உலகத்தில் பெண்கள் தனிமையில் சஞ்சரிப்பதே பிசகு ஒரு தகுந்த புருஷனின் துணை இன்றியமையாதது'

'நீங்கள் சொல்வது சரியென்று ஒத்துக் கொள்கிறேன்

பின் ஏன் நீங்கள் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது?

என்ன இருந்தாலும் பெண்தானே? சுலோசனா நாணமுற்றுத் தலை குனிந்தாள் சற்று நேரம் மௌனம். அந்த இடை நேரத்திற்குள்ளேயே வீரமணியின் உள்ளம் துணிவு பெற்றுவிட்டது அவள் சம்மதத்தையறிய இதைவிடச் சிறந்த சந்தர்ப்பம் வாய்க்கக்கூடுமென்று அவனுக்குத் தோன்றவில்லை ரஸ்தாவில் அவ்விடத்திலிருந்த மின்சார லாந்தல் என்ன காரணத்தாலோ எரியாததால் அங்கு சிறிது இருள் சூழ்ந்திருந்தது மெல்ல அவளை நெருங்கி அவளது சூடான கரங்களைப் பற்றிக்கொண்டான். அவள் தன்னை விடுவித்துக் கொள்ள முயலவில்லை.

மிஸ் சுலோசனா! ஒரு வார்த்தை... நான் உங்களை முதன்முறை கண்ட க்ஷணம் முதலே. என் இதயக்கோயிலில் நீங்கள் இடம்பெற்றுவிட்டீர்கள். என் தகுதியின்மையை நான் நன்கறிந்தபோதிலும் ஆசைவிடவில்லை தங்கள் முக தரிசனம் ஒன்றிற்காக எவ்வளவோ மன வேதனையைப் பொறுத்துக்கொண்டு இந்த ஆபீஸிலேயே ஒட்டிக்கொண்டிருக்கிறேன் நீங்களில்லாத வாழ்க்கை பாழே என்ற முடிவுக்கு வந்துவிட்டேன் உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் கட்டாயப்படுத்தும் விருப்பமெனக்கில்லை என் காதலை அங்கீகரிப்பீர்களா?' என்று மூச்சுவிடாமல் பேசிவிட்டான் அவள் கண்கள் வியப்பினால் மலர்ந்து விரிந்தன.

'மிஸ்டர் வீரமணி! அப்படியானால் என் பொருட்டாகவா நீங்கள் சிவஸ்வாமியின் கொடுமைகளையெல்லாம் சகித்துக்கொண்டு இங்கேயே தங்குகிறீர்கள்?'

'ஆம் அன்றொரு நாள் காலை அகஸ்மாத்தாக இந்த ஆபீஸ் பக்கம் வரும்போது நீங்கள் உள்ளே செல்வதைப் பார்த்தேன் விசாரித்ததில் நீங்கள் அங்கே வேலை செய்வதாகத் தெரிந்தது கடவுள் கிருபையால் அடுத்த சில நாட்களுக்குள் காலியான காஷியர் வேலைக்கு மனுச் செய்துகொண்டேன் அது எனக்குக் கிடைத்துவிட்டது ஆனாலும் என் சுபாவமான சங்கோசம் உங்களை அணுகவிடுவதில்லை தயங்கித் தயங்கித் தூர நின்று உங்களை நோக்குவதே எனக்குப் பெரும் ஆறுதலளித்து வந்தது.'

சுலோசனா சிறிது யோசித்தாள் அவள் கூறப்போகும் முடிவை எதிர்பார்த்துப் பதைக்கும் உள்ளத்துடன் வீரமணி நின்றான்.

'மிஸ்டர் வீரமணி! தங்களை என் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொள்வது எனக்கு இஷ்டமே உங்கள் கண்யமான நடத்தையும் பொறுமையும் என்னை வசீகரிக்கின்றன என் பெற்றோரை அனுமதி வேண்டிப் பெற்ற பின்.........'

பொறுமைக்குப் பெயர் பெற்ற வீரமணி இந்த ஒரு நிமிஷத்திற்கு மட்டும் தன்னை மறந்துவிட்டான். மின்னற்கொடிபோன்ற அவ்வழகியின் உடலைத் தீண்டி அவள் அதரங்களை ருசித்துவிட்டான் காதல் வெறி அவர்களை ஆட்கொண்டுவிட்டது.

* * *

உள்ளங்கள் ஒன்றாகிய பின் வெறும் வார்த்தைகளுக்குத் தேவையேது? இருவரும் கைகோத்தவாறு மௌனமாய் நடந்து சென்றனர். மெயின் ரஸ்தாவைக் கடந்து ஒழுங்கற்று, குறுக்கும் நெடுக்குமாய்ப் பின்னிக் கிடந்த பல சந்துகளினூடே புகுந்து இறுதியில் குண்டுராயன் தெருக்கோடியை வந்தடைந்தனர். சுலோசனாவின் வீடு இருந்தது அத்தெருவில்தான் அவளைச் சில நிமிஷங்களில் பிரிய வேண்டுமேயென்னும் கவலை வீரமணியைச் சூழ்ந்துகொள்ளவே. அவள் கையை இன்னும் இறுகப்பற்றினான்.

"சுலோசனா! இவ்வளவு தாமதமாய் நடுராத்திரியில் வீட்டிற்குப் போகிறாயே. உன் பெற்றோர் கவலையுடனிருக்கமாட்டார்களா?" என்று கேட்டான்.

"ஆம் நான் போய் நடந்ததைச் சொல்லி அவர்களைச் சமாதானம் செய்கிறேன்"

"உன் வீட்டு நம்பர் என்ன? இந்தத் தெருவில் எல்லா வீடுகளுமே ஒரே மாதிரியாயிருக்கின்றனவே."

"எங்கள் வீடு பதினேழாம் நம்பர். அதோ கிட்டத்தானிருக்கிறது.'

இரண்டடி நடக்குமுன் "நில்" என்றான் வீரமணி. அவன் கண்கள் முன்புறம் எதையோ வெறித்து நோக்கின. சுலோசனா திடுக்கிட்டு நின்றாள்.

"சுலோ! அதோ நிற்கும் காரைப் பார் அது நம் சிவஸ்வாமியின் கார் என்று தோன்றுகிறது அது இங்கே வரக் காரணமென்ன?'

சுலோசனா பார்த்தாள் வண்டியின் அமைப்பு, நிறம், நம்பர் தகடு எல்லாம் சிவஸ்வாமியின் உடைமையையே குறித்தன. மறுகணம் அவள் கூவினாள், 'வீரமணி. அது நிற்பது வேறெங்குமில்லை என் வீட்டெதிரில் தான் அவன் உதட்டைக் கடித்துக்கொண்டான்.

"அவன் உன் வீடு தேடி வர ஒரே காரணந்தானிருக்க முடியும். சுலோ! உன் பெற்றோர்களிடம் பேசி ஏற்பாடு செய்துகொண்டு உன்னை மணக்க முயற்சிக்கிறானோ என்னவோ!"

அவள் முகம் வாடிவிட்டது "நம்மைப் பகவான்தான் காப்பாற்ற வேண்டும், அந்த அயோக்கியனுக்கு மனைவியாகும் துர்ப்பாக்கியத்திலிருந்து' என்று வாய்விட்டுப் பிரார்த்தித்தாள். வீரமணியின் ஆக்ரோஷம் பீறிக்கொண்டெழுந்தது

'சுலோ! எனக்கு அனுமதி கொடு. இந்த க்ஷணமே அவன் மண்டையைப் பிளந்துவிட்டு வருகிறேன் வீட்டிலாகட்டும், அல்லது ஆபீஸிலாகட்டும் இனி உன்னிடம் வாலாட்ட அவனுக்குத் தைரியமில்லாமல் செய்து விடுகிறேன்' என்று கிளம்பியவனை அவள் தடுத்தாள் "வேண்டாம். ஆத்திரப்படாதீர்கள் அவன் எவ்வளவுதூரந்தான் போவானென்று பார்க்கலாம்.'

அந்தக் கார் அங்கிருந்து கிளம்பி மறுகணம் அவர்களைத் தாண்டிச் சென்றது அதை ஓட்டி சிவஸ்வாமி பாதையோரத்தில் இருளில் மறைந்து நின்ற இவ்விரு காதலர்களையும் கவனிக்கவில்லை

'வீரமணி! நீங்கள் ஊகித்தது ஒருகால் சரியாயிருந்துவிட்டால்...?'

'சரியாயிருந்துவிட்டால்......! உன் பெற்றோர் உன்னைச் சிவஸ்வாமியைப் போன்ற பெரிய உத்தியோகஸ்தனுக்குத்தான் கொடுக்க விரும்புவார்கள். 'வீரமணி ஒரு ஏழைக் குமாஸ்தா தானே? போயும் போயும் அவனையா கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறாய்?' என்று கேட்பார்கள், அதற்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் சுலோ?' என்று அவன் சவால் விடுத்தான்.

மணந்தால் உங்களை மணப்பேன்; இன்றேல் கன்னியாகவே காலந் தள்ளுவேன் என்று திட்டமாய்த் தெரிவித்துவிடப் போகிறேன்'

அன்பும் ஆர்வமும் அதிசயமும் கலந்தபார்வையை அவள்மீது செலுத்தினன் விடை பெற்றுக்கொள்வது போல் ஒரு புன்னகை செய்துவிட்டு அவள் பிரிந்தாள் வீரமணி வந்த வழியே திரும்பித் தன் அறைநோக்கி நடக்கலுற்றான் சற்றுமுன் குதூகலமே நிறைந்திருந்த அவன் உள்ளத்தில் சிறிது சஞ்சலமும் புகுந்துவிட்டது 'ஒருகால் அவள் பெற்றோர் சம்மதிக்காவிட்டால்...?'

* * *

மறுநாட்காலை சிவஸ்வாமி தம் ஆபீஸ் அறையில் நுழையும்போது, அவர் எதிர்பாராதவிதமாக அந்த ஸ்டேட்மெண்ட் அவாது மேஜைமேல் தயாராக இருந்தது சற்று ஏமாற்றத்துடன் அதைப் பிரித்துப் புரட்டினார். மறுகணம் அவர் முகம் கருத்தது 'கண கண' வென்று மணியை ஓங்கித்தட்டி வீரமணியை அழைக்கச் செய்தார்

'மிஸ்டர் வீரமணி, இதில் காணப்படுவது யாருடைய கையெழுத்து முதல் ஐந்து பக்கங்கள் தவிர மற்றவை உம் வேலையல்லவென்று தெரிகிறதே' என்று இரைந்தார்.

அவன் கம்பீரமாக நிதானத்துடன் பதில் சொன்னான். 'ஸார் கையெழுத்து யாருடையதாயிருந்தால் உங்களுக்கென்ன? வேலை பூர்த்தியாகி விட்டதா இல்லையா?'

சிவஸ்வாமி மலைத்துப்போனார். அவர் மட்டுமல்ல. வெளியே ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த அரை டஜன் குமாஸ்தாக்களுக்கும் வீரமணி பேசிய மாதிரி சற்று அதிசயத்தை விளைவித்தது மானேஜருக்கு அவன் தைரியமாய் 'ஜவாப்' சொல்வது அதுவே முதல் தடவை

சிவஸ்வாமி தமது தடித்த ஆட்காட்டி விரலை அவன் முகத்துக்கெதிரே நீட்டி, 'நீர் அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பேசுகிறீர்,' என்று குற்றஞ் சாட்டினார்

"நீர் காட்டுமிராண்டித்தனமாய் நடந்து கொள்கிறீர்' என்றான் வீரமணி வெளியே நண்பர்கள் சபாஷ், வீரமணி!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டனர்

கோபத்தால் மானேஜரின் கைகால்கள், உதடுகள் எல்லாம் பதறின. அவனைச் சுட்டெரித்துவிடுவதுபோல் பார்த்தார். அப்பொழுதுதான் ஆபீஸ் அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த சுலோசனாவின் தோற்றம் ஓர் மந்திர சக்திபோலாகி அவரைப் பல்லிளிக்கச் செய்தது

மிஸ் சுலோசனா! இன்று ரொம்ப லேட்டாகிவிட்டதே, ஒருவேளை நீங்கள் வரமாட்டீர்களோ என்றுகூட நினைத்துப் பயந்துகொண்டிருந்தேன் நல்ல வேளை வந்துவிட்டீர்கள்... ஒன்றும் விசேஷமில்லையே...'என்று குழைவுடன் பேசினார் சிவஸ்வாமி வீரமணி சிரமப்பட்டு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு சுலோசனாவைப் பார்த்தான் எப்போதையும்விட அவள் அதிக அழகுடன் தோன்றினாள் சென்ற இரவின் நிகழ்ச்சிகள் மீண்டும் நினைவுக்கு வந்ததும் அவன் உள்ளம் பூரித்தது எதிரே நின்ற சிவஸ்வாமியை ஒரு துரும்பாக மதித்தான்.

அவளிடமிருந்து எவ்வித பதிலும் வராமற் போகவே சிவஸ்வாமி வீரமணியை மிரட்டும் முயற்சியைத் தொடர்ந்தார் அதிலாவது சாந்தி காணலாமென்றெண்ணினார்போலும்!

'வீரமணி! உம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த வேலை பூராவும் நீரே செய்யாதது உம் தவறு. என் அனுமதியின்றி இதில் உமக்கு இதில் உதவி செய்த நபரும் குற்றத்துக்குள்ளாகிறார் உண்மையைச் சொல்லும் இந்த ஸ்டேட்மெண்டில் காணப்படுவது யாருடைய கையெழுத்து?'

'ஏன்? என்னுடையதுதான்' என்று எங்கிருந்தோ பதில் வந்ததும், சிவஸ்வாமி திடுக்கிட்டார் சுலோசனா தன் மேஜையருகிலிருந்து அவரை நோக்கி வந்து கொண்டிருந்தாள்

'என்ன என்ன? நீங்களா இவருக்கு உதவியது? இது உங்கள் கையெழுத்தா?' என்று மானேஜர் தடுமாற்றத்துடன் கேட்டார்.

ஆம் நான் செய்ததில் என்ன தவறு? அத்தனை பெரிய வேலையை அவரால் தனியாய்ச் செய்ய முடியவில்லை. நான் உதவினேன். அதுவும் என் பிற கடமைகள் முடிந்த பின்னரே செய்தேன் அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'.

சிவஸ்வாமி திணறினார். இடிமேலிடி விழுவதுபோலிருந்தது அவருக்கு "தவறொன்றுமில்லை............ உங்கள் கையெழுத்து ரொம்ப அழகாயிருக்கிறது. அதைத்தான் சொல்ல வந்தேன்......"

"அப்படியா? சந்தோஷம் நான் போகலாமோ?" என்று சுலோசனா திரும்பினாள்.

"நில்லுங்கள் ஒரு வார்த்தை..."

'என்?"

"அப்படியானால், நேற்று ராத்திரி வெகு நேரம் வரை நீங்கள் வீடு திரும்பாததற்கு இந்த வேலைதான் காரணம் என்று சொல்லுங்கள்...நான் நேற்று வந்து போனதைப்பற்றி உங்கள் பெற்றோர் ஒன்றும் சொல்லவில்லையா?" சிவஸ்வாமி ஆவலுடன் கேட்டார்.

சொன்னார்கள் அதோடு இன்று என்னிடம் தங்களுக்கு ஒரு செய்தியும் சொல்லியனுப்பியிருக்கிறார்கள்

"என்ன அது?"

"பெண்ணுக்கு இக்கலியாணத்தில் விருப்பமில்லாதபடியால் இனிமேல் தாங்கள் சிரமம் எடுத்துக்கொண்டு அங்கே வரவேண்டியதில்லையென்று சொல்லச் சொன்னார்கள்"

வீரமணி குறுக்கிட்டான்."அதோடு ஆபீஸிலும் பெண்களிடம் பழகவேண்டிய முறை தவறிப் பழக வேண்டாமென்று எச்சரித்திருப்பார்களே"

சினமும் ஏமாற்றமும் அவமானமும் பொங்க அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தவராய் வாயடைத்து நின்றார் சிவஸ்வாமி வீரமணியும் சுலோசனாவும் ஏற்கெனவே காதலர்களென்று அவர் ஊகித்து விட்டார். அவர் இதயத்தில் பொறாமைக் கனல் மூண்டது இவர்களது ஆனந்தத்தில் மண்ணைத் தூவாவிட்டால் என் பெயர் சிவஸ்வாமியல்ல' என்று சபதம் செய்துகொண்டார வெகு ஆத்திரத்துடன் வெளியே சென்றவர் வழியில் நின்ற பியூன் ஆறுமுகத்தின் கட்டை விரலை பூட்ஸ் காலால் அழுத்தி மிதித்துவிட்டு. அவன் வலியால் துடிப்பதைக்கூடக் கவனிக்கவில்லை.

* * *

அந்த நள்ளிரவில் காரை ஆபீஸ் வாசலில் கொண்டு நிறுத்திவிட்டு இறங்கிய சிவஸ்வாமி சுற்றுமுற்றும் ஒரு முறை நோக்கினார் யாரும் கவனிக்கவில்லையென்று தன்னைத் திருப்தி செய்துகொண்ட பின் பைக்குள் கையைவிட்டு ஆபீஸின் வெளிச் சாவியை எடுத்துக் கதவைத் திறந்தார் அவர் பூனைபோல் அடிமேலடி வைத்து. உள்ளே நடந்தமாதிரியே, அவரது நோக்கம் உத்தமமானதல்ல வென்று தெளிவுபடுத்தியது

அவர் 'ஸ்விட்சை' அழுத்தி மின்சார விளக்கைப் போடவில்லை உள்ளே சூழ்ந்திருந்த இருளிலேயே தட்டுத்தடுமாறி வழி கண்டுகொண்டு காஷியரின் இரும்புப் பெட்டியை அடைந்தார் மீண்டும் தம் சட்டையின் உள் பையிலிருந்து ஒரு நீண்ட சாவியையெடுத்தார். மறுகணம் இரும்புப் பெட்டியின் பூட்டு 'கிளிக்' என்ற சப்தத்துடன் திறந்தது.

மறுநாள் முதல்தேதியானபடியால் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக அன்றுதான் பாங்கிலிருந்து பத்தாயிரம் ரூபாய் வாங்கி வரப்பட்டிருந்தது மானேஜர் என்ற ஹோதாவில் இவ்விஷயம் சிவஸ்வாமிக்குத் தெரிந்திருந்தது அதே ஹோதாவில். இரும்புப் பெட்டியின் மறு சாவியும் அவர் வசமிருந்தது அவற்றை உபயோகித்துக் கொண்டு வீரமணிக்குத் தீங்கிழைக்க முயல்வதைத் தவிர வேறு சுலபமான திட்டமெதுவும் அவருக்குப் புலனாகவில்லை

இரும்புப் பெட்டிக்குள்ளிருந்து நோட்டுக் கற்றைகளை அள்ளியெடுத்துத் தம் பைகளில் திணித்துக்கொண்டார். அது முழுவதும் காலியாகிவிட்டதாவென்று உள்ளே கையை விட்டுத் துழாவிப்பார்த்துவிட்டு மீண்டும் அடிமேலடி வைத்து வெளியே நடந்தார. அவர் உள்ளம் 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டது ஆனால் வீரமணியை ஒழித்துக்கட்டும் வேலையில் இந்த முயற்சி எவ்வளவு முக்யமானது என்று எண்ணும்போதுதான் படும் சிரமமெல்லாம் அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை

பணம்! ஒன்றா. இரண்டா? ரூபாய் பத்தாயிரத்துக்குமேல் காலையில் வீரமணி வந்து காலிப் பெட்டியைக் காணும்போது அவன் வயிறு 'பகீரெ'ன்றுபோகும் ஏனென்றால் அந்தப் பணம் முழுவதற்கும் அவனே பொறுப்பாளி அதைக்கையாடியது அவனே யென்று குற்றம் ஜோடிக்க எத்தனை நேரமாகும்? வீரமணியின் 'டிபாஸிட்டுத்' தொகை மூவாயிரமும் ஸ்வாஹா' ஆகிவிடும். அதோடு போயிற்றா விஷயம்? மீதிப் பணத்துக்காக அவன் மீது வழக்குத் தொடர்ந்து அவனை ஜெயிலுக்குள் தள்ளிவிடலாம். அப்பொழுது பார்க்கவேண்டுமே அவன் காதலி சுலோசனாவின் முகத்தை!

மானேஜரிடம் மறுசாவி இருக்கிறதாயென்றவாதம் எழ முடியாது. தன் வசமிருந்த சாவி எப்போதோ தொலைந்துவிட்டதாகச் சாதித்துவிடலாம் மேலும் இரண்டாயிரம்ரூபாய் சம்பளம் வாங்கும் தன்மேல் சந்தேகம் அவ்வளவு எளிதில் ஏற்பட முடியாது.

திருடர்கள்தான் உள்ளே வந்து பணத்தை அடித்துக்கொண்டு போயிருப்பார்களென்று வீரமணி வாதித்தார்......?

அதெப்படி? பணம் காணாததொன்றைத் தவிர திருடர்கள் வந்து போன



தற்கு அறிகுறியெதுவும் இல்லையே! கதவோ ஜன்னலோ, பூட்டோ எங்கும் உடைபட்டிருக்கவில்லை, பலாத்காரத்தின் சின்னங்களும் கிடையாது போலீஸார் போதிய ருசுவில்லாமல் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வீரமணியின் வாதங்களெல்லாம் முறிக்கப்படுவது நிச்சயம். இப்படிப்பட்ட அயோக்யத் திருடனையாபோய் நேசித்தேன்'என்று சுலேசனா வருந்துவாள் வீரமணியை ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் பார்க்கலாம். அவன் காதலியைக் கண்ணீரும் கம்பலையுமாகப் பார்க்லாம்.

'ஆஹாஹா!'- என்று தம்முள் நகைத்து தம்மையே பாராட்டிக்கொண்ட சிவஸ்வாமி ஆபீஸின் வெளிக் கதவை ஜாக்கிரதையாய்ப் பூட்டிவிட்டுக் காரில், ஏறினார்.

கார் கிளம்பிச் சிறிதுதூரம் சென்றிருக்கும் 'ஏய் நில்லு! என்ற, அதிகாரக்குரல்கேட்டு சிவஸ்வாமி திரும்பிப் பார்த்தார். வண்டியின் பின் ஷட்டில் முகமூடியணிந்த இரு உருவங்கள் நின்றன பதறியடித்துக்கொண்டு காரை நிறுத்தினார்.

"நீதான் அந்த கம்பெனி மானேஜர் சிவஸ்வாமியா?" என்று ஓருருவம் கேட்டது.

"இல்லை..." என்று குழறியவர் அதன் கையிலிருந்த பிஸ்டலைக் கண்டதும் பொய் கூறத் துணியாமல் "ஆமாம்" என்றார்.

"உனக்காகத்தான் நாங்களும் காத்துக்கொண்டிருந்தோம்.........சரி, உன் பையிலிருக்கும் பணத்தையெல்லாம் இப்படிக் கொடு"

"ஐயையோ! இது என் பணமில்லை. ஆபீஸ் பணம்." என்று அவர் அலறினார்.

"அட! ஆபீஸ் பணத்தைத்தான் இப்படி நடுராத்திரியில் திருடன் மாதிரி வந்து வெகு ஜாக்கிரதையாகக் கொண்டுபோகிறீரோயா? கொடையா இப்படி."

198579

மரியாதையாகப் பணத்தையெல்லா மெடுத்துக்கொடுத்தார் சிவஸ்வாமி. அவர் உடலெல்லாம் வியர்த்துவிட்டது தன் பெயர் விவரம் முதல் தெரிந்துகொண்டிருந்த அந்தக் கொள்ளைக்காரர்களிடம் சொல்லமுடியாத பயம் ஏற்பட்டிருந்தது. அவருக்கு அந்தப் பாழும் இரும்புப் பெட்டியின் மறு சாவியும் பணத்துடனேயே கைமாறிவிட்டதை அவர் அறியவில்லை.

'சரி பிழைத்துப்போ.'

அவ்விரு உருவங்களும் காரிலிருந்து இறங்கின. மூச்சைக் கையில் பிடித்துக்கொண்டு சிவஸ்வாமிகாரை ஓட்டினார். அவர்களைப் போலீஸில் ரிபோர்ட் செய்ய முயன்றால் கஷ்டம் தனக்குத்தானென்று அவருக்குத் தெரியும்

'அதனாலென்ன? பணம் போனது தான் இந்தப் பயல்கள் எப்படியும் தொலைகிறார்கள் அந்தப் பத்தாயிரம் நமக்குப் பிரயோசனப்படாவிட்டாலும் பரவாயில்லை அதற்காக வீரமணியின் நிலைமை திருந்திவிடப் போவதில்லையே என்று அவர் சமாதானம் செய்துகொண்டார்.

* * *

''மிஸ்டர் வீரமணி! இன்று சம்பளம் பட்டுவாடா காலையிலே யே முடித்துவிடவேண்டும்'' என்றான் சிவஸ்வாமி.

'ஏன் ஸார், வழக்கமாக சாயங்கால தானே சம்பளம் கொடுக்கிறோம்...

'இந்தாரும், நான் சொன்னால் சொன்னதுதான் ஏன், எதற்கு என்று நீர் குறுக்குக் கேள்வி கேட்க வேண்டியதில்லை,' என்று அவர் வள்ளென்று விழுந்தார்.

'அப்படியே ஸார்.' வீரமணி வெளியே சென்றான் டெலிபோன் மணி ஒலித்தது பேசியது முதலாளி 'ஒரு அவசர ஜோலி இருக்கிறது இன்னும் கொஞ்சநேரத்தில் அங்கே வருகிறேன்' என்று செய்தி வந்தது 'வரட்டும் வரட்டும். இந்தப்பயல் வீரமணியைத் தீர்த்துக் கட்டுவதற்கு எல்லா வசதிகளும் ஒன்றாய்த்தான் அமைகின்றன' என்று சிவஸ்வாமி நினைத்துக்கொண்டார். அந்தப் பக்கத்தில் சுலோ! இப்போது இங்கே ஒரு தமாஷ் நாடகம் நடக்கப்போகிறது நீ கலவரப்படாமல் கடைசி வரையில் பார்' என்று அவள் காதோடு சொல்லிக்கொண்டிருந்தான் வீரமணி.

அரைமணி நேரத்துக்குப்பின் மானேஜரின் அறையில் ஏக அமர்க்களம் நடந்துகொண்டிருந்தது சிவஸ்வாமி தொண்டை கிழியும்படியான குரலில் பேசிக்கொண்டிருந்தார் அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் மூலையில் உட்கார்ந்திருந்த சுலோசனாவின் காதுகளில் நாராசம்போல் விழுந்தது.

'ஓஹோ! முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் வேலையா இது? நம்மிடம் நடக்காது ஆபீஸ் பணத்தைக் கையாடும் அயோக்யப் பயலே! உண்மையைச் சொல்லிவிடு அந்தப் பத்தாயிரம் ரூபாயை அமுக்கி எங்கே வைத்திருக்கிறாய்?' என்று மானேஜர் கர்ஜித்தார்.

''நான் அதைத் தொடவேயில்லை. யாரோ திருடன் தான் புகுந்து கொண்டு போயிருக்கிறான். நீர் இப்படிக் கரடியாய்க் கத்தினால் நான் குற்றவாளி ஆய்விடமாட்டேன்'' என்றான் வீரமணி

''கூசாமல் பொய் சொல்கிறாயே. நீ சொல்வதை நிரூபிக்க என்ன ருசு இருக்கிறது!...எப்படியும் இவ்விஷயம் போலீஸுக்குப் போயாகவேண்டும்''

' இந்த க்ஷணமே நிரூபித்துக்காட்டுகிறேன்... ஆறுமுகம் வாசலில் உட்கார்ந்திருக்கும் இரண்டு ஆசாமிகளையும் இங்கே அழைத்து வா'' என்று வீரமணி உத்தரவு கொடுத்தான். இரண்டு ஆசாமிகள் என்றதும் சிவஸ்வாமிக்கு ஒரு மாதிரியாகத்தானிருந்தது





அடுத்த நிமிஷம் நன்கு உடையணிந்த இருவர் உள்ளே நுழைந்தனர்

''எங்களைத் தெரிகிறதோ?'' என்று அவர்களில் சற்று ஆஜானுபாகுவாய்க் காணப்பட்டவர் சிவஸ்வாமியைப் பார்த்துக்கேட்டார்.

''தெரியவில்லையே!'' என்றார் சிவஸ்வாமி. ஆனால் அந்தக் குரல் சற்றுப் பழக்கமானதுபோல் தோன்றியதை அவர் வெளியிட வில்லை

''அடடா! நேற்றிரவு தானே நாம் சந்தித்தோம்? அதற்குள்ளா மறந்துவிட்டீர்கள்? என்று இரண்டாமவர் கேட்டார்.

''அவருக்கு அடையாளந் தெரியாமற் போனது நியாயந்தான் ஏனென்றால் அவர் நம் முகத்தைச் சரியாய்ப் பார்க்கமுடிந்திராது நல்ல இருட்டு; அதிலும் நாம் முகமூடி அணிந்திருந்தபடியால்...''

ஒரு மசிப்புட்டியைக் கையிலெடுத்த சிவஸ்வாமி தடாலென்று அதை நழுவவிட்டார்.

''பயப்படாதீர்கள் நேற்று உங்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டதை மறுபடி உங்களிடமே ஒப்படைக்கத்தான் நாங்கள் வந்தோம்...' என்றார் அந்த ஆஜானுபாகு.

''நீங்களும் அதை எடுத்த இடத்திலேயே திருப்பி வைத்து விடுவீர்களென்று எதிர்பார்க்கிறோம்'' என்று மற்றவர் சொன்னார். அடுத்த கணம் அவர்கள் மேஜைமேல் போட்ட நோட்டுக் குவியல்களைப் பிதுங்கும் விழிகளால் நோக்கினார் சிவஸ்வாமி

'இந்தாருங்கள் அந்த இரும்புப் பெட்டியின் மறுசாவி இனிமேலாவது அதை அனாவசியமாய் உபயோகிக்க வேண்டாம்'' அந்தச் சாவியும் அவர் முகத்துக்கெதிரில் நீட்டப்பட்டது சிவஸ்வாமி மூர்ச்சைபோட்டு விடாமல் சமாளித்துக்கொண்டு, 'அப்படியானால் நீங்கள் தான்...' என்று ஏதோ ஆரம்பித்தார்.

'ஆம் உங்களை மிரட்டிப் பணத்தைப் பெற்றது நாங்கள்தான் நாங்கள் வீரமணியின் நண்பர்கள், நான் சி ஐ டி-யில் இருக்கிறேன்; இவர் போலீஸில் இருக்கிறார் நீங்கள் தன் விஷயத்தில் கொஞ்சம் விஷமம் செய்யக்கூடுமென்று தோன்றுவதாக வீரமணி எங்களுக்குத் தெரிவித்ததன் பேரில் உம் நடவடிக்கைகளைச் சில நாட்களாகக் கவனித்துவருகிறோம். நேற்றுத்தான் வகையாக மாட்டிக் கொண்டீர் உங்கள் மேல் கேஸ் எடுக்கலாமாவென்றுகூட யோசித்தோம். ஆனால் வீரமணிதான் வேண்டாமென்றார். மனிதன் பிழைத்துப் போகட்டும் என்று விடுகிறோம்...... என்று அந்த ஒற்றைநாடி மனிதர் சொல்லி வரும்போது மற்றவர் குறுக்கிட்டார்.

''இந்த எச்சரிக்கையுடன் ஒழுங்காய் நடந்தால் உமக்கு நல்லது. இல்லாவிட்டால் தொலைந்தீர் ''

சிவஸ்வாமி எழுந்தார். வீரமணியின் கையிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தழுதழுக்கும் குரலில் 'வீரமணி! நான் உனக்குப் பெரிய துரோகம் செய்ய எண்ணிவிட்டேன். என்னை மன்னித்துவிடு. இன்றே நான் இந்த ஆபீசிலிருந்து வெளியேறிவிடுகிறேன்'' என்றார்

வாயிற்படியிலிருந்து உள்ளே நடந்துவரும் சிரமம்கூடத் தாங்காமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு வந்த கொழுத்த முதலாளியின் காதில் அவரது கடைசி வார்த்தைகள் மட்டும் விழுந்தன

'என்ன சிவஸ்வாமி! நான் எவ்வளவு முக்யமான செய்தியைத் தெரிவிப்பதற்காக இப்படி ஓடிவந்திருக்கிறேன் நீங்கள் என்னடா என்றால் இப்பொழுதுதான் போவதைப்பற்றி பேசுகிறீர்கள்'' நடந்த அமர்க்களத்தைப்பற்றி அவருக்கொன்றும் தெரியாது.

''முதலாளி!......''

''முதலாளியாவது? இன்று முதல் நானல்ல ஐயா உங்கள் முதலாளி அதைச் சொல்லத்தானே நான் வருகிறேன்.'

''என்ன என்ன?''

''ஆமாம். நேற்றுத்தான் இந்தக் கம்பெனியை மூன்று 'ல'காரத்துக்கு விற்றேன்.''

''யாருக்கு?''

''அதோ ஒன்றும தெரியாதவர் மாதிரி நிற்கிறார் பாரும் அந்த வீரமணிக்குத்தான். அவரை யாரென்று நினைத்துக்கொண்டிருந்தீர் நீர்? நான்கூட ஏமாந்துவிட்டேனே ஐயா கண்டனூர் ஜமீன்தார் கஸ்தூரி ஐயருடைய ஒரே மகனையா. இங்கே வந்து காஷியர் வேஷம் போட்டுக்கொண்டு நாலு மாதமாய் நம்மைப் பைத்தியங்களாயடித்துவிட்டார் நேற்று இவர் என் வீட்டிற்கு வந்தபோது ஏதாவது 'இங்கிரிமெண்ட்' கேட்கத்தான் வந்திருப்பாரென்று நினைத்தேன் இவர் என்னடா என்றால் கம்பெனியையே விலைக்குக் கேட்டுவிட்டார் நான் யோசிக்காமல் மூன்று லக்ஷம் என்றேன் கைமேல் 'செக்'கை எழுதிக் கொடுத்துவிட்டார்......சிவஸ்வாமி! என்ன இப்படி விழிக்கிறீர்?''

சிவஸ்வாமி மூர்ச்சையடைந்து கீழே விழாமல் தாங்கிக்கொண்டது வீரமணிதான்.

* * * *

இரண்டு மாதங்களுக்குப் பின் மயிலாப்பூரில் தன் பெரிய பங்களாவின் மேல் மாடியில் மனைவியுடன் உரையாடிக்கொண்டிருந்தான் வீரமணி பூரண சந்திரனின் சோபையில் ஒருவருக்காகவே மற்றவர் படைக்கப் பட்டதுபோல் விளங்கினர் அவ்வழகிய தம்பதிகள் அவர்களது வாழ்க்கை இன்பமும் ஆனந்தமும் நிறைந்திருந்தது

'நீங்கள் லக்ஷாதிபதியின் மகனென்று கடைசிவரை சொல்லாமல் என்னை ஏமாற்றினீர்களா, இல்லையா?' என்றாள் சுலோசனா

'இல்லை சுலோசனா! உன் உழைப்பால் ஜீவித்து வந்த நீ, நான் பணக்காரன் என்றறிந்தால் என் காதலை ஏற்றுக்கொள்வாயோ என்ற பயத்தினால்தான் சொல்லவில்லை'

'சரி போகட்டும் காஷியர் வேலைக்கு வேறு ஆள் நியமித்துவிட்டீர்களா?'

'அந்தக் கவலை நமக்கெதற்கு? காஷியர் வேலைக்கும் தம் காரியதரிசி வேலைக்குமாக மானேஜர் சிவஸ்வாமி ஆட்கள் பொறுக்குவதற்கு வெகு பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறார் இருக்கும் மற்றச் சிப்பந்திகளிடமும் அவர் வெகு மரியாதையுடன் நடந்துகொள்வதாகக் கேள்வி என்று வீரமணி சொல்லவே, அவள் சிரித்தாள். அவனும் அச் சிரிப்பில் கலந்துகொண்டான் நடந்த சம்பவங்களெல்லாம் அவர்களது மனக்கண் முன்பு ஓர் புகைபடக்காக்ஷிபோல் தோன்றின.


ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

★



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

தபோ நிதி,

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417

# என்ன பெயர்?

'மணி'

'ஏய் உன் பெயர் என்னடா?' என்று ஒரு பையனைப் பார்த்துக் கேட்டேன்

"தாதா கூப்பிடும் பெயர் மொட்டை, பாட்டி கூப்பிடுவது குட்டி அப்பா பையா என்று கூப்பிடுவார். அம்மா கண்ணு என்பாள் அண்ணு அம்பி என்று கூப்பிடுவான்" என்று கூறி நிறுத்தினன் பையன்

"உன் சொந்தப் பெயர்என்னடா?

"சொந்தப் பெயரா, அது எனக்குத் தெரியாதே" என்று கையை விரித்தான் பையன்.

இம்மாதிரி பதிலை நாம் அடிக்கடி கேட்கிறோம் வைப்பது ஒரு பெயர் கூப்பிடுவது ஒரு பெயர் அப்படியிருக்கும் பொழுது குழந்தை பிறந்தவுடன் பெயரிடும் வைபவம் என்று கொண்டாடுவானேன் வைக்ககும் பெயரை என்னமோ நாம் கூப்பிடப் போவதில்லை. என் பாட்டியிடம் போய் ஏன் பாட்டி, குழந்தைகளுக்குத் தொட்டிலிடும்பொழுது ஏன் பெயர் வைக்கிறார்கள்" என்று கேட்டேன்.

"நன்ருக கேட்டாய், குழந்தை பிறந்த 11-ம் நாள் தொட்டிலிட்டு பெயர் வைக்க வேண்டும் என்று வழக்கம். அதனுல் வைக்கிருர்கள்' என்ருள்

"அது சரி, மனுஷாளுக்கு ஏன் பெயர் வைக்க வேண்டும்" என்று மறுபடியும் கேட்டேன்

"பெயர் வைக்காவிட்டால் குறிப்பிட்ட ஆசாமியை எப்படிக் கூப்பிடுவது" என்ருள்

"சரி அப்படியே இருக்கட்டும். அப்பொழுது மனுஷாளுக்கு கல், மண் பானை சுவர் என்று ஏன் பெயரிடக் கூடாது"

"அடே போ அதிகப் பிரசங்கி முன் நாளில் குழந்தைகளுக்குக் கடவுளின் பெயர் வைத்தால் குழந்தைகளை கூப்பிடும் சாக்கிலாவது கடவுளின் பெயரைச் சொன்னுல் அதனுல் கொஞ்சம் புண்ணியம் ஏற்படும் என்று சொல்லி, கடவுளின் பெயரை வைத்தார்கள்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய்விட்டாள்.

பாட்டி சொன்னதுபோல் எனக்கு புராணக் கதை ஒன்று நினைவிற்கு வந்தது அஜாமிளன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் மகா பாபி. கடவுள் என்ருலே அவனுக்கு வெறுப்பு அவன் மனைவி குணம் உங்களுக்கு நான் சொல்ல வேண்டாம். ஏனெனில் விதியின் செயல்படி கணவனுக்கு எதிர் குணமாகத்தான் இருப்பாள் மனைவி அதனுல் அஜாமிளனின் மனைவி மிகவும் நல்லவள் என்று நான் சொல்லாமலே விளங்கும் அவள் தன் கணவனை நல்ல வழிக்குத் திருப்ப பல முயற்சிகள் செய்தாள் பலிக்கவில்லை கடைசியில் தன்னுடைய கடைசி பிள்ளைக்கு நாராயணன் என்று பெயர் வைத்தாள் அஜாமிளன் மரணப் படுக்கையில் விழுந்தான் அவனுக்கு கடைசி பிள்ளையின்மீது அபார அன்பு மரண சமயத்தில் அந்தப் பையனைப் பார்க்க எண்ணின அவன், நாராயணு நாராயணு நாராயணு என்று மூன்று தரம் கூபபிட்டுக்கொண்டே உயிரைவிட்டானும் இந்த கூப்பாடு கடவுளின் காதில் விழுந்ததாம் அந்த ஏமாந்த கடவுள் தன்னைத்தான் கூப்பிடுகிருன் என்று எண்ணி அவனுக்கு மோக்ஷம் கொடுத்தாராம் எப்படி இருக்கிறது நியாயம் குழந்தைகளை கூப்பிட்டுவிட்டால் எவ்வளவு பாபிஷ்டனுக இருந்தாலும் மோக்ஷத்திற்குப்போய்விடலாம் அல்லவா? பெயரினுல் எவ்வளவு லாபம் பார்த்தீர்களா?

நானும் என் அந்திம காலத்தில் என் குழந்தைகளின் பெயரைக் கூப்பிட்டு ஜம்மென்று மோக்ஷத்தை அடையலாம் என்று நிச்சயித்தேன். ஆனுல் அதில்தான் பெரிய கஷ்டம் வந்துவிட்டது சொல்கிறேன் கேளுங்கள் குழந்தையின் பெயரை கூப்பிடுவது என்ற சந்தேகம் வந்துவிட்டது பெரியவன் பெயர் மொட்டை. அவனை மொட்டை என்று கூப்பிட்டு வழக்கமாகிவிட்டதால் அவன் உண்மைப்பெயரே மறந்துவிட்டது. சாகும் தருவாயில் மொட்டை என்று நான் கூப்பிட்டால், எல்லா கடவுளும் தங்கள் தலையை அல்லவோ தடவிப் பார்ப்பார்கள் மோட்சம் கொடுப்பார்களா? அடுத்தவன் பெயர் பாபா, இவனுடைய உண்மைப் பெயரும் நன்ருக நினைவில்லை சாகும் தருணம் பாபா என்ருல் எந்த கடவுள்தான் மோட்சத்திற்கு வழி செய்வார். அதற்கு அடுத்தவன் அம்பி. அது போகட்டும் பெண்ணின் பெயரையாவது சொல்லலாமென்ருல் அவள் பெயர் அங்கிச்சி இப்பொழுது நீங்களே சொல்லுங்கள் நான் யார் பெயரை சொல்லி உயிரை விடுவது? எனக்குக் கோபம் கோபமாக வந்தது உடனே நான் என் தந்தையிடம் சென்று 'ஏன் தான் இந்தக் கடவுளும் தங்கள் பெயரை பாபா, அம்பி என்ற மாதிரி வைத்துக் கொள்ளவில்லையோ!" என்றேன். அவர் சிரித்துக்கொண்டே 'கடவுளுக்கு யாராவது பெயர் வைத்தார்களா. என்ன? அவர்களுக்கு ஒவ்வொரு காரணத்தைக்கொண்டு பெயர் ஏற்பட்டிருக்கிறது என்ருர் கண்ணன் கருப்பாக இருந்ததால் கிருஷ்ணன் என்றும். தேர் ஓட்டியதால் பார்த்தசாரதி என்ற பெயர் ஏற்பட்டதென்றும் மீன்கள் போன்ற அழகிய நீண்ட கண்களை உடையவளாக இருந்ததால் மதுரை அம்மனுக்கு மீனுட்சி என்ற பெயர் ஏற்பட்டது என்றும் இன்னும் சில உதாரணங்களும் சொன்னுர் சரி இதிலும் ஒரு தொந்தரவு இருக்கிறது அக்காலத்திய காரணப் பெயர்கள் இக்காலத்தில் பொருந்துமா, கிருஷ்ணஸ்வாமி என்பவன் வெள்ளை வெளேரென்று இருந்தாலும் கண்ணனைப்போல் அழகாகவாவது இருக்கிருஞ அல்லது கண்ணன் செய்ததுபோல் ஏதாவது உபகாரமாவது செய்கிருஞ? பார்த்தஸாரதி என்பவனுக்கு தேர் ஓட்டுவது கிடக்கட்டும், ஒரு சைகிளாவது ஓட்டத்தெரியுமா? மீனுக்ஷிக்கு யானைக்கண்ணுக இருக்கிறது லக்ஷ்மி என்பவள் லக்ஷ்மீகரம் பொருந்தியவளாக இருக்கிருளா? ரங்கநாயகி என்பவளின் வாய் ஆசீர்வாதம்கூட பலிப்பதில்லை ஜயலக்ஷ்மிக்கு எப்பொழுதாவது ஜெயம் கிட்டியதுண்டா கற்பகத்தினிடமிருந்து அருள் கிடைக்காவிடினும் திட்டு கிடைகிறது

இக்காலத்தில் காரணப் பெயர்கள் வைத்தால் திட்டு தான் மிஞ்சும். அடுத்த வீட்டு மாமிக்கு லக்ஷ்மி என்று பெயராம் கூப்பிடுவது பாபா அவளுக்கு 50-வது வயதில் அவளை பாபா என்ருல் பொருந்துமா? காரணப் பெயர் வைத்தால்பீபா எனப்படும் அவலக்ஷணம் எனலாம். இவ்விதம் சொன்னுல் மாமிக்கு கோபம் வராமல் இருக்குமா? எதிர்வீட்டு கோபாலகிருஷ்ணனுக்கு மொட்டை எனப் பெயர். அவன் தலையில் கட்டுக் குடுமி இருக்கிறது அவனை குடுமி எனப்படும் அகோரம் என்ருல் காரணப் பெயராக இருக்கும் ஆனுல் அவனுக்கு கோபம்தான் வரும் மொட்டை என்ருல் பொருத்துக்கொள்வார்கள் 'குடுமி' என்ருல் கோபம் வருவது சகஜம் என் வீட்டு சமையல் காரியை வாயாடி என்ருல் அவள் பதிலுக்கு என்னை குண்டாணி என்று சொன்னுல் இருவரும் சிண்டை பிடித்துக்கொள்ள வேண்டியதுதான்

இக் காலத்தில் பெயர் வைத்துக் கொள்வதில் மற்ருெரு வேடிக்கை உண்டு. ஒரு சமயம் என் நண்பனை தேடிக்கொண்டு சைனு பஜாருக்குப் போனேன் அவன் ஒரு டாக்டர். அங்கு ஒரு அறை வைத்துக்கொண்டிருந்தான். அங்கு போனதும் வாசலில் ஒரு போர்ட் பார்த்தேன் டாக்டர் டி வி ஜி. பால் எம் பி பி எஸ் என்று போட்டிருந்தது. எனக்கு சந்தேகம் வந்துவிட்டது என் நண்பன் பெயர் பால் இல்லை வேறு யாரோ ஆங்கிலோ இந்தியன் இங்கு வந்துவிட்டான் போலிருக்கிறது என்று நினைத்து. அங்கிருந்த ஒருவனைப் பார்த்து, இங்கு முன்பு இருந்த டாக்டர் இல்லையா"

'இல்லை, அவர் ஜுரமாக ஆஸ்பத்திரியில் இருக்கிருர் என்ருன் மற்றவன் இல்லை அவர் இறந்துவிட்டார்' என்று முடிவு கட்டினுன் எனக்கு வருத்தமாகிவிட்டது அதற்குள் என் தோளை யாரோ தட்டவே, திரும்பிப் பார்த்தால் சாக்ஷாத் என் நண்பனே நின்றுக்கொண்டிருந்தான்

'அட ராமா ஏண்டா நீ இப்போ இங்கே இல்லையா? என்று கேட்டேன்

'நன்ருகக் கேட்டாய், போர்டைப் பார்' என்ருன்

'அதில் யாரோ பால் என்றல்லவோ போட்டிருக்கிறது என்றேன்

அவன் சொன்ன பதிலைக் கேட்டதும் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது தீக்ஷிதர் கிருதிகளில் ஒரு வேடிக்கை உண்டு. உதாரணமாக ஸாரஸபதே என்ருல் அது குறுகிக்கொண்டே வரும் ஸாரஸபதே. ரஸபதே ஸபதே. பதே, தே என்று முடியும். அதுபோல் அவனும் அந்த முறையை கையாண்டிருக்கிருன் திருவேங்கட கோபாலன் என்பது டி வெங்கட கோபாலன் என்று குறுகி, பிறகு டி. வி. கோபாலன் என்று அரை உயிருக்கு வந்து அதன் பிறகு டி வி ஜி பால் என்று கால் உயிருக்கு வந்துவிட்டது இன்னும் சில நாளில் டி வி ஜி பி-ல் என்று வைத்துக்கொண்டாலும் அதிசயப்படுவதற்கில்லை பால் என்ற பெயர் அழகாகவாவது இருக்கிறதா? பாலாம், தயிராம் அழகாக கோபாலன் என்ற மட்டுமாவது நிறுத்திக்கொள்ளக்கூடாதோ ராமஸ்வாமி என்பது ஆர் ஸ்வாமி என்றும், உமாபதி என்பது ப. பதி என்றும், சுப்பிரமணியன் என்பது எஸ் மணி என்றும் இன்னும் இம்மாதிரி எவ்வளவோ பெயர்கள் குறுகிவிடும் நடுவில் இருக்கும் ஒன்று அல்லது இரண்டு எழுத்து சொல்வதற்குள் இவர்கள் நேரம் வீணுகிவிடுமாம் ஊர் வம்பளக்க நேரம் வீணுகாது. சில சமயம் சில பெயர்கள் திரிபுகளுடன் சொல்லப்படும் கிருஷ்ணஸ்வாமி என்பது கிச்சா என்றும், நாராயணன் என்பது நாணு என்றும் ஸ்ரீநிவாஸன் என்பது சீனு என்றும். அலமேலு என்பது அம்மு என்றும் இம்மாதிரி சுருக்கமாக இருக்கும்.


ஆங்கிலேயர்களின் பெயரை கண்டு பிடிப்பது சிறிது கஷ்டம். வில்லியம்ஸ் என்ருல் அக்குடும்பத்தில் அனைவரும் வில்லியம்ஸ்தான். அவர்களுடைய முதல் எழுத்தைக் கொண்டுதான் பெயர் அறியலாம். பி. வில்லியம்ஸ் என்ருல் பீடர் வில்லியம்ஸ் என்று புரியும். அவ்வழக்கம் நமக்கும் வந்துவிட்டது எஸ். கே சாரி என்ருல் எஸ். கிருஷ்ணமாசாரி என்றும் எஸ் என் ஐயர் என்ருல் நாராயண ஐயர் என்றும், என். ஜி ஐயங்கார் என்ருல் கோபாலஸ்வாமி ஐயங்கார் என்றும் தெரிந்து கொள்ளவேண்டும் 'சில இடங்களில் பெயரை சொல்லாமல் முதல் எழுத்தை சொல்லுவார்கள். ஸி. ஆர். என்ருல் உங்களுக்கு யார் என்று நான் சொல்லவேண்டியதில்லை. 'அந்த எஸ். ஆர். சொன்னுர் என்ருல் எஸ், ராகவன் சொன்னுர் என்று அர்த்தம் பெயர்கள் நம்மிடம் அகப்பட்டுக்கொண்டு படும் பாட்டை பார்த்தீர்களா?

இந்நாளில் பெயரிலும் ஒரு புதுமை கிளம்பி இருக்கிறது முன்னுளில் கற்பகம், லக்ஷ்மி, ராஜம், தஞ்சம், ஜானகி என்று வைப்பார்கள் இந்நாளில் அப்பெயர்கள் வைப்பதில்லை, அதற்குப்பதில் ஸீதா, இந்திரா, ரமா, பிரபா, பிரேமா, சுமதி, சாருமதி இவ்விதம் பெண்களுக்கும், பிரபு, ராம்ஜீ, ஆநந்த சங்கர் என்று ஆண்களுக்கும் நாஸுக்கான பெயர் வைக்கிறார்கள் கல்யாணத்தின் பொழுது முன்னுளில் மணமகனுக்கு ஏற்றப் பெயர் மணமகனுக்கு வைப்பார்கள் அதாவது மணமகன் பெயர் வேணுகோபாலன் என்ருல் மணமகளுக்கு ருக்மிணி என்ருே பாமா என்ருே பெயர் வைப்பார்கள் அதன் பிறகு அவளை அவ்விதமே கூப்பிடவும் ஆரம்பிப்பார்கள். இந்நாளில் ஏனே அந்த வழக்கம் போய்விட்டது,


மற்ருெரு வேடிக்கை மனிதர்களை நேராகப் பார்க்காமல் சில பெயர்களிலிருந்து ஆணு பெண்ணு என்று அறிவது கஷ்டம் சுந்தரம் ராஜம் மீனுட்சி சுந்தரம். ரங்கா (இது ரங்கநாதன் ரங்கநாயகி குறுகிய பெயர்) குப்பு இன்னும் இம்மாதிரி சில பெயர்கள் இரு பாலருக்கும் பொருந்தும் நான் ஒரு சமயம் ஒரு ஆபீஸிற்குக் கடிதம் எழுதினேன் சாதாரணமாக ஆபீஸ் கடிதங்களில் சார், மாடம் என்று அச்சடிக்கப்பட்டிருக்கும். பதில் எழுதும் சமயம் பொருத்தப்படி ஏதாவதொன்றை வைத்துக்கொண்டு மற்றதை அடித்துவிடுவார்கள். எனக்கு வந்த பதில் இரண்டையும் அடிக்கவில்லை. எப்படியிருக்கிறது அவர்கள் சாமர்த்தியம்? இன்னும் சில பேர்கள் இம்மாதிரி சங்கட நிலைமைகளில் மேல் விலாசத்தில் ஸ்ரீ என்று போட்டுவிடுவார்கள் இது ஸ்ரீமான் அல்லது ஸ்ரீமதி இரண்டிற்கும் பொருந்தும் பாருங்கள். பெயர்களும் நம்மை என்ன பாடு படுத்தி வைக்கிறது பாருங்கள்.

என்ன பெயரோ, என்ன ஊரோ போங்கள்; எனக்கு அலுத்துவிட்டது,


---



கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் லெக்சரராக விருந்த ஸ்ரீ வி வேணுகோபால அய்யங்காருடைய குமாரரும் "ஹிந்து" ரிபோர்டருமான ஸ்ரீ வி சேஷாத்திரிக்கும் காலஞ்சென்ற ஸ்ரீ கே வி கிருஷ்ணசாமி அய்யங்காரின் புதல்வி சௌ வேதவல்லிக்கும் சமீபத்தில் தியாகராய நகரில் விவாகம் நடைபெற்றது




பண்டித நேரு, ஜகார்தாவில் பிரவேசித்தபோது அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. மக்கள் புடை சூழ்ந்த வீதியொன்றில் தலைவர் சுகர்னேவுடன் காரில் பண்டித நேரு நிற்கிறார்.



இந்தோனேஸியாவுக்குச் செல்லும் வழியில் பண்டித நேரு பிரயாணம் செய்த "டில்லி" கப்பலுடன் சென்ற நாசகாரிகளில் ஒன்று கடற்படை ஒத்திகைகளைச் செய்தது. அப்போது பண்டித நேரு அணிவகுப்புக்கு வணக்கம் செய்தார்.






நாம் ஹிந்தி பாடங்களில் மொழியைப்பற்றிய இரண்டாம் பாகத்தில் முதல கட்டம் முடிந்துவிட்டது அதை யொட்டி ஒரு பரீக்ஷையும் நடத்திவிட்டோம் பாடம் 17—லிருந்து இரண்டாவது கட்டம் ஆரம்பமாகிறது இதுவரை வெளியாகியுள்ள பாடங்களின் மூலம் ஹிந்தீயின் அடிப்படை விஷயங்களில் உங்களுக்கு ஓரளவு தேர்ச்சி ஏற்பட்டிருக்கும் எனவே இப்போது கட்டம் மாறும்போது முறைகளும் கொஞ்சம் மாறும் முக்யமாக, இனி ஹிந்தீ வாக்யங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒவ்வொரு வாக்யத்துக்கும் கீழே உடனடியாகக் கொடுக்கப்படமாட்டாது ஹிந்தீ வாக்யங்களையெல்லாம் ஓரிடத்திலும், அவற்றிற்கு நேரான தமிழ் வாக்யங்களை வேறோரிடத்திலுமாகச் சேர்த்து மொத்தமாக ப்ரசுரிக்கப்படும். ஏற்கனவே அறிவித்திருந்தபடி பாட்டு கதை, கட்டுரை, நாடகம் எல்லாம் இனி நம் பாடங்களில் படிப்படியாக இடம் பெறும். இந்தப் பாடத்தில் முதன் முதலாக ஒரு பாட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் நீங்கள் தெரியாத வார்த்தைகளைத் தெரிந்து கொள்வதற்கு அகராதி உபயோகிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் நம் பயிற்சிகளில் சில அந்த அடிப்படையிலேயே அமையும் ஊக்கமும், உழைப்பும் இருந்தால் தேர்ச்சி நிச்சயம்

## பாடம் 17-पाठ 17

### (அ) இலக்கணம்-தொழிற்பெயர்

'எழுதுதல்,' 'பேசுதல்,' 'ஆடுதல்,' 'ஓடுதல் என்ற சொற்கள் அந்தந்தத் தொழில்களின் பெயர்கள் இலக்கணத்தில் அவற்றைத் தொழிற் பெயர்கள் (Verbal Nouns) என்கிறோம்.

'எழுது,' 'பேசு,' 'பாடு,' ஓடு' என்ற வினைப்பகுதிகளுடன் 'தல்' என்ற விகுதி சேர்வதால் அந்த வினைகளின் தொழிற் பெயர்கள் உருவாகின்றன

தொழிற் பெயர்களும் ஸாதாரணப் பெயர்ச் சொற்களைப்போலவே வாக்யங்களில் வழங்குகின்றன.

(உ—ம்)

மாடு நல்லது (பெயர்ச்சொல்—எழுவாய்)

ஓடுதல் நல்லது (தொழிற்பெயர்—எழுவாய்)

பேனா முக்யமானது (பெயர்ச் சொல் எழுவாய்)

எழுதுதல் முக்யமானது (தொழிற் பெயர்—எழுவாய்)

ஹிந்தீயில் आ, जा, देख, दौड़, लिख, पढ़, कर முதலியவை வினைப் பகுதிகள். இவற்றுடன் ना என்ற விகுதியைச் சேர்ப்பதால் आना (வருதல்), जाना (போதல்), देखना (பார்த்தல்), दौड़ना (ஓடுதல்), लिखना (எழுதுதல்), पढ़ना (படித்தல்), करना (செய்தல்) முதலிய தொழிற் பெயர்கள் கிடைக்கின்றன ஹிந்தீயிலும் இந்தத் தொழிற் பெயர்கள் ஸாதாரணப் பெயர்ச் சொற்களைப் போலவே பெரும்பாலும் வழங்குகின்றன

(உ—ம்)

पेड़ अच्छा है—மரம் நல்லது.

(எழுவாய்-பெயர்ச்சொல்)

दौड़ना अच्छा है—ஓடுதல் நல்லது

(எழுவாய்-தொழிற்பெயர்.)

दौड़ना என்ற தொழிற் பெயரைத் தமிழில் ஸந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி 'ஓட', 'ஓடுதல்', 'ஓடுவது என்று மூன்றுவிதமாக மொழிபெயர்க்கலாம். இதேமாதிரி ஒவ்வொரு தொழிற் பெயரையும் மூன்றுவிதமாக மொழி பெயர்க்கலாம்

பார்க்க, 'ஓட', 'படிக்க 'எழுத' என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப் படும்போது வினைப்பகுதியுடன் சேரும் ना விகுதி சில ஸந்தர்ப்பங்களில் ने என்று மாறிவிடும்.

(உ—ம்)

देखने आता है—பார்க்க வருகிறான்

खेलने जाता है—விளையாடப் போகிறான்

गाने लगता है—பாட ஆரம்பிக்கிறான்.

आ, जा, लग முதலிய வினைப்பகுதிகளுக்கு முன்பு தொழிற்பெயர்களின் ना விகுதி ने என்று மாறியிருப்பதைக் கவனிக்கவும்.

இதேமாதிரி தொழிற் பெயர்களுக்குப் பின் ஏதேனுமொரு வேற்றுமை உருபு வந்தாலும் அந்த ना விகுதி ने என்று மாறிவிடும்.

(உ-ம்)

जाना+से = जाने से—(போவதால்)

पढ़ना+में = पढ़ने में—(படிப்பதில்)

தொழிற் பெயருக்குப் பின் वाला என்ற விகுதி சேரும்போதும் ना என்பது ने என்று மாறும்.

(உ—ம்)

पढ़ना+वाला = पढ़नेवाला

## देखना+वाला = देखनेवाला

தொழிற் பெயருடன் वाला சேர்ந்த கூட்டுச் சொல் தொழிலைச் செய்கிறவனைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகவோ அல்லது பெயர் உரிச்சொல்லாகவோ இருக்கும்.

இந்த वाला என்ற விகுதி ஆண்பால்—பெண்பால், ஒருமை—பன்மை என்ற நிலைகளுக்கேற்றபடி वाले என்றோ वाली என்றோ மாறும்.

(உ—ம்)

देखनेवाला—பார்க்கிறவன்; பார்க்கிற, பார்க்கும்.

खेलनेवाले—விளையாடுகிறவர்கள்; விளையாடுகிற விளையாடும்.

गानेवाली—பாடுகிறவள்; பாடுகிற, பாடும்.

பெயர்ச் சொல்லுடன் वाला சேர்ந்தால் ஸாதாரணமாக 'காரன்' என்ற அர்த்தம் ஏற்படும்.

(உ—ம்)

मदरासवाला—மதராஸ்காரன்.

### आओ, आइए; देखो, देखिए

முதலியவை ஏவல் வினைகள் என்பது உங்களுக்குத் தெரியும். आओ, देखो என்பவை ஸாதாரணமான கட்டளைச் சொற்கள் आइए, देखिए என்பவை மர்யாதை மிகுந்த வேண்டுகோள்கள். தொழிற் பெயர் சில ஸமயங்களில் மேலே கண்ட இருவித வினைகளுக்கும் நடுவாந்தரமான ஏவல் வினையாகவும் உபயோகிக்கப்படும் அப்போது அது கட்டளையோ அல்லது வேண்டுகோளோபோல் இல்லாமல் பரிவு மிகுந்த புத்திமதி போன்று வழங்கும்.

(உ-ம்)

भाई, साफ़-साफ़ रहना—தம்பீ, சுத்தமாக இரு

हमेशा सच बोलना—எப்போதும் உண்மை பேசு

இந்தச் சொற்கள் கட்டளைகளுமல்ல, வேண்டுகோள்களுமல்ல; பரிவுள்ள புத்திமதிகள் என்பதைக் கவனிக்கவும்

ஹிந்தி அகராதிகளில் ஒவ்வொரு வினைச் சொல்லும் அதன் தொழிற் பெயர் வடிவத்தில்தான் கொடுக்கப்பட்டிருக்கும். தொழிற் பெயர் வடிவத்திலுள்ள ना என்ற விகுதியை நீக்கிவிட்டால் அந்த வார்த்தையின் வினைப்பகுதி இன்னதென்று தெரிந்துவிடும்.

(உ—ம்)

देखना பார்க்க, பார்த்தல் பார்ப்பது (தொழிற் பெயர்)

देख—பார் (வினைப்பகுதி)

இந்த முறையைப் பின்பற்றி நம் பாட முடிவிலுள்ள சொற்களஞ்சியத்திலும் வினைச் சொற்கள் இனி இந்தத் தொழிற் பெயர் வடிவத்தில்தான் கொடுக்கப்படும்

## (ஆ) ஸம்பாஷணை-कसरत

रहीम—कादर, यह क्या करते हो?

कादर—मैं कसरत करता हूँ, रहीम।

र—क्यों करते हो?

का—कसरत करना अच्छा है।

र—कसरत करने से क्या फ़ायदा होता है?

का—कसरत करने से बहुत फ़ायदा होता है। खून साफ़ होता है। हाथ-पैर और बदन मज़बूत बनते हैं। हम तंदुरुस्त रहते हैं।

र—तो, तंदुरुस्त रहने के लिए कसरत करना ज़रूरी है, क्या?

का—हाँ, हाँ! कसरत करनेवाले लोग ही तंदुरुस्त रहते हैं।

र—देखो, मैं भी तंदुरुस्त रहता हूँ। लेकिन मैं तो कभी कसरत नहीं करता।

का—सचमुच तुम कसरत नहीं करते हो, क्या?

र—नहीं, मैं कसरत नहीं करता। मगर रोज़ सवेरे और शाम को खूब दौड़ता हूँ। बस!

का—वाह! दौड़ना भी तो कसरत है!

र—यह क्या बात है!

का—हाँ! कसरत का मतलब सिर्फ़ दंड-बैठक नहीं है। दौड़ना, खेलना, तैरना, सभी तो कसरतें हैं।

र—स्कूल में लड़के क़वायद करते हैं। क्या वह भी कसरत है?

का—हाँ! वह भी कसरत ही है।

र—गाँववाले भी तो बहुत तंदुरुस्त रहते हैं। वे क्या कसरत करते हैं?

का—गाँववाले बहुत मेहनत करते हैं। मेहनत करना भी कसरत है।

र—वे क्या मेहनत करते हैं?

का—गाँववाले सवेरे उठते हैं। फिर काम करने लगते हैं। कुछ लोग खेत जोतते हैं। कुछ लोग ढेंकली चलाते हैं। धोबी लोग कपड़े धोते हैं। औरतें घर का



काम करती हैं। सब गाँववाले बहुत मेहनती लोग हैं।

र—तो क्या, खेत जोतना, ढेंकली चलाना, कपड़े धोना और घर का काम करना भी कसरतें हैं?

का—हाँ! और क्या! वे सब कसरतें ही हैं। भाई, याद रखो—रोज़ सवेरे उठना। खूब कसरत करना। साफ़-साफ़ रहना। ये सब तंदुरुस्ती के लिए बहुत ज़रूरी हैं।

### தமிழில் இதே ஸம்பாஷணை

ரஹீம்—காதர், இதென்ன செய்கிறாய்?

காதர்—நான், தேகப்பயிற்சி செய்கிறேன், ரஹீம்

ர—ஏன் செய்கிறாய்?

கா—தேகப்பயிற்சி செய்வது நல்லது

ர—தேகப்பயிற்சி செய்வதால் என்ன பயன் ஏற்படுகிறது?

கா—தேகப் பயிற்சி செய்வதால் மிகுந்த பயன் ஏற்படுகிறது ரத்தம் சுத்தமாகிறது கை-கால்களும் உடலும் வலுவுள்ளவை யாகின்றன நாம் ஆரோக்யமாக வஸிக்கிறோம். (வாழ்கிறோம்)

ர—அப்படியானால் ஆரோக்யமாக வாழ்வதற்கு தேகப்பயிற்சி செய்வது அவச்யமானதா?

கா—ஆமாம் தேகப்பயிற்சி செய்பவர்கள்தாம் ஆரோக்யமாக வாழ்கிறார்கள்.

ர—பார்! நான்கூட ஆரோக்யமாக இருக்கிறேன் ஆனால் நான் என்னவோ ஒரு பொழுதும் தேகப் பயிற்சி செய்வதில்லை!

கா—உண்மையிலேயே நீ தேகப் பயிற்சி செய்வதில்லையா?

ர—இல்லை. நான் தேகப்பயிற்சி செய்வதில்லை ஆனால் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நன்றாக ஓடுகிறேன். அவ்வளவுதான்!

கா—ஆ! ஓடுவதுகூட தேகப்பயிற்சிதான்!

ர—இதென்ன விஷயம்!

கா—ஆம்! தேகப்பயிற்சி என்றால் தண்டா-பஸ்கி மட்டுமல்ல ஓடுதல், விளையாடுதல், நீந்துதல் எல்லாம்தான் தேகப்பயிற்சிகள்.

ர—பள்ளிக்கூடத்தில் பையன்கள் கவாத்து (ட்ரில்) செய்கிறார்கள் அதுகூட தேகப்பயிற்சியா?

கா—ஆம்! அதுவும் தேகப்பயிற்சிதான்.

ர—க்ராமத்தார்கள் கூடத்தான் ஆரோக்யமாக வாழ்கிறார்கள் அவர்கள் என்ன தேகப்பயிற்சி, செய்கிறார்கள்?

கா—க்ராமத்தார்கள் மிகவும் உழைப்பு செய்கிறார்கள் (உழைக்கிறார்கள்) உழைத்தலும் தேகப் பயிற்சியே

ர—அவர்கள் என்ன உழைக்கிறார்கள்?

கா—க்ராமத்தார்கள் காலையில் எழுந்திருக்கிறார்கள். பிறகு வேலை செய்ய ஆரம்பிக்கிறார்கள் சில ஜனங்கள் வயலை உழுகிறார்கள் சில ஜனங்கள் ஏற்றம் இயக்குகிறார்கள். வண்ணார்கள் துணிகளைத் துவைக்கிறார்கள் ஸ்த்ரீகள் வீட்டு வேலை செய்கிறார்கள் க்ராமத்தார்கள் எல்லோரும் மிகவும் உழைப்பாளிகள்

ர—அப்படியானால் வயலை உழுதலும், ஏற்றம் இயக்குதலும், துணிகளைத் துவைத்தலும், வீட்டு வேலை செய்தலும்கூட தேகப் பயிற்சிகளா?

கா—ஆம்! வேறென்ன! அவையெல்லாம் தேகப்பயிற்சிகளே தம்பீ, ஞாபகம் வைத்துக்கொள்-தினந்தோறும் காலையில் எழுந்திரு நன்றாக தேகப்பயிற்சி செய் சுத்தமாக இரு இவையெல்லாம் ஆரோக்யத்துக்கு மிகவும் அவச்யமானவை

## (இ) பாட்டு-आओ भाई

आओ, भाई, तुम भी आओ।
गाओ, हिंदी गाना गाओ।
आम यही मीठा है, खाओ।
सबके साथ यहाँ से जाओ॥

### இதன் வசன நடை

भाई, आओ। तुम भी आओ। गाओ हिंदी गाना गाओ। यही आम मीठा है। खाओ। यहाँ से सबके साथ जाओ।

### இதன் தமிழ் அர்த்தம்

தம்பீ, வா நீயும் வா, பாடு ஹிந்தி பாட்டுப் பாடு இந்த மாம்பழம்தான் இனிப்பாக இருக்கிறது. சாப்பிடு இங்கிருந்து எல்லோருடனும் போ.

## (ஈ) குறிப்புக்கள்

1. வினைப்பகுதியுடன் ना என்ற விகுதியைச் சேர்ப்பதால் தொழிற் பெயர் அமைகிறது

2. தொழிற் பெயர் பெரும்பாலும் பெயர்ச்சொல்லைப் போலவே வழங்குகிறது

3. आ, जा, लग, वाला முதலியவற்றிற்கு முன்பு தொழிற் பெயரின் ना விகுதி ने என்று மாறுகிறது

4. தொழிற்பெயருடன் வேற்றுமை உருபு சேரும்போதும் ना என்பது ने என்று மாறுகிறது

5. वाला என்ற விகுதி பெயர்ச்சொல், தொழிற் பெயர், இரண்டுடனும் சேர்கிறது பெயர்ச் சொல்லுடன் சேரும்போது ஸாதாரணமாக 'காரன்' என்று பொருள்படும் ஆண்பால்—பெண்பால், ஒருமை—பன்மை என்ற நிலைகளுக்கு ஏற்றபடி वाला என்பது वाले என்றோ वाली என்றோ மாறுகிறது

(உ—ம்)

मिठाईवाला—மிட்டாய்க்காரன்

गाँववाले—கிராமத்துக்காரர்கள்; க்ராமத்தார்கள்

बंबईवाली—பம்பாய்க்காரி.

தொழிற் பெயருடன் वाला சேர்ந்தால், அந்தத் தொழிலைச் 'செய்கிறவன்' செய்யப் போகிறவன், 'செய்யும்' அல்லது 'செய்கிற' என்று அர்த்தம் ஏற்படும்

(உ—ம்)

देखनेवाला—பார்க்கிறவன், பார்க்கப் போகிறவன், பார்க்கும், பார்க்கிற.

6 கேள்வி வாக்யங்களில் क्या என்ற கேள்விச்சொல் முதலிலேயே வரவேண்டுமென்ற கட்டாயமில்லை; முடிவிலும் வரலாம்

7 बस—என்றால் ஸாதாரணமாகப் 'போதும்' என்றுதான் அர்த்தம். எனினும் ஒரு ஆச்சர்யமான ஸம்பவத்தையோ அல்லது எதிர்பாராத திடீரென்ற ஸந்தர்ப்பத்தையோ விளக்கவும் அது உபயோகப்படும். அப்போது बस என்ற சொல்லுக்கு 'ஆஹா!' அல்லது 'அவ்வளவுதான்!' என்றும் அர்த்தம் ஏற்படும்

8 तो என்பது ஹிந்தியில் ஒரு விசித்ரமான வார்த்தை ஸாதாரணமாக அதற்கு 'அப்படியானால்' என்று அர்த்தம் சொல்லலாம் ஆனால் இரண்டு பொருள்களின் அல்லது ஸம்பவங்களின் மாறுபட்ட தன்மையை விளக்கவும் அது உபயோகப்படும் அப்போது அதன் அர்த்தத்தை ஸந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி முடிவு செய்ய

வேண்டும். திட்டமாக ஒரேவித அர்த்தம் சொல்லிவிட முடியாது பழகப் பழக நாளடைவில்தான் அதன் சரியான உபயோகம் விளங்கும்.

9 ஹிந்தீ அகராதிகளில் ஒவ்வொரு வினைச்சொல்லும் அதன் தொழிற் பெயர்வடிவில் தான் கொடுக்கப்பட்டிருக்கும். தொழிற் பெயர் வடிவத்திலுள்ள ना என்ற விகுதியை நீக்கிவிட்டால் அந்த வார்த்தையின் வினைப்பகுதி இன்னதென்று தெரிந்துவிடும்

10 ஹிந்தியில் பாட்டுக்களைப் படிக்கும்போது தேவைக்கேற்றபடி உச்சரிப்பு விதிகளைக் கொஞ்சம் தளர்த்திக்கொள்ளலாம் உச்சரிப்பு விதிகளைவிட அப்போது தாளக் கட்டு தான் முக்யமாகக் கவனிக்கப்படும் எனவே மேலேயுள்ள आओ भाई என்ற சின்னஞ்சிறு பாட்டைக் தாளக் கட்டுடன் பாடிப் பழகிக் கொள்ளுங்கள் படிப் படியாகப் பெரிய பாட்டுக்களும் பின்பு கவிதைகளும் ப்ரசுரிக்கப்படும்.

### (உ) சொற்களஞ்சியம்

कसरत—(பெ பா.) கஸ்ரத்; தேகப் பயிற்சி

फ़ायदा—(ஆ பா ) லாபம், பயன், ப்ரயோஜனம்.

खून—(ஆ. பா.) ரத்தம்.

हाथ—(ஆ பா ) கை

पैर—(ஆ. பா.) கால்.

बदन—(ஆ பா.) சரீரம் உடம்பு

मज़बूत—பலமுள்ள. வலிமையுள்ள.

तंदुरुस्त—ஆரோக்யமான.

तंदुरुस्ती—(பெ. பா.) ஆரோக்யம்.

ज़रूरी—அவச்யமான, முக்யமான,

पर / मगर / लेकिन —ஆனால்

सचमुच—உண்மையில், வாஸ்தவமாக.

सवेरा—(ஆ. பா.) காலை.

सवेरे—காலையில்.

खूब—நன்றாக. நிறைய.

बस—போதும்; அவ்வளவுதான்.

दौड़ना—ஓட, ஓடுதல்

मतलब—(ஆ. பா.) கருத்து; அர்த்தம், உத்தேசம்.

सिर्फ़ / ही —மாத்ரம் (only),

दंड-बैठक—தண்டா-பஸ்கி.

तैरना—நீந்த; நீந்துதல்.

कवायद—(பெ. பா ) கவாத்து. ட்ரில் (Drill)

मेहनत—(பெ பா ) உழைப்பு,

मेहनती—உழைப்பாளியான.

खेत—(ஆ, பா ) வயல்.

जोतना - உழ. உழுதல்.

ढेंकली—(பெ பா.) ஏற்றம் (கிணற்றிலிருந்து நீர் இறைக்க உபயோகப்படும் ஸாதனம்)

चलाना—நடத்த நடத்துதல்; ஓட்ட, ஓட்டுதல்; இயக்க இயக்குதல்.

धोबी—(ஆ பா.) வண்ணான்.

धोना—அலம்ப. அலம்புதல்; கழுவ, கழுவுதல். துவைக்க, துவைத்தல்

उठना—எழுந்திருக்க, எழுந்திருத்தல்; எழும்ப, எழும்புதல்

याद—(பெ பா ) ஞாபகம் நினைவு.

रखना—வைக்க; வைத்தல்

गीत / गाना —(ஆ பா.) பாட்டு.

कभी—எப்பொழுதாவது, ஒரு பொழுதும்.

कहीं—எங்காவது, எங்கேனும், எங்கும்.

## பயிற்சி 17-अभ्यास 17.

### (அ)

கீழே அடைக்குறிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் வினைப்பகுதிகளைத் தொழிற் பெயர்களாக மாற்றி அவைகளில் பொருத்தமான வற்றைக் கொண்டு வாக்யங்களைப் பூர்த்தி செய்யவும்:—

1. हम को नदी में--पसंद है। (सो, जा, तैर)

2. कसरत--सबके लिए ज़रूरी है। (कर, देख, खेल)

3. मेहनत--से फ़ायदा होता है। (बन, कर, रह)

4. कपड़ा--बाज़ार जाओ। (कर, खरीद, खा)

5. बहुत चाय—अच्छा नहीं है। (खा, पी, देख)

6. कमला रोज़ हिंदी--यहाँ आती है। (देख, कर, सीख)

7. खूब--से खून साफ़ होता है। (दौड़, लिख, पढ़)

8. भात--वाले यहाँ बहुत हैं। (पी, खेल, खा)

9. शहर--के लिए गाड़ी चाहिए। (उठ, जा, दौड़)

10. लड़के मैदान में--लगते हैं। (आ, खेल, खा)

### (ஆ)

ஹிந்தீயில் மொழிபெயர்க்கவும்:-

1 தம்பி தினந்தோறும் காலையில் குளி (புத்திமதி.)

2 குளிப்பதால் சரீரம் சுத்தமாகிறது.

3 காலையில் குளிப்பவர்கள் ஆரோக்யமாக இருக்கிறார்கள்.

4 நதியில் நீந்துவதால் உடல் வலுவுள்ளதாகிறது

5 உழைப்பது எங்களுக்குப் பிடித்தமானது.

6 பகலில் தூங்குவது நல்லதல்ல

7 பார், அவள் பாட ஆரம்பிக்கிறாள்!

8 நீ எங்கே விளையாடப் போய்க் கொண்டிருக்கிறாய்?

9 பள்ளிக்கூடத்தில் கூச்சலிடுவது நல்லதா?

10 பழம் சாப்பிடுவதால் என்ன பயன் ஏற்படுகிறது?

(விடைகள் அடுத்த இதழில்)

जय हिंद! जय हिंदी!






## 28

'முதலில் உங்களை இந்த அவேளையில் எழுப்பியதற்கு மன்னித்துக்கொள்ளுங்கள்' என்றேன்

'நன்றாக இருக்கிறது மன்னிப்பு என்னடி வைத்திருக்கிறது இதில்? எங்கே வந்தாய்? என்ன ஸமாசாரம்?' என்றாள்.

'நன்றாக சிக்கிக்கொண்டு விட்டார்.'

'நான்கூட நினைத்தேன் இன்று சுமுகமாக வந்து உட்கார்ந்துகொண்டு புசிக்கொண்டிருக்கிறார் இதில் எப்படியும் ஏதாவது விசேஷம் இருந்துதான் ஆகவேண்டுமென்று மனுஷ்யன் என்னவோ தங்கமானவர் அதில் கொஞ்சம்கூடச் சந்தேகம் இல்லை ஆனால், சகவாஸ தோஷம் அவரை அப்படி ஆட்டிவைக்கிறது. என்ன, சொல்லுகிறாய்!''

'பாடமே தலைகீழாக மாறிவிட்டது'

'என்ன ஸமாசாரம்?'

'அதெல்லாம் இந்த அவசரத்தில் சொல்லி முடியாது. ஸாவகாசமாகச் சொல்லவேண்டிய விஷயம் தனக்கும், அந்த சினியாக்காரி நளினிக்கும் சம்பந்தமே கிடையாதாம்'

'சரிதான் இதற்கா ஓடிவந்தாய்? அவர்கூட எங்காவது தனக்கும் அவளுக்கும் சம்பந்தம் உண்டு என்று ஒப்புக்கொள்வாரா? என்னடியம்மா என்று பார்த்தேன் இதைக் கேட்டுக்கொண்டா ஓடிவந்தாய்?'

'இல்லை மாமி! அவர் தகுந்த ருஜுக்களுடன் சொல்லுகிறார். பார்த்தால் நம்பும்படியாகத்தான் இருக்கிறது'

'என்ன, அப்படி நம்பும்படியாகச் சொல்லிவிட்டார்?'

'அதையெல்லாம் காலையில் விவரமாகச் சொல்லுகிறேன் இப்பொழுது ஒரு தகவலுக்காகப் பாதி வார்த்தையில் உங்களிடம் ஓடிவந்தேன்'

'என்ன தகவல் வேண்டும்?'

'நீங்கள் எனக்கு ஊருக்கு ஒரு போட்டோ அனுப்பி வைத்தீர்களல்லவா?'

'ஆமாம் நளினியும் அவரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோ'.

'அதை அவரிடம் காட்டினேன்'.

'அப்படியா? விஷயம் அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டதா?'

'நான்தான் முதலிலேயே சொன்னேனே. இன்று வகையாக சிக்கிக்கொண்டு விட்டார் என்று வார்த்தையோடு வார்த்தையாக இதையும்தான் சொல்லிவைத்துவிடுவோமே என்று சொல்லிவிட்டேன் எத்தனை நாளைக்குதான் மூடு மந்திரமாக இருக்கிறது? நம் மனதுக்கும்தான் ஒரு நிச்சயம் ஏற்பட்டு விடட்டுமே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு படத்தை அவரிடம் காட்டிவிட்டேன்'

'என்ன சொல்கிறார் அதற்கு?' இது எப்படி உனக்குக் கிடைத்தது என்று கேட்டாரா?'

'கேட்காமலிருப்பாரா? கேட்டார்!'

'என்ன சொன்னாய்?' எங்கோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன் அதில் இருந்தது என்றாயாக்கும்?'

'அப்படியெல்லாம் சொல்லவில்லை. உண்மையையே சொல்லிவிட்டேன்.'

'என்னது' நான் அனுப்பினதாகச் சொல்லிவிட்டாயா என்ன?

'ஆமாம், போடி என்னடி அப்படிப்பட்ட அவசரம் உனக்கு? ஒரு வார்த்தை என்னைக் கேட்டிருக்கக்கூடாதா? அவசரப்பட்டுவிட்டாயே!'

'ஏன், உங்கள்மீது ஏதாவது கோபித்துக்கொள்ளப் போகிறாரேயென்று யோசிக்கிறீர்களோ? அதெல்லாம் எவ்வளவோ வாக்குறுதிகள் வாங்கிக்கொண்டுதான் சொன்னேன் ஆகவே. அந்தமாதிரியான பயம் ஒன்றும் உங்களுக்கு வேண்டாம்.'

'அதற்கில்லையடி நான் சொல்கிறது வேறு சரி! என்ன சொன்னார் அதற்கு?'.

'படத்தைக் காண்பித்தேன். அதைப் பார்த்ததும் அசந்துவிடுவார் என்றுதான் நினைத்தேன் ஆனால் அதைப் பார்த்துவிட்டு 'ஆமாம் இதன் மீதி எங்கே? என்றார்.

'கேட்டாரோலியோ? தெரியுமேனக்கு என்ன பதில் சொன்னாய் நீ?'

'என்ன பதில் சொல்லுகிறதுமாமீ? 'எனக்கென்ன தெரியும்? மீதியாவது! இவ்வளவுதான்' என்றேன்.'

'மீதி உண்டு உனக்குத் தெரியாது யார் உனக்குப் படத்தை அனுப்பிவைத்தார்களோ அவர்களைப்போய் கேட்டுப் பார் என்றார் அதற்காகத்தான் இந்த அவேளையில் உங்களிடம் ஓடிவந்தேன். அதென்ன ஸமாசாரம்? எனக்கொன்றும் புரியவில்லையே!' என்றேன்.



'நீங்கள் எனக்கு மனப்பூர்வமாய் தவறு செய்தால்கூட நான் அதை நல்லதென்றே எண்ணக்கூடியவள் உங்கள் விஷயத்தில் நான் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறேன். அப்படியிருக்க, எதற்காக என்னை மன்னிக்கச் சொல்லுகிறீர்கள்?' என்றேன்.

'நானும் உன் விஷயத்தில் அதிகமான விசுவாஸம் வைத்துவிட்டதனால்தான் இந்தத் தவறு நேர்ந்துவிட்டது எல்லாரையும் போல் நானும் 'ஏனோதானோ' வென்று இருந்துவிட்டிருந்தால் இப்படியெல்லாம் நேர்ந்திருக்காதல்லவா? 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்று சொல்லுவார்களே அந்த மாதிரியல்லவோ போய் முடிந்துவிட்டிருக்கிறது! இந்தமாதிரி தகவல் என்று எனக்கு ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நான் அந்தப் படத்தை அவருக்குக் காண்பித்திருக்கவே சொல்லியிருக்கமாட்டேனே' என்றாள்

'எனக்கு எப்படி மாமி தெரியும்?

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்ற தோரணையில் ஏதோ கதையெல்லாம் அளந்துகொண்டு போகிறீரே', இதோ கையும் களவுமாகப் பிடித்துவிட்டிருக்கிறேன் இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்கிறமாதிரியில் அந்தப் படத்தை அவரிடம் காட்டினேன் 'ஏன்? இதில் என்ன சிக்கல் அடங்கியிருக்கிறது? சொல்லி விடுங்களேன்' என்றேன்

இதைச் சொன்னவுடனே மாமியின் முகத்தில் திடீரென்று ஓர் விகாரம் ஏற்பட்டதை விளக்கு வெளிச்சத்தில் கவனித்தேன் சரி! இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று மாத்திரம் மனதில் பட்டுவிட்டது.

மாமி ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்

'ஏன்! என்ன மாமி? என்ன ஸமாசாரம்?' என்றேன்.

'கல்யாணி! நீ என்னை மன்னிக்கவேண்டும்' என்று சொல்லி, மாமி என் இரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

மாமியின் கைகள் வட வட வென்று உதறிக்கொண்டிருந்தன.

'இதென்ன கஷ்டகாலம்! கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக ஆகிவிட்டதே' என்று என் மனதில் ஓரே திகிலாகப் போய்விட்டது

'என்ன மாமி இது! தூக்க மயக்கமா என்ன? நான் எதற்கு உங்களை மன்னிக்கிறது? என்றேன்

'கல்யாணீ! கொஞ்சம் நாழியானாலும் ஆகட்டும் தனக்கும் நளினிக்கும் சம்பந்தமில்லை என்பதற்கு அவர் என்ன காரணங்கள் சொல்கிறார்? அதை நீ சுருக்கமாகவாவது இப்பொழுதே சொல்லித்தான் ஆகவேண்டும்' என்றாள் மாமி

'கோபுவைப்பற்றி அவர் சொன்னவைகளை மட மட வென்று சுருக்கமாகச் சொல்லிவிட்டேன்.

'கல்யாணி! உண்மையாகச்சொல்கிறேன், நான் உனக்கு ஏதோ நல்லதைச் செய்யவேண்டுமென்றுதான் இந்த மாதிரி செய்தேன் ஆனால், அதில் ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டது அதையும் கெட்ட எண்ணத்துடன் நான் செய்யவில்லை ஆனால், எதை நான் அற்பமென்று நினைத்தேனோ அதுதான் பெரும் தவறாகப் போய்விட்டதென்று தெரிகிறது என்றாள்.

உடனே மாமி உள்ளே சென்று பெட்டியைத் திறந்து சிறிதுநேரம் எதையோ தேடிவிட்டுக் கடைசியில் கையில் ஒரு போடோவுடன் வந்து சேர்ந்தாள.

'அவர் அந்தப் படத்தின் மீதி எங்கே என்று கேட்டதாகச் சொன்னாயே! இதுதான் அது' என்று மாமி என் கையில் அந்தப் படத்தைக் கொடுத்தாள்

'நான் விளையாட்டுக்குச் சொல்வதாக நினைக்காதீர்கள் உண்மையாகவே சொல்கிறேன், எல்லாம் எனக்குப் புதிராகவே இருக்கிறது' என்றேன்.

'நிஜமாகவே உனக்குப் புதிர்மாதிரிதான் இருக்கும் உனக்கு என்ன தெரியும் பாவம்! நான் உனக்கு அனுப்பி வைத்தேனே, அதிலிருந்து கத்தரித்து எடுத்தது இது' என்றாள் மாமி

'அதான் அவர் மீதி எங்கே என்று கேட்டார்; இந்தப் படத்தில் இருப்பது யார்? என்றேன்.

'அவர் குறிப்பிடுகிறாரே அந்த கோபுதான் நீ கூடப் பார்த்திருப்பாயே, அடிக்கடி இங்கே வந்து போய்க்கொண்டிருக்கிறதே என்றாள்

'ஆகா, பார்த்திருக்கிறேன். அடிக்கடி அந்த நளினியுடன் காரில் வந்துவிட்டுப் போகிறதே இதை நான் நளினியின் மோட்டார் டிரைவர் என்றல்லவோ எண்ணிக் கொண்டிருந்தேன்?' என்றேன்.



நானும் அதேபோலத்தானடியம்மா ஏமாந்தேன். நீ ஊருக்குப் போயிருந்தபோது இந்தப் பிள்ளை அடிக்கடி இங்கேவந்து போய்க்கொண்டிருக்கும், உன் அகத்துக்காரர். நளினி, இது மூன்று பேரும் பீச்சில் அடிக்கடி சேர்ந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள் சில

சமயம் நளினியின் தாயாரும் இவர்களுடன்கூட இருப்பதுண்டு நான் இந்தப் பிள்ளைக்கும் நளினிக்கும் சம்பந்தம் இருக்குமென்று சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை இதை ஒரு 'ப்ரோகர்' என்றும் உன் அகத்துக்காரருக்கும் நளினிக்குமிடையே இது தொடர்பை உண்டுபண்ணி வைக்கிறதென்றும் நானும் என் அகத்துக்காரரும் முடிவு செய்துவிட்டோம் நளினியும் உன் அகத்துக்காரரும்

போடோ எடுத்துக்கொண்ட போது இதுவும்கூட இருந்திருக்கிறது, அவர்கள்தான் முக்யம் என்று கருதி இதை மாத்திரம் அதிலிருந்து கத்தரித்துவிட்டு மீதியை—உன் அகத்துக்காரரும் நளினியும் இருக்கும் பாகத்தை மாத்திரம்—உனக்கு அனுப்பிவைத்தேன். இப்பொழுது நீ சொல்வதைப் பார்த்தால் நளினிக்கும் இந்தப் பிள்ளைக்கும் ஒரு முடியைப் போட்டுவைக்க உன் அகத்துக்காரரல்லவோ 'ப்ரோக்கராக' இருந்திருப்பதாகத் தெரிகிறது! உண்மையாகச் சொல்லுகிறேன் கல்யாணி! நாங்கள் சொப்பனத்தில்கூட இந்தமாதிரி நினைக்கவில்லை என்னை அறியாமல் நான் உனக்குப் பெருந் துரோகம் செய்துவிட்டேன் என்னை மன்னித்துவிடு என்று மீண்டும் என் கைகளிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மாமி கெஞ்சினாள்.

அப்பொழுது அவளுடைய கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்ததைக் கவனித்தேன். முகம் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

'என்ன மாமி இதெல்லாம். நன்றாகத்தானிருக்கிறது! கையை விடுங்கள் முதலில் நீங்கள் வேண்டுமென்றா செய்தீர்கள்? ஒரு துரோகமுமில்லை நீங்கள் நல்லதைச் செய்யவேண்டுமென்றுதான் செய்தீர்கள் அது இப்படி வந்து முடிந்தது. அதற்கு யார் என்ன செய்யலாம்! மன்னிப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் மீதி விஷயங்களைக் காலையில் ஸாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம் அவர் காத்துக்கொண்டிருப்பார் நான் வருகிறேன். நீங்கள் மனதில் ஒரு சிந்தையும் வைத்துக்கொள்ளாமல் நிம்மதியாய்ப்போய் தூங்குங்கள்' என்று சொல்லிவிட்டு மாமி கொடுத்த அந்த மீதி போட்டோவுடன் மாடிக்குச் சென்றேன்.

'என்ன சொல்லுகிறாள் வீட்டுக்கார மாமி?' என்றார் என் கணவர் சிரித்துக்கொண்டே.

'இதோ இதைக்கொடுத்தாள் என்று மாமி கொடுத்த அந்தப் படத்தை அவரிடம் கொடுத்தேன்

'பரவாயில்லையே, மாமி நல்லவள்தான்! 'மீதியாவது கதையாவது அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது படமே அவ்வளவுதான்' என்று சொல்லி அனுப்பிவிடுகிறாளோவென்று பார்த்தேன்; பரவாயில்லை. இருதரப்பினருக்கும் வேண்டியவள்போலிருக்கிறது' என்று சொல்லிவிட்டு ஓர் விஷமச் சிரிப்பு சிரித்தார்.

'இந்தமாதிரியான அசட்டுப் பரிகாசம்தானே வேண்டாமென்கிறேன். அவள்மீது தப்பு சொன்னால் தோஷம்



உண்டு என்மேலுள்ள ஒரு பிரீதியினால் அவள் அவ்விதம் செய்திருக்கிறாள்' என்றேன்

'வாஸ்தவந்தான் சில அசட்டு ஜனங்களின் இந்த மாதிரியான அனாவசியமான பரிவினால்தான் நன்றாகவுள்ள பல குடும்பங்கள் அதோகதியாகப் போய்விடுகின்றன. இப்படித்தான் எங்கள் ஊரில் ராஜாமணி என்று ஓர் பையன் இருந்தான். அவன் அகமுடையாள் பாவம், கொஞ்சம் நவீனப்போக்குள்ளது. பட்டணத்தில் பிறந்து வளர்ந்த பெண் அதன் அகமுடையானுக்கு பம்பாயில் உத்யோகம் சௌகரியமாக இடம் கிடைக்கவில்லையென்று அகமுடையாளை ஊரிலேயே விட்டு வைத்துவிட்டு, அவன்மட்டிலும் பம்பாயில் இருந்து வந்தான். நல்ல குரல் சிக்ஷையும் உண்டு நன்றாகப் பாடும், கலியாணம் கார்த்தி என்றால் சகஜமாக வந்து கிராக்கி இல்லாமல் பாடும் ஆ, ஊ. என்று பூதங்கித்தனமெல்லாம் செய்யாமல் தாராளமாகப் பழகும் நாட்டுப்புறத்து ஜனங்களுக்கு இதெல்லாம் என்ன தெரிகிறது? உடனே ஒரு பிருகஸ்பதி அதன் அகமுடையானுக்கு ஓர் கடிதம் எழுதிவிட்டான் நீ எனக்கு ஆப்த சிநேகிதன் என்ற முறையில் நான் உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உன் மனைவியைப்பற்றி இங்கு வம்பளப்புகள் காதுகொண்டு கேட்கமுடியவில்லை வம்பளப்பு மாத்திரமில்லை நானும் நேரில் பார்த்து மனம் தாளாமல்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். கோடியகத்து ராஜாமணியுடன் அவள் பழகும்மாதிரி நன்றாக இல்லை நீ உடனே இங்குவந்து அவளை அழைத்துக்கொண்டு போகவும் வேறுவிதமாக நினைக்காதே; என்று எழுதிப் போட்டுவிட்டான். பம்பாயிலிருக்கும் அவனுக்கு என்ன தெரிகிறது பாவம்! உடனே ஊருக்கு வந்தான். அந்தப் பெண்ணுக்கு ஜீவனாம்ஸத்தைக் கொடுத்தான்' வேறு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான் உண்மையில் அந்தப்பெண் ஒரு பாவமும் அறியாது பாவம் கொஞ்சம் படித்தபெண் ராஜாமணியின் அகமுடையாளும் படித்தவள். அவளும் பட்டணத்தில் பிறந்து வளர்ந்தபெண் இருவரும் சிநேகமாகிவிட்டார்கள் அவள் இவள் வீட்டுக்கு அடிக்கடி வருவாள் இவள் அடிக்கடி அவள் வீட்டுக்குப் போவாள் மீதியெல்லாம் ஒரே நாட்டுப்புறம். அவர்களுடன் அதிகமாக இவர்கள் பழகுவதில்லை. பழகவேண்டாம் என்ற கெட்ட எண்ணம் கிடையாது அவர்களுடைய போக்கும் இவர்களுடைய போக்கும் ஒத்துவரவில்லை இது ஊர் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை அவ்வளவுதான். உடனே பம்பாய்க்குக் கடிதம் பறந்தோடியது பாவம் அந்தப்பெண் கஷ்டம் தாங்காமல் கிணற்றில் விழுந்து பிராணனை மாய்த்துக்கொண்டது. வீண் குறும்புதானே! உண்மையாக இருந்து எழுதினாலும் தொலைந்துபோகிறதென்று சொல்லலாம் ஒரே பொய்! அபாண்டமான பழி! அதேமாதிரிதானே இருக்கிறது இதுவும்.

வீட்டுக்கார மாமிக்கு உன் விஷயத்தில் தனிப்பட்ட அக்கறை இருக்கலாம் இருக்கட்டும் வேண்டாமென்று சொல்லவில்லை விஷமத்தனமான காரியம் செய்யாமல், 'உன் அகத்துக்காரரின் போக்கு கொஞ்சநாளாய் சந்தேகத்துக்கு இடமளிக்கக்கூடியதாய் இருக்கிறது, யாரோ ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு அத்தாட்சியாக இந்த போட்டோவை அனுப்புகிறேன்' என்று குறிப்பிட்டுவிட்டு, போட்டோவில் கத்தரிப்பு வேலையெல்லாம் செய்யாமல் அப்படியே அனுப்பி உன் முடிவுக்கு விட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அதுதானே முறை? அதைவிட்டுவிட்டு இந்த வீண் வம்பெல்லாம் எதற்கு? இதனால் நமக்குள் எவ்வளவு சந்தேகத்தை உண்டுபண்ணிவிட்டிருக்கிறாள் பார்! நீதானாகட்டும் ஊரிலிருந்து வந்தவுடனே இந்த போட்டோவை என்னிடம்காட்டி, 'என்னென்னவோ விஷயங்கள் காதில்படுகிறது அது எவ்வளவு தூரம் உண்மை என்பது எனக்குத் தெரியாது என் காதில் விழுந்ததைச் சொல்லி விட்டேன்' என்று என்னிடம் சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? நீ சுற்றிவளைத்துப் பேசியதன் கருத்தெல்லாம் இப்பொழுதல்லவோ எனக்குத் தெரிகிறது! நல்ல வீட்டுக்காரமாமி! நல்ல சிநேகம் பிடித்தாய்! என்றார்.

'அவள்மீது பிழை சொல்லி உபயோகமில்லை. அவளுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டு, பிறகு நடைபெற்ற சம்பவங்களை அதற்கனுகுணமாகவே வைத்துப் பார்த்திருக்கிறாள். இது உலக ஸ்வபாவம். அதனால்தான் இந்தத் தவறு நேர்ந்துவிட்டது. அனாவசியமாக அவள் மீது கோபித்துக்கொள்வதில் உபயோகமில்லை. எனக்கு நல்லதைச் செய்ய வேண்டுமென்றுதான் அவள் இதைச் செய்திருக்கிறாள் என்னைக் கெடுத்துவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் அவள் இதைச்செய்யவில்லை. அதில் மட்டும் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது இந்த மட்டோடு இது இருக்கட்டும் நீங்கள் என்னுடைய நகைகளையெல்லாம் எதற்காகவாங்கிச் சென்றீர்கள்?' என்றேன்.

'பேஷ். சுற்றி வளைக்காமல் அப்படிக் கேள் பதில் சொல்லக் காத்துக்கொண்டிருக்கிறேன் நளினி அவளுடைய தாயாரின் இஷ்டத்துக்கு இணங்கிவராமற்போகவே அவள் தனது நகைகளையெல்லாம் பெண்ணினிடமிருந்து வாங்கிக்கொண்டு தனியாகப் போய்விட்டாள். ஆகவே நளினியை ரக்ஷிக்கும் பொறுப்பு கோபுவுக்கு ஏற்பட்டுவிட்டது அதற்காகத்தான் உனது நகைகளை வாங்கி அவனிடம் கொடுத்தேன். ஜவுளிக்கடை பாக்கியெல்லாம்கூட இதற்காகத்தான் நான் வீட்டு செலவுக்குக்கூடப் பணம் கொடுக்கமுடியாமல் போய்விட்டதும் இதனால் நான் அடிக்கடி லீவ் எடுக்கவேண்டியதாகப் போய்விட்டது. இதைக்கண்டு மானேஜர் 'இந்தமாதிரி அடிக்கடி லீவ் எடுப்பதானால் வேலைக்கு வரவேண்டியதில்லை' என்று சொல்லிவிட்டார். உடனே நான் வேலையை ராஜிநாமா செய்துவிட்டேன்' என்று அவர் சொன்னதும், 'உத்யோகம் போனவிஷயங்கூடத் தெரியும்' என்றேன்

'பரவாயில்லையே. கெட்டிக்காரிதான் உனக்காகத்தான் வீட்டுக்காரமாமி. வீட்டுக்காரமாமா எத்தனையோ ஸி ஐ டிக்கள் சம்பளம் இல்லாமல் ராத்திரிபகல் ஓயாமல் வேலை செய்துகொண்டிருக்கிறார்களே. இது தெரியாமல் இருக்குமா? என்றார்

இப்பொழுது ஏன் இந்த நகைகளைத்திருப்பிக்கொடுத்துவிட்டீர்கள்?' என்றேன்.

'நான் சொல்லவந்தது அதைப்பற்றித்தான். அதைச் சொல்லவிடாமல் நடுவில் ஏதோ கிளைக்கதைகளையெல்லாம் கொண்டுவந்துவிட்டு விட்டாய் இன்று ஓர் சுதினம் நமது வாழ்க்கையையே மாற்றியமைக்கப்போகும் ஓர் நன்னாள் சொல்கிறேன் கேள் என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டு விஷயத்தைச்சொல்ல ஆரம்பித்தார்.

ஆகா! காதில் அமிர்தவர்ஷம் வர்ஷிக்கிறமாதிரி இருந்தது: இந்தமாதிரி வார்த்தைகளைக்கேட்டு எத்தனை நாள் ஆகிவிட்டது! உம் என்று முகத்தை வைத்துக்கொள்வதும் கபடஹிருதயத்துடன் பேசுவதும் கடைசியில் அவர் கோபித்துக்கொண்டு செல்வதும். கொஞ்சநாளைக்கு வீட்டுக்கே வராமலிருப்பதும், நான் இரவெல்லாம் தூங்காமல் படுக்கை நினையப் புலம்புவதும், என்னதான் கஷ்டத்தை அனுபவித்தேன்

இவருடைய இந்த வார்த்தையைக் கேட்கும்போது அதற்கெல்லாம் ஓர் விடிவுகாலம் வந்துவிட்டதென்றல்லவோ தோன்றுகிறது அப்படிப்பட்ட ஓர்காலமும் இனி வரப்போகிறதா என்று மனது என்னதான் தவியாய்த் தவித்தது

'முப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லை முப்பது வருஷம் கெட்டவனுமில்லை, என்று சொல்வது பின் எதற்காக?

ஆகவே அந்த சந்தோஷ ஸமாசாரத்தைக் கேட்க என் காதுகளை நன்கு நீட்டிக்கொண்டு உட்கார்ந்தேன்.

(தொடரும்)






இந்தியாவுக்கு வெளியே பட்டாளத்தில் சேவை செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சமயம் என் உடம்பு சரியாயில்லை வயிற்றுக் கடுப்பும், ஜுரமும் மிகக் கொரேமாக வாட்டின படாத அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தேன்

மிலிடரி ஆஸ்பத்திரியில் சிகித்சை பெறப்போனேன் டாக்டர் ஒவ்வொரு நோயாளியாக பார்த்துக்கொண்டே வந்தார். என்னையும் பரிசோதித்து தக்க மருந்து கொடுக்கும்படி கூறிவிட்டுப் போய்விட்டார்.

இந்து மிலிடரி டாக்டரை எங்கோ பார்த்திருந்ததாக என் ஞாபகம் ஓடிற்று

எங்களூரில், டாக்டர் ராஜு முதலியார் ஆஸ்பத்திரியில் ஜூனியர் டாக்டராக ஒருவர் வேலை பார்த்து வந்தார் அவர் பெயர் மோஹன் அவரே தாம் இந்த மிலிடரி டாக்டர் என்பதை வெகு சீக்கிரத்திலேயே அறிந்து கொண்டேன் அவரிடம் அதிகம் பேச வேண்டும் போலிருந்தது எனக்கு.

மிலிடரி டாக்டர் மோஹன் நோயாளிகளுக்கேற்ப சிறந்த வைத்திய சேவை செய்து வந்ததை கண்முன்னாலேயே கண்டு கொண்டிருந்தேன் யாவரிடத்தும் அன்பும் ஆதரவுமாக நடந்து கொண்டார் 'இத்தகையவரைப் பற்றி ஒரு காலத்தில் தப்பபிப்பிராயம் கொண்டிருந்தோமே' என்ற நினைப்பு உண்டானபோது, என் மனதை என்னவோ செய்தது அவரை சந்திக்கும்படி எனக்கேற்பட சந்தர்ப்பங்களை மனம் எண்ணத் தொடங்கிவிட்டது

• • •

ராஜு முதலியார் ஆஸ்பத்திரியைத் தெரியாதவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். அவருடைய அரிய வைத்திய சேவையைப் பற்றிக் கேள்விப்பட்ட ஜனங்கள் எங்கெங்குமிருந்தும் அவரையே நாடி வந்துகொண்டிருந்தார்கள் அவரை ஆஸ்பத்திரியில் எந்நேரமும் பார்க்கலாம் இப்படி ஜனங்களின் நன்மையை உத்தேசித்து சேவை செய்வதில் அவருக்கு கொஞ்சம்கூட அலுப்புத் தட்டினதில்லை.

ஏழை என்றும், பணக்காரன் என்றும் அவர் வித்தியாசம் பாராட்டினதில்லை. ஜனங்கள் விரும்பிக் கொடுத்ததையே ஏற்றுக்கொள்வார். எனவே அவருடைய பெயரும், புகழும் பரவுவதற்கு கேட்கவா வேண்டும்?

ராஜு முதலியாருக்கு ஒரே ஒரு மகன் அவரும் டாக்டர் பரீட்சைக்கு வைத்தியக் கல்லூரியில் படித்து வருகிறார் என்றும் கேள்விப்பட்டிருந்தேன்.

ஒரு வருஷம் வரைக்கும் நான் வெளியூரில் இருக்கும்படி நேரிட்டதால். முதலியார் ஆஸ்பத்திரிக்குப் போகமுடியவில்லை. ஆனால் அவருடைய மகன் மோஹன் படிப்பு முடிந்து, அங்கேயே ஜூனியர் டாக்டராக இருந்துவருகிறார் என்பதைமட்டும் அறிந்திருந்தேன்

மீண்டும் வீட்டுக்கே திரும்பிவந்திருந்தேன். ஒரு நாளிரவு, என் தாய்க்கு திடீரென்று ஜுரம் வந்துவிட்டது 105 106 டிகிரி உஷ்ணம் தகித்தது நடு நிசி வேளையில் டாக்டர் ராஜு முதலியார் வீட்டுக் கதவைப் போய்த் தட்டினேன்.

ஒரு இளைஞர் கதவைத் திறந்து கொண்டு வெளியில்வந்தார் அவருக்கு இருபத்தைந்து வயதிருக்கும்

"எங்கு வந்திருக்கிறீர்கள்?' என்று அலட்சியமாக உரத்த குரலில் கேட்டார் தாயின் ஆபத்தான நிலைமையைக்கூறி. டாக்டரை அழைத்துப் போக வந்திருப்பதாக அவரிடம் சொன்னேன்

"அசந்து தூங்கிக்கொண்டிருக்கிறார். இப்பொழுது அவரால் வரமுடியாது" என்று அவர் கூறிய பதில் என்னைத் திடுக்கிடவைத்தது.

"டாக்டர் வராவிட்டால். அம்மாவின் தேகநிலை இன்னும் அதிக மோசமாகிவிடும், கொஞ்சம் தயவுபண்ணி, அவரிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன்.

"அவருக்குப் பதில்; நான்தான் உங்களுடன் வரப் போகிறேன். கொஞ்சம் உட்காருங்கள்" என்று உள்ளேபோனார் அந்த வாலிபர், அப்பொழுதுதான் அவர் டாக்டர் மகன் டாக்டர் மோஹன் என்பது எனக்குத் தெரிய வந்தது

சீக்கிரமாகவே டாக்டரை அழைத்துப் போகவேண்டுமே என்று ஒரே பரபரப்புடனும், கவலையுடனும் வெளியில் உட்கார்ந்திருந்தேன்.

ஒரு மணிநேரத்திற்குப் பிறகுதான் இந்த இளம் டாக்டர் வெளியே வந்தார்.

டாக்டர் மோஹன் என் தாயின் உடல் நிலையைப் பரிசோதித்துப் பார்த்தார் ஏதோ மருந்து எழுதிக் கொடுத்தார் போய் விட்டார். அவர் நடந்துகொண்ட விதத்தில் ஒரு அலட்சிய பாவந்தான் எங்களுக்குத் தோன்றிற்று, பெரிய டாக்டர் வராமல் போய் விட்டாரே என்ற எங்கள் மனக் குறை மட்டும் தீரவில்லை.

இதுதான் டாக்டர் மோஹனை நான் முதலில் சந்தித்தது இதற்குப் பிறகு எத்தனையோ தடவைகளில் ராஜு முதலியார் ஆஸ்பத்திரிக்குப் போய் வந்திருக்கிறேன் அப்பொழுது எல்லாம் அவர் ஏதாவது தாறுமாறாகத்தான் பேசுவார் அவருடைய இந்த சுபாவம் யாருக்கும் பிடிக்கவேயில்லை.

தன் மகன், வைத்தியத் துறையில் அதிக அனுபவம் பெறட்டும் என்று தானோ, என்னவோ, ராஜு முதலியார் அடிக்கடி வெளியூர் போய் வந்து கொண்டிருந்தார்.

பெரிய டாக்டர் ஊரில் இல்லாத போது ஜனங்களுக்கு கஷ்டம்தான். டாக்டர் மோஹன் எதிலும் ஒரு கரூர்ப் பேர்வழியாக இருந்தது. ஜனங்களுக்கு அவர் மீது வெறுப்பையே உண்டு பண்ணிற்று. டாக்டர் மகன் ஆஸ்பத்திரியிலிருக்கிறார் என்று அறிந்தால், யாரும் அங்கு போகமாட்டார்கள் மற்ற டாக்டர்களின் ஆஸ்பத்திரிகளை நோக்கிப் போய் விடுவார்கள்.



மீண்டும் பெருமூச்சுகளினிடையே தன் பேச்சைத் தொடர்ந்தார்.

"மிலிடரி டாக்டராக இங்கு வந்து சேர்ந்து விட்டேன். யுத்தம் முடிந்து மறுபடியும் ஊர் போய்ச் சேர்ந்ததும் சொந்த ஆஸ்பத்திரியை சிறந்த முறையில் நடத்த வேண்டுமென்று ஆசை. ஜனங்களின் மனதைக் கவரக்கூடிய வழிகளில் நடந்து கொள்வேன். தகப்பனாரின் நல்ல பெயரை நானும் அடைய வேண்டாமா?............நீங்களே சொல்லுங்கள் என்னை அங்கு பார்த்ததிற்கும், இங்கு பார்ப்பதற்கும், எவ்வளவு வித்தியாசமிருக்கிறது?" என்று பேச்சை நிறுத்திக் கொண்டார்.

"சார் இங்கு நீங்கள் நோயாளிகளிடம் நடந்துகொண்ட விதத்தில் உங்கள் தகப்பனாரையே மிஞ்சி விட்டீர்கள்" என்று அவருக்குப் பதில் சொன்னேன். மோஹன் அவ்வளவு நல்ல டாக்டராக இப்பொழுது மாறிப் போயிருந்தார்.

"வைத்தியத்திற்காக எத்தனை விதமான நூதன முறைகளையும் சாதனங்களையும ஏற்படுத்தியிருந்தாலும், மக்களின் மனதைக் கவர்ந்து விடமுடியாது. அன்பும், அயர்விலா உழைப்பினாலும் தான் ஜனங்களின் நம்பிக்கைக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகலாம்" என்ற உண்மையை இப்பொழுதாகிலும், டாக்டர் மோஹன் உணர்ந்து கொண்டு விட்டாரே" என்ற உள்ளத்தைத் திருப்தியுடன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

---

ஒரு சமயம் பழைய சீட்டைக் காட்டி மருந்து வாங்க வேண்டியிருந்தது கம்பவுண்டரோ. டாக்டரிடம் கையெழுத்து வாங்கி வரும்படி சொல்லிவிட்டார் பெரிய டாக்டர் ஊரில் இல்லாத சமயம். மத்தியானம் இரண்டு மணிக்கே வீட்டுக்குப் போய் டாக்டர் மோஹனிடம் சீட்டை நீட்டினேன். அவரோ 'ஆஸ்பத்திரிக்கு நாலு மணிக்கு வந்து கவனிக்கிறேன்' என்று நிர்த்தாட்சண்யமாகச் சொல்லி விட்டார். எனக்கு கோபம் வந்துவிட்டது ஏதேதோ இறைந்து கத்தி விட்டு, வந்துவிட்டேன்.

அறுபது வயதாகியும். ஜனங்களுக்கு பொறுமையுடன், ஓய்ச்சல் ஒழிவின்றி வைத்திய உதவி செய்யும், ராஜா முதலியாருக்கும், அவருடைய மகனுக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்.

இரண்டு, மூன்று வருஷங்களுக்குப் பிறகுதான் நான் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்தேன்.

* * *

மிலிடரி ஆஸ்பத்திரியில் ஒரு மாதமிருந்த பிறகு என் உடப்பு தேறியது. டாக்டர் மோஹனிடம் விடைபெற்றுக்கொள்ள அவர் அறைக்குச் சென்றேன் அவர் முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்றார்.

'சார், நீங்கள் ராஜ முதலியார் ஆஸ்பத்திரியில் இருந்தீர்கள். இல்லையா? அவர் சௌக்கியமாக இருக்கிறாரா?' என்று மோஹனைப் பார்த்துக் கேட்டேன். என்னுடைய இந்தக் கேள்வியைக்கண்டு அவர் ஆச்சரியப்பட்டார்.

'எனக்குத் தெரிந்த மனிதர் நீங்கள் ஒருவர் இங்கு வந்திருப்பது நல்லதாய்ப் போச்சு அப்பா இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு ஆஸ்பத்திரி சரியாக நடக்கவில்லை. எல்லாம் என் அகம்பாவம்தான் காரணம், ஜனங்களுக்கு என் மீது நம்பிக்கையற்றுப் போய் விட்டது. யாரும் என்னிடத்தில் வைத்தியத்திற்கு வரவில்லை அப்பா இறந்த பிறகுதான் என்னுடைய தவறை உணர்ந்தேன். என் ஆஸ்பத்திரியில் ஏராளமானப் பணச் செலவில், நவீன முறையில் பல வைத்திய சாதனங்களை ஏற்பாடு செய்தேன். அப்படி செய்தும், என் தொழிலில் வருமானம் வரவில்லை ஆரம்பத்திலிருந்தே ஜனங்களின் மனதைக் கவரும் சக்தியை நான் இழந்துவிட்டிருந்தேன்' என்று கூறி சற்று பேசுவதை நிறுத்தினார்.


## ஆருடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2.



ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி" கவசம் 1-க்கு ரூ. 7-8-0. பிரத்யேக ரக்ஷை ரூ 72-8. வி. பி. செலவு தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane :. Madras 5.











இசையமுதம் பொழிகின்ற மகர யாழை
ஏந்தி ஒரு கலைவல்லோன் இனிமை சொட்ட
நசை யுறவே வாசித்து மகிழுங் காலை
நரம்பொன்றே இற்றுவிடின் உடனே யாழின்
இசைப்பயனே போனதென எண்ணி அந்த
எழில் மிக்க யாழை உடைத் தெறிவானே? நம்
வசையற்ற வாழ்க்கையும் ஓர் யாழே; காதல்
மற்றதிலே மெல்லியதோர் நரம்பே யாகும்.

அழல் வீசும் கடுங்கோடை வெயிலிற் செல்வோன்
அருகினிலே உள்ளதொரு மரத்தின் நல்ல
நிழல்நாடி நின்றே தன் களைப்புத் தீர்ந்து
நிகரற்ற இன்புறுதல் இயல்பே; ஆனால்
நிழல் மரங்கள் பாதையினில் இல்லை எனறே
நிறுத்திடுவார் உண்டோதம் போக்கு தன்னை?
தழல் போலும் வெயில் வழியே வாழ்க்கை: அங்கே
தண்மை—தரு மரநிழலே மக்கள் காதல்.

பாழ்பட்ட யாழினையே திருத்தி ஆளும்
பண்போன்றே வாழ்க்கையிலே இன்பம் கூட்டும்
சூழ்கின்ற மர நிழலே இல்லையேனும்
சுடுவெயிலுக் கஞ்சாது நடத்தல் வேண்டும்
வாழ்வினிலே காதல் ஓர் இன்பப் பாலே
மற்றதுதான் முறிவுற்றால் பொறுமை இன்றி
வாழ்வினையே வெறுத்திங்கு சாதல் ஏனோ?
வாழ்கின்ற நோக்கந்தான் காதல் தானோ?






# 83

## இரண்டையும் வெல்வர்

★

பகவானிடத்தில் அவர் வசப்பட்டிருக்கும் விசித்திர மாயை உயிர்கள் ஸ்வரூபத்தை அறியவொட்டாமல் மறைக்கிறது உயிர்களுக்குப் பிறக்கும்போதே கூடத் தோன்றிய தேகம் உயிர்களுக்கு மாயையில் மோஹத்தை உண்டாக்குகிறது மாயையைப் புறப்பகை என்று சொல்லலாம். உயிருடன் பிறக்கும்போது ஒன்று சேர்ந்து விருப்பு வெறுப்புகளாகி துவந்தத்தை உண்டாக்கி மாயையில் சிக்க வைக்கும் உடலை உயிர்களின் அகப்பகை என்று கூறலாம்.

உடலைத் தானாகவே பாவித்து அதன் அதீனத்தில் வருவோர் பிரபஞ்சத்தில் பெரும்பாலோர். அவர்கள் அனைவரையும் மோஹிக்கச் செய்து மாயையின் வசப்படவே உடல் துணை செய்யும் மோஹ வலையில் அகப்பட்டவர் உண்மை ஸ்வருபத்தை அறியமாட்டாமல் பிறப்பு இறப்பு என்னும் பந்தத்திற்கு அனுதியாக ஆளாகி வருகிறார்கள் என்று கண்ணன் முன்னே தெரிவித்தார் அல்லவா?

அதைக் கேட்ட அர்ஜுனனுக்கு 'இவ்வாறு எல்லா உயிர்களும் மாயையால் மதியிழந்தால் முக்தி பெற எவருக்குத்தான் வழி உண்டு?' என்ற யோசனை உண்டாயிற்று அதையறிந்துகொண்ட கண்ணன் மோஹத்தினின்றும் விடுபடுவோரும் சிலர் உண்டு என்பதை அடுத்த படியாகத் தெரிவிக்கிறார்.

புண்ணியம் செய்புருடர்
யார்க்கும் புணர்பாவ
நண்ணியிருந் தான்முடிவை
நன்ருகத்—திண்ணியராய்
நின்றவர்கள் அவ்விருமை
வெல்லும்பேறென்னையே
ஒன்ற உகந்தடைவர் உற்று.

(இ-ள்) புண்ணியம்செய் புருடர் யார்க்கும்—புண்ணிய கருமங்களைச் செய்த உயிர்கள் எல்லாம். புணர்பாவ ஆன் முடிவை நண்ணி இருந்து-தங்களை (அனுதியாகத்) தொடரும் பாவம் நன்கு நசிக்கப்பட்டவர்களாக இருந்து, நன்ருக திண்ணியராய் நின்றவர்கள்—நல்ல திட சங்கல்பம் பெற்று இருப்பவர்கள், அ இருமை வெல்லும் —அந்தத் துவந்தங்களை வெல்வார்கள்; என்னையே பேறு என்றை—(பகவானாகிய) என்னையே புருஷார்த்தமாகப் பெறும் பொருட்டு, உற்று உகந்து அடைவர்-இடைவிடாமல் சந்தோஷத்தோடு பஜிப்பார்கள்.

3
யேஷாம் த்வந்தகதம்பாபம்
ஜநாநாம் புண்யகர்மணும்
3 3
தேத்வந்த்வமோஹ நிர்முக்தா
4 3 4
பஜந்தேமாம் த்ருடவரதா:

(இ-ள்) புண்ய கர்மணும்-புண்ணியஞ் செய்தவரான, ஏஷாம்ஜநாநாம்-எந்த ஜனங்களுடைய, பாபம்-பாபமானது, அந்தகதம்—அழிவுற்றதோ, தே-அவர்கள், த்வந்த்வமோஹ நிர்முக்த:-துவந்த மோஹங்களிலிருந்து விடுபட்டு. த்ருட வ்ரதா -திடமான சங்கல்பத்தோடு மாம் பஜந்தே—என்னை பஜிக்கின்றனர்.

பாவத்தின் வலி ஒடுங்கப் புண்ணியத்தின் ஆதிக்கம் ஒருவனுக்கு அதிகமிருக்கவேண்டும். ஆகவே நற் கருமங்களைச் செய்துகொண்டேயிருந்தால் மனம் மாயையின் வழியில் இழுக்கப்படாது, சுகம் துக்கம் லாப நஷ்டம் வெம்மை தண்மை முதலிய பேதத்தின் கற்பனைத் தன்மையை உணர ஆரம்பிக்கும். உணரவே உலகப் பொருள்கள் காரணமாக மனதில் வரும் விருப்பு வெறுப்புக் குறைந்துகொண்டே வரும். அந் நிலையில் விரும்பி அடையத் தக்கவர் பகவான் ஒருவரே என்ற உணர்வு வரும். அதனுல் உலக விஷயங்களில் வைராக்கியம் பிறந்து மன உறுதியும் திட சங்கல்பமும் உண்டாகும் அவர்கள் பகவான் ஒருவனையே பஜிப்பார்கள் என்று இச் சுலோகத்தால் கூறப்பட்டது

பகவானை இவ்விதம் பஜிப்பது எதற்கு? என்று கேட்டான் அதற்கு விடையாக 'பிரும்மத்தை உணர்வதே அந்தியானத்திற்குப் பயன்' என்பது மேலும் சொல்லப்படுகிறது

மூப்பு இறப்புத் தீர
முயன்றென்னை வந்தடைவர்
ஆப்புறமந் தப்பிரமம்
ஆங்கறிவர்—கோப்புடைய
வெவ்வத்தி யாத்துமத் தும்
எல்லாக் கருமத்தும்
செவ்வை தெறிவுறுவர் சேர்ந்து.

(இ-ள்) மூப்பு இறப்பு தீர-வயோதிகம் மரணம் ஆகிய இரண்டையும் நீக்கிக் கொள்ளும் பொருட்டு. முயன்று என்னை வந்து அடைவர். பிரயத்தினம் செய்து என்னைத் தியானம் செய்வோர். ஆப்புறம் அந்தப் பிரமம் அறிவர். (எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதான அந்தப் பிரும்மத்தைத் தெரிந்து கொள்வார்கள் கோப்பு உடைய எ அத்தியாத்துமத்தும்—ஒழுங்கையுடைய எந்த அத்தியாமத்தைப்பற்றியும்' எல்லா கருமத்தும்-எல்லாவிதமான கருமங்களைப் பற்றியும், செவ்வை சேர்ந்து தெரிவுறுவர்-உண்மை (தத்துவத்தை) அனுஷ்டித்தே தெளிந்து கொள்வார்கள்.



ஜராமரண மோக்ஷாய
மா மாச்ரித்ய யதந்தியே
3 3 3
தேப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்ந
3 4 2
மத்யாத்மம் கர்மஸாகில ம

(இ-ள்) மாம் ஆச்ரித்ய—என்னை அடைந்து. யே எதந்தி—எவர் முயல்கிறார்களோ, தே—அவர்கள். தத் பிரம்ம—அந்தப் பிரும்மத்தையும், க்ருத்ஸ்நம்—எல்லா, அத்யாத்மம்—அத்தியாத்துமத்தையும். அகிலம் கர்மச—எல்லாக் கருமங்களையும், விது:—அறிவார்கள் (அப்புறம்—ஆப்புறம் என்று செய்யுளில் மாறியது)

பிறப்பு இறப்பு ஆகிய இரண்டினின்றும் விடுதலையடையத் தன் முயற்சி வேண்டும்.

விருப்பமும் தன் முயற்சியும் தோன்றப் புண்ணிய வினைகள் சாதகமாகவிருக்கும் அதனுல் வருகின்ற பகவத் தியானம் மூன்று விதப் பயன்களைக் கொடுக்கும். அது பரப் பிரும்மம், ஜீவாத்மா சகலவித கர்மங்கள் இவற்றின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவதாகும் என்பது.

இவ்விதம் கூறியது அதைக்கேட்ட அர்ஜுனனுக்கு 'பகவானுகிய கண்ணன் பிரும்மத்தினின்றும் வேருனவரோ' என்ற சந்தேகத்தை உண்டாக்கியது அதை நீக்குவதற்குக் கண்ணன் மேலும் சொல்லுகிருர்.

அதிபூத மற்றிங்
கதிதெய்வ மெல்லா
மதியெச்சந் தாமா
வறிந்தோர்—கதிபெற்றுப்
போம்பொழுது மென்னையே
போாத நெஞ்சரா
யாம்பொருளாக் காண்பர்
அமர்ந்து.

(இ-ள்) (என்னை)—என்னை, அதிபூதம்—அதி பூதமாகவும், அதி தெய்வம் எல்லாம்—அதி தெய்வமாகவும். அதி எச்சம் தாமா—அதி யக்ஞம் ஆகவும், அறிந்தோர்—தெரிந்து கொண்டவர், கதி பெற்று போம்பொழுதும்—(உயிர்) பிரயாணமாகும் மரணகாலத்திலும், என்னையே—, பேராத நெஞ்சராய்-நீங்காமல் மனத்தில் வைத்தவர்களாய் அமர்ந்து ஆம் பொருளாக காண்பர்—நிலையாகவிருக்கும் தத்துவமாக அறிகிருர்கள்.

4 4 4 3
ஸாதி பூதாதி தைவம்
4 2
மாம் ஸாதி யஜ்ஞஞ்சயே விது:
ப்ரயாண காலேபிச
3
மாம்தே விதுர்யுக்த சேதஸ:

(இ-ள்) யேமாம்—எவர்கள் என்னை ஸாதி பூதாதிதைவம் அதிபூதம் அதிதைவம் இவற்ருேடு கூடியவனுயும். ஸாதி யக்ஞச்ச—அதி யக்ஞத்தோடு கூடினவனுயும். விது:—அறிகிருர்களோ. தே—அவர்கள் ப்ரயாண காலேபி—மரணகாலத்திலும், யுக்த சேதஸ:-(என்னேடு) கூடியமனத்தை யுடையவராய், மாம் விது:—என்னை அறிவார்கள்.

மரணகாலத்தில் 'நாராயணு' என்று சொல்லிப் பகவானைத் தியானித்த அஜாமிளன் அதற்கு முன்பு மகா பாதகங்களைச் செய்திருந்தபோதிலும் முக்தியை அடைந்தான் என்ற கதை பாகவதத்தில் வந்துள்ளது ஆனுல் மரணகாலத்தில் பகவத் தியானம் உண்டாவது மிகவும் துர்லபம் பாபி ஒருவன் மரணமடையும் தறுவாயில் இருந்தபோது பக்கத்தில் உள்ளவர்கள் அவன் பகவன் நாமத்தைச் சொல்லுவதற்காக நாராயணன் என்ற பெயருடைய அவன் மகனைப் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தி 'இவன் யார்' என்று கேட்டார்கள். நோயாளி 'தெரியவில்லையே' என்ருன் 'உன் மகன் நாராயணன்தான் நன்ருகப் பார்த்துச் சொல்' என்று பக்கத்திலிருந்தவர்கள் மறுபடிச் சொன்னார்கள். நோயாளி 'அந்த கமனு இவன்?' என்று சொல்லிக் கண் மூடிவிட்டான். என்று ஒரு கதை சொல்வது உண்டு.

'பிறப்பென்னும் பேதைமை
நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு'

என்ற குறள் உரையில் பரிமேலழகர் 'உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனுல் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாயத் தோன்றுமென்பது எல்லா ஆகமங்கட்கும் துணிவு. ஆதலின் வீடு எய்துவார்க்கு அக்காலத்து, பிறப்பிற்கு ஏதுவாய் பாவனை கெடுதற் பொருட்டு கேவலப் (பரம்) பொருளையே பாவித்தல் வேண்டுதலான் அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்க உபாயம் இல்லை என்பது அறிக' என்று கூறினுர்.

முன்னே தியானம் பயின்றவர்கள் மாத்திரமே பிராணப் பிரயாண காலத்தில் பரம் பொருளைத் தியானிக்க முடியும் என்பதை உணர்த்தக் கண்ணன் இப் பகுதியில் பரம் பொருளே தான் என்று கூறியதோடு நிற்காமல் தியானம் தன்னை அறியவும் மரண காலத்தில் அதிபூதம் அதியக்ஞம் அதி தெய்வமாகிய தன்னை மனதில் பாவிக்கவும் உதவும் என்ருர். அதி பூதம் அதி தெய்வம் அதியக்ஞம் இன்னதென்பதை உணர்த்தப் போகும் அடுத்த அத்தியாயத்திற்கு இதைத் தோற்றுவாயாகக் கொள்ளலாம்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)
Phone: 84254.
குழந்தைகளின் சுரம், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்
Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.
கும்பகோணம் கிளை:— 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி.
திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

# பகற்கனவு

ராஜா

[பிரபல எழுத்தாளர் பஞ்சாமிர்தத்தின் பங்களா 'கலா பவனம்' மாடியில் தன் பிரத்யேக அறையில் பஞ்சாமிர்தம் சோபாவில் அமர்ந்தவாறு அன்று காலை தபாலில் வந்த கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் பையன் ராஜு வருகிறான்]

ராஜு:—அப்பா! அப்பா! அவர் வந்திருக்காரப்பா!

பஞ்சாமிர்தம்:—என்னடா தலைபோற அவசரமாயிருக்கு! அவர் என்றால் எவர்?

ராஜு:—ஆமாம் அப்பா! குபேரா பிலிம்ஸ் முதலாளி கே பி சாமி ......சமீபத்திலேகூட கதை சண்டை ராவணன் என்னும் படத்தை வெளியிட்டு பிரமாத விளம்பரம் பண்ணினாரே அவர்தான்!.........டிராயிங் ரூமிலே இருக்கார்.

பஞ்சாமிர்தம்:—சதகண்ட ராவணன் என்று சொல்லுடா!.........ராவணன் தலைகளுக்கு நீயே ஆபத்து ஏற்படுத்துகிறாயே!......கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கட்டும்! அந்தக் காலத்திலே என்னை எத்தனை நாள் அலைக்கழித்திருப்பான்?.........இந்தக் கடிதங்களை பார்த்துவிட்டுப் போகிறேன்.

ராஜு:—அடேயப்பா! இன்றைக்கு இருநூறு கடிதங்கள் வந்திருக்கும் போலிருக்கிறதே!...அவர் என்னவோ உங்களை அவசரமாய் பார்த்துப் பேசிவிட்டு மததியானம் பிளேனிலே பம்பாய் போகவேண்டுமாம்! கூட வந்தவருடன் சொல்லிக்கொண்டிருந்தார்.

பஞ்சாமிர்தம்:—இக்கடிதத்தைப் பார்! நான்கூட அடுத்த வாரம் கல்கத்தா போகவேண்டியிருக்கும்! கல்கத்தா கலாசார சபை அதன் வருஷாந்திர மகாநாட்டிற்கு என்னைத்தான் தலைமை வகிக்க கேட்டுக்கொண்டிருக்கிறது!

ராஜு:—அப்பா அத்தர் பிரயோக மந்திரி, அவர்கள் ஸ்டேட் பிரசார இலாக்கா சம்பந்தமாக......

பஞ்சாமிர்தம்:—......என்னடா உளர்றே! உத்தரப் பிரதேச மந்திரிடா! வார்த்தைகளை கவனிச்சு பிரயோகி...! அடுத்த மாதம்தான் அலகாபாத்திற்கு வரமுடியுமென்று எழுதிவிட்டேன்!

[மீனு வருகிறாள்]

மீனு:—அப்பா! 'சுபரதீபம்' ஆசிரியர் சுந்தரம் வந்திருக்கார் உன்னைப் பார்க்கணுமாம்

பஞ்சாமிர்தம்:—நாளைக் காலையிலே வரச் சொல்லு!

மீனு:—இல்லேப்பா! உன்னை முக்ய விஷயமாய் பார்க்கணுமாம் நேற்றுகூட அவர் வந்தபோது நீ இல்லே! பாவம்! அவர் டாக்ஸிக்குக் காசைத் தண்ணீர்போல் இறைக்கிறார்!

பஞ்சாமிர்தம்:—இந்தப் பஞ்சாமிர்தம் எத்தனை நாள் அவர் காரியாலயத்தின் முன் போய் கால் கடுக்க நின்று அவர் பேட்டி கிடைக்காமல் திரும்பியிருக்கிறார்? ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கு ஒருகாலம்! அவருக்கு இப்போ என் கட்டுரை தேவையாக இருக்கிறது! காத்திருக்கட்டும்!

ராஜு:—முந்தி அவர் உங்கள் கதை கட்டுரைகளை திருப்பி அனுப்பின மாதிரி அவரையும் சும்மா திருப்பி அனுப்பிவிடாதீர்கள்!

[பெரியநாயகி வருகிறாள்]

பெரியநாயகி:—இன்றைக்கு மாட்னி ஷோவிற்கு நிறைந்த காதல் போக வேண்டும் ஆகையால் காரை எடுத்துக்கொண்டு எங்காவது போய்விடாதீர்கள்.

பஞ்சாமிர்தம்—இன்றைக்கா? முடியாது! எனக்கு நாலுமணிக்கு இக்கொளுத்தி சேவா சங்க விழாவில் தலைமை வகிக்கவேண்டும் பிரசங்கம் செய்யவேண்டியதைப்பற்றி இன்னும் ஒரு வார்த்தைகூட யோசிக்கவில்லை

பெரியநாயகி:—இங்கிலீஷிலே சொல்வானே! அக்கப்போரா. என்னவோ? அது மாதிரி பேசிட்டாப் போச்சு!

பஞ்சாமிர்தம்:—நாசமாய்ப் போச்சு! 'எக்ஸ்டெம்போர்' என்று சொல்லு! நீயும் உன் பிள்ளையும் சேர்ந்து பேச ஆரம்பிச்சாக்க கேட்கிறவாளுக்கு பயித்தியம் பிடிச்சுப்போயிடும்!

பெரியநாயகி:—நீங்கள் எழுதற அழகை விடவா நாங்கள் பேசுகிறோம்?......சரி சரி! நீங்க வரவேண்டாம்! எங்களை அப்படியே தியேட்டரிலே கொண்டுவந்து விட்டுப் போங்கோ வரபோது நாங்க டாக்ஸியிலே வந்துடறோம்.

பஞ்சாமிர்தம்—பத்து வருஷத்துக்கு முன்னாலே பஞ்சாமிர்தம் என்றால், யாரோ ஒரு அப்பாவி, அரைகுறை எழுத்தாளன் என்றுதானே சில பேருக்குத் தெரிந்திருக்கும்! அந்தப் பஞ்சாமிர்தத்தின் மனைவி டாக்ஸி என்பதை ஸ்வப்பனத்திலும் நினைத்திருக்க முடியுமா?

மீனு:—பஞ்சாமிர்தம் என்றால் முதலில் பழனிதான் அவாளுக்கு நினைவு வந்திருக்கும்! அப்புறம் தான் உன் நினைவு வந்திருக்கும்.



செர்படவனின் மனைவி:—"என் ஹூட்லேயே ஒக்காந்து அவியறிங்க! கொஞ்சம் காத்தாட போயிட்டு வாங்களேன்!



பஞ்சாமிர்தம்:—இப்போ, பஞ்சாமிர்தம் என்றால் உட்ஹவுஸிற்கும் ஓ ஹென்றிக்கும் இணையாகப் பேசுகிறார்கள்!

ராஜு:—எனக்கு எவ்வளவு பெருமையாகத் தெரியுமா இருக்கிறது? எங்கள் பள்ளிக்கூடத்துமாகசைனிலே பஞ்சாமிர்தத்தின் பிள்ளை என்பதற்காக என் கட்டுரை எவ்வளவு மோசமா இருந்தாலும் முதலில் போடுகிறார்கள்.

பஞ்சாமிர்தம்:—சமத்தா பேசறேன்னு எதையாவது உளறாதேடா!

பெரிய நாயகி:—போறுமே உங்கப்பா பெருமை! ஒரு கதை எழுதி அது பிரசுரமாகாதா என்று ஏங்கி ஏங்கி அலைந்ததை நினைத்தாலே வயிற்றெரிச்சலா இருக்கும்! என்னவோ திடீரென்று யோகம் அடிச்சது! 'அத்த ராத்திரிக் குடை' என்ற கதை 'டம்பாச்சாரி' பத்திரிகையிலே வெளியான முகூர்த்தம் உங்க அப்பா பெருமை பரவ ஆரம்பிச்சுடுத்து

பஞ்சாமிர்தம்:—சரி சரி!...நான் பழைய சாப்டரையே மறந்துடணும்னு நினைச்சுண்டு இருக்கேன்... இப்போ அந்தநினைவைக் கிளப்பாதே! டேய் ராஜு! இந்தக் காகிதங்களைப் படித்து முக்கியமானதாயிருந்தால் குறிச்சுவை நான் கீழே வந்திருக்கிறவாளோடே பேசிட்டு வரேன்.

2

[டிராயிங் ரூமில் சில நிமிஷங்களுக்குப் பிறகு]

பஞ்சாமிர்தம்:—வாங்கோ, வாங்கோ

சுந்தரம்:—நமஸ்காரம்! வர வர உங்க தரிசனம் கிடைக்கிறதே அபூர்வமாக இருக்கிறது

பஞ்சாமிர்தம்:—அதை ஏன் கேட்கிறீர்கள்! மூச்சு விடக்கூட அவகாசம் இருக்கிறதில்லே! சென்ற தடவை உங்க மலருக்கு கட்டுரை கொடுக்க மறந்துபோனதுபோல மூச்சு விடக்கூட மறந்துவிடுவேன் போலிருக்கு!

சுந்தரம்:—ஹாஸ்யம் பிரமாதம்!.... பிரமாதம்!......நீங்க அப்படி மறந்துடப்படாதுன்னுதான் நான் வந்தேன்.

பஞ்சாமிர்தம்:—என்ன மிஸ்டர் சாமி! ஏது எதிர்பாராத தரிசனம்?

சாமி:—எல்லாம் அவிடத்து தயவுக்குத்தான். முதலில் ஆசிரியரை கவனித்துவிட்டு வாங்க, அப்புறம் நாம் பேசலாம்.

சுந்தரம்:—எனக்கு அவசரமில்லே! மிஸ்டர் சாமிக்கு எவ்வளவு பிஸினெஸ் எங்கேஜ்மெண்டோ இருக்கும்? அவரை கவனியுங்க.

பஞ்சாமிர்தம்:—எனக்கு ஜோஸியம் தெரியும். இரண்டுபேர் வேலையையும் ஒரேயடியாய் கவனித்து விடுகிறேன்! மிஸ்டர் சாமி, அவரோட அடுத்த படமான 'ஆடுதன் ராஜாவிற்கு' என்னை வசனம் எழுதிக் கொடுக்க கேட்க வந்திருக்கிறார் சுந்தரம் மலருக்கு கட்டுரை கேட்கிறார். இரண்டிற்கும் எனக்கு அவகாசம் இருக்குமா என்று......

சாமி:—அப்படி சொல்லக்கூடாது! படத்தின் உயிரே உங்கள் கையிலேதான் இருக்கு!

சுந்தரம்:—நீங்கள் மலரில் எழுதுவதாக ஒரு மாத காலமாகவே நாங்கள் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறோம் உங்களை கௌரவ ஆசிரியராக வேறு நியமிக்க ஏற்பாடாகியிருக்கிறது!

பஞ்சாமிர்தம்:—சுந்தரம், அடுத்த வாரம் என்னை வந்து பாருங்கோ: என்னாலானதை முயற்சிக்கிறேன்.

[சுந்தரம் போகிறார்]



(ராஜு வருகிறன்)

ராஜு:—அப்பா! பாம்பேயிலிருந்து டிரங்க்கால் இருக்குப்பா.

பஞ்சாமிர்தம்:—சாமி! பார்த்தீர்களா? கந்தர்வாகன் ஸென்ரஸ், அவாளோடே புது ஹிந்திப்படத்தை தமிழிலேயும் எடுக்கரா அதற்கு நாற்பதினாயிரத்திற்கு எக்ரிமெண்டாயிருக்கு!

சாமி:—அவ்வளவுதானே நம்படத்திற்கு நாற்பத்தையாயிரம்! சரிதானே! காண்ட்ராக்ட் பாரம் தயாரா இருக்கு!

பஞ்சாமிர்தம்:—அதைப்பற்றியும் யோசிக்கனும் இருங்கோ; டிரங்க் காலை ஆன்ஸர் பண்ணிட்டுவரேன்

[அவசரமாக உழுந்து மாடிப்படியேறிய பஞ்சாமிர்தம் ஐந்தாவது படியிலிருந்து கால்வழுக்கி தடாலென்றி கீழே உருண்டு விழுகிறார்]

பஞ்சாமிர்தம்:—ஐய்யோ!

## 3

[டாக்டர் சுதர்சனத்தின் நர்ஸிங் ஹோம். கட்டிலில் மயக்கத்துடன் பஞ்சாமிர்தம் படுத்திருக்கிறார் குபேரா பிலிம்ஸ் சாமி சுப்ர தீபம் சுந்தரம் இரண்டு பேரும் பக்கத்தில் நிற்கிறார்கள் பஞ்சாமிர்தம் கண்களை விழிக்கிறார்]

டாக்டர்:—அப்பா! எந்த மருந்திற்கும் விழித்துக்கொள்ளாதவர் காதின் பக்கத்தில் இந்தவிளையாட்டு டிரம்மை தட்டினவுடன் விழித்துக் கொண்டாரே.

பஞ்சாமிர்தம்:—ஹா! ஆஸ்பத்திரியா? நான் எப்படி இங்கு வந்தேன்? அடடா, டிரங்க் காலை ஆன்ஸர் பண்ணவில்லையே!

சுந்தரம்:—அடடா! இப்போதான் ஞாபகம் வரது! இவர் எழுத்தாளர் பஞ்சாமிர்தம் போலிருக்கு!...மூளை வேறல்லவா கலங்கிப் போய்விட்டது போலிருக்கு! இவர் அடிக்கடி என் காரியாலயத்திற்கு வந்திருக்கிறார்! பார்த்திருக்கிறேன்

சாமி:—நல்ல ஆளையா இவரு! பட்டப் பகலிலே மோட்டார் குறுக்கே விழுந்து எங்க வேலையெல்லாம் கெடுத்துத் துலைச்சார்! ரோடுலே நடக்கத் தெரிஞ்சா வீட்டை விட்டுக் கிளம்பணும்!

சுந்தரம்:—இல்லாதபோனா காரிலே வந்து விழுகனும்! இல்லையா?

பஞ்சாமிர்தம்:—என்ன மிஸ்டர்சாமி! என்ன சொல்றீங்க! நாற்பத்தையாயிரம் ஜாஸ்தியாங்களா?...... அப்படீன்னா உங்க காண்ட்ராக்டே வேண்டாம்! சுந்தரம்! மலருக்கு கட்டுரை அனுப்பிச்சுடுவேன் பயப்படாதேயுங்கோ...முதலில் என் பங்களாவிற்கு போன் பண்ணி என் காரை வரவழையுங்கள்!

சுந்தரம்:—முதலில் டாக்டரைக் கூப்பிட்டு உம் மூளையை பார்க்கச் சொல்றேன் கார் மோதி காலில் தான் அடியென்று நினைத்தேன்! ஆனால் தலையில் தான் பலமான அடி என்று இப்போது தெரிகிறது

பஞ்சாமிர்தம்:—காரா? என்னையா? மாடிப்படியிலேயிருந்து கால் வழுக்கிற்று!

கார் எங்கே வந்தது?

சாமி:—ஸ்வப்பனம் கண்டீரோ? ஏனையா ரவுண்டாணாவிலே நடக்கரதுன்னு உங்க வீட்டு மொட்டை மாடியிலே உலாத்தரதுன்னு நினைச்சுட்டீங்க போலிருக்கு!

சுந்தரம்:—அடிப்பட்ட மயக்கத்திலே குஷியானகனவு கண்டிருக்கிறார்!

பஞ்சாமிர்தம்:—(கண்களைக் கசக்கிக் கொண்டு) என்ன!...காரிலே யா மோதிண்டேன்!...ஆமாம்...நான் இத்தனை நேரம் கண்டதும் ஸ்வப்பனம் தானா...ஐயய்யோ!...இப்போ தான் ஞாபகம் வருகிறது 'டம்பாச்சாரி காரியாலயத்திற்கு ஒரு கதை கொடுக்கப் புறப்பட்டேன்!

சுந்தரம்:—வழியில் காரில் போகும் என்னைப் பார்த்து அசடு வழிய ஓடி வந்து குறுக்கே விழுந்தீர்!...இந்தாரும் உம்ம கதையிலே ஒரு பாதி...மீதி காற்றிலே அடிச்சுண்டு போயிடுத்து 'அர்த்த ராத்திரியா' என்னவோ தலைப்பு கொடுத்திருக்கிறீரே!

சாமி:—ஓஹோ! எனக்கு லேசா ஞாபகம் வரது ஏதாவது ஒரு படத்திலே வசனம் எழுதர சான்ஸ் வேண்டுமே என்று நடந்துண்டிருந்தார்!...சரிதான்! அதுதான் என்னையும் தெரிஞ்சு வைத்துக்கொண்டிருக்கிறார்!

பஞ்சாமிர்தம்:—ஐயய்யோ! என் பங்களா, காரு, காண்ட்ராக்ட் எல்லாம் வெரும் கனவா!...சுந்தரம்! நீங்க கட்டுரை கேட்டதுகூடவா கனவு?...வெறும் பகற் கனவுதானா?

சுந்தரம்:—அற்புதமான கனவு!... மயங்கிக் கிடக்கும்போது கண்ட மகோன்னத கனவு!...உம்மைத்தான் இன்னும் பத்து வருஷங்களுக்கு கட்டுரை எழுத வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேனே! உம்ம கட்டுரையை வாசிச்சு என் போன்ற எத்தனை ஆசிரியர்களுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதோ?

பஞ்சாமிர்தம்:—ஈச்வரா! வாழ்க்கையில்தான் எங்கு போனாலும் ஏமாற்றமும், துரதிருஷ்டத்தின் எதிர்பாராத அடியுமாக இருக்கிறது ஸ்வப்பனத்தில்கூட நம் அதிர்ஷ்டம் கடைசியில் மாடிப்படியிலிருந்து விழத்தான் வேண்டி இருக்கிறது! அப்படி விழுந்திராத போனால் இன்னும் கொஞ்ச நேரம் இன்பக் கனவு கண்டிருக்கலாமல்லவா!

[சாமியும் சுந்தரமும் போகிறார்கள்]

டாக்டர்:—மிஸ்டர்! நீங்க வீட்டிற்குப் போகலாம். உடம்பில் ஒன்றுமில்லை. உங்க மயக்கத்தைக் கண்டு மிஸ்டர் சாமி பயந்தே போனார்!

பஞ்சாமிர்தம்:—உடம்பில் மாத்திரமென்ன? பையிலும்தான் ஒன்றுமில்லை இருந்த ஒரணா இரண்டணா சில்லரையும் காரில் மோதிய அதிர்ச்சியில் எங்கோ ஓடிவிட்டது! பேசாமல் சற்று முன் கண்ட கனவை எண்ணிப் பார்த்துக்கொண்டே இரண்டு மைலையும் நடந்து கழித்து வீட்டிற்குப் போனால் போச்சு! கவிஞன் இன்பம் கனவிலே, எழுத்தாளன் இன்பம் எண்ணத்திலே!...அவ்வளவுதான்! நடைமுறையிலே காலணாகூட காண முடியாது என்பதுதான் தலையெழுத்தாச்சே!

[போகிறார்]


சக்தி ஆரூடம்!

*

(பிரபல ஆரூடசாலை)

பல மேன்மையான நற்சாட்சிகள் பெற்றது.

1 வருஷ பலன் ரு. 5.

ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரு. 1

சக்தி கவசம் ரு. 7-8-0.

ஜாதகம் கணிக்க ரு. 2.

வி பி பி தனி

ஜாதகம் OR கடிதம் எழுதும் நேரம் தேவை

சக்தி ஹோம்,

விருத்தாசலம் P O (S I.)










ஒருநாள் ராமு விளையாடிவிட்டு வெகுநேரம் கழித்து வீட்டுக்கு வந்தான். அவனுடைய அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "டேய் ராமு, இனிமேல் இந்தமாதிரி வீடடுக்குவந்தால் உன் காலை ஒடித்துவிடுவேன்" என்று சொல்லி பளீர் என்று முதுகிலே ஒன்று விட்டார். அழுதுகொண்டேபோய் படுக்கையிலே படுத்துக்கொண்டான். இரவு வெகுநேரம் ஆகியும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையிலே புரண்டுகொண்டு படுத்துக்கொண்டிருந்தான்.

அந்த நிசப்தமான இரவில் 'மியாவ்' என்ற குரல் கேட்டது. பூனை என்றால் ராமுவுக்குப் பிரியம். படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து பூனை இருந்த இடத்திற்கு ஓடினான். அதன் உடல் முழுவதும் பச்சை நிறமாக இருந்தது. அதனால் அவனுக்கு அதை எப்படியாவது தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதைப் பிடிப்பதற்கு ஓடினான். ஆனால் அது தப்பித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது. அதை பின் தொடர்ந்து ஓடினான் ராமு. அதன்மேலுள்ள ஆசையால் அவனுக்கு அப்பொழுது நடுநிசியாயிருந்தாலும் பயமில்லாமல் இருந்தது. பூனை வெகுநேரம், பல தெருக்களின் வழியாகச்சென்று கடைசியாக ஒரு வீட்டின்முன் வந்துநின்று கதவில் இருந்த சிறிய பொத்தானை அமுக்கியது. உள்ளே 'நண, நண' என்று மணியடித்தது ராமுவுக்குக் கேட்டது. அப்பொழுது 'இத்தனை நாழி எங்கே போயிருந்தாய்' என்று கேட்டுக்கொண்டே ஒருவர் கதவைத் திறந்தார். ராமு அவரைப்பார்த்தான். அவர் ஒரு கிழவர் கிழிந்த சட்டைகள் போட்டுக்கொண்டிருந்தார். ஒருவேளை குடுகுடுப்பாண்டியாக இருக்கலாமோ என்று நினைத்தான் ராமு அந்தப் பூனை உள்ளே நுழைந்தவுடன் அந்த குடுகுடுப்பாண்டி அவனைப் பார்த்து, "தம்பி! நீ இந்த இருட்டிலே எங்குவந்தாய்?" என்று அன்புடன் கேட்டார். வந்த விதத்தை ராமு கூறவே அவனையும் அழைத்துக்கொண்டு உள்ளே போனான் குடுகுடுப்பாண்டி.

உள்ளே நுழைந்தவுடன் விசித்திரமான விஷயங்களை ராமு பார்த்தான். ஒரு பக்கத்தில் இருந்த கண்ணாடிக்கூண்டில் ஒரு பெரிய மலைப்பாம்பு இருந்தது. மற்றொன்றில் தேள்கள் இருந்தன இன்னும் சில கூண்டுகளில் விசித்திரமான பறவைகள் இருந்தன. குரங்குக் குட்டிகள் அங்கும் இங்கும் தாவி விளையாடிக் கொண்டிருந்தன. ராமுவுக்கு பயமும், ஆச்சரியமும் மாறி மாறி உண்டாகியது. உள்ளே நடுவில் ஒரு பெரிய சட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் அடியில் பல கட்டைகள் எறிந்துகொண்டிருந்தன.

குடுகுடுப்பாண்டி ராமுவைப் பார்த்து 'ராமு! இந்தச் சட்டியில் இருப்பதைக் கொஞ்சம் கிளறிக் கொண்டிரு. நான் இதோ வந்துவிடுகிறேன்' என்று சொல்லிச் சென்றான் ராமுவும் சட்டியில் இருந்த கரண்டியால் அதில் இருந்த ஒருவகை நீரை கலக்கிக் கொண்டிருந்தான். சிறிது வேகமாகக் கலக்கவே, அதில் இருந்த நீர் கொஞ்சம் அவன் கால்களில் கொட்டியது. அதைக்கூடக் கவனிக்காமல் அவன் அதைக் கிளறிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் குடுகுடுப்பாண்டியும் அங்கு வந்துவிட்டான்.

'தாத்தா! இது என்ன இந்த சட்டியில்' என்று ராமு கொஞ்சலாகக் கேட்டான்.

'இது மந்திர வர்ணம். இதை எதன் மேல் தடவினாலும் அந்தப் பொருள் கண்ணுக்குத் தெரியாது. நாம் மேலே தடவிக் கொண்டால் ஒருவர் கண்ணுக்கும் தெரியமாட்டோம்' என்றான் அவன்.



ராமு ஆச்சரியத்துடன் 'தாத்தா எனக்கு அதில் கொஞ்சம் கொடுங்களேன்' என்றான். தாத்தா ஒரு பெரிய பாட்டிலில் அந்த வர்ணத்தைக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு கிளம்பினான் ராமு. ஒருவருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்டான். அதை வைத்துக் கொண்டு கலாட்டா செய்ய எண்ணினான்.

மறுநாள் காலை ராமு எழுந்தவுடன் அவன் அம்மா அவனுக்குக் காப்பி கொடுக்க வந்தபோது அவனைக் கண்டு திடுக்கிட்டு 'ராமு உன் கால்கள் எங்கே?' என்று கேட்டாள். ராமுவும் குனிந்து பார்த்தான். கால்களைக் காணவில்லை. சிறிது பயம் உண்டாயிற்று ராமுவுக்கும். ஆனால் முதல் நாளிரவு குடுகுடுப்பாண்டி வீட்டில் வர்ணம் கால்களில் கொட்டியது நினைவுக்கு வரவே பயம் தெளிந்து 'கால்கள் இருக்கிறதே' என்று சொன்னான். அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவன் அப்பாவைக் கூப்பிட்டு காண்பித்தாள் அவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. 'ராமு! இன்னிக்கு ஸ்கூலுக்குப் போகவேண்டாம். சாயந்திரம் டாக்டரை அழைத்து வருகிறேன்' என்று சொல்லி அப்பா ஆபீசுக்குப் போய்விட்டார். ராமுவுக்கு ரொம்ப சந்தோஷம் உண்டாகி குடுகுடுப்பாண்டியை வாயார வாழ்த்தினான்.


அன்று ராமு வர்ணத்தை அப்பா சைகிள், மேஜை, நாற்காலி சட்டை எல்லாவற்றுக்கும் தடவி. சமயலறையில் உள்ள அடுப்பு முதலியவற்றிற்கும் ரகசியமாகத் தடவிவிட்டான். அப்பா சாயந்திரம் வந்தவுடன் அம்மாவிடம்காப்பிபோடு என்று சொன்னார். அம்மா சமையலறையில் போனாள். அடுப்பைக் காணவில்லை' திடுக்கிட்டு ஓடிவந்து அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னாள். வீட்டில் திருட்டு நடந்திருக்கிறது என்று பயந்து அப்பா போலீசுக்குச் சொல்ல எண்ணி சட்டையை எடுக்க மேஜையினருகில் போனார் அங்கு மேஜையையும் காணவில்லை, சட்டையையுங் காணவிலை. யாரோ பலே கைகாரத் திருடன்தான் திருடிவிட்டான் என்று பயந்து போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்ல சைக்கிளை எடுக்கப்போனார். சைக்கிளையும காணவில்லை. பைத்தியம் பிடித்ததுபோல் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடினார். அங்கிருந்து இரு போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு வந்தார்.





அவர்கள் இருவரும் வீடு முழுவதும் தேட ஆரம்பித்தார்கள். அதற்குள் ராமு அவர்கள் பின்னால் ஓடிச்சென்று வர்ணத்தைத் தெளித்தான். அவர்களும் மறைந்துவிட்டார்கள் அப்பா போலீஸ்காரர்களை தேடிக்கொண்டு போனார். அப்பொழுது அப்பா மேலும் வர்ணத்தைத் தெறித்தான். அப்பா மறைந்தார். அப்பாவைக் காணாத அம்மா பயத்தினால் அழ ஆரம்பித்தாள். அவள் மேலும் சிறிது வர்ணம் விழவே அவளும் மறைந்தாள். அப்பாவைக்காணாத அம்மாவும், அம்மாவைக் காணாத அப்பாவும், தங்கள் இருவரையும் காண முடியாத போலீஸ்காரர்களும் அழ ஆரம்பித்தார்கள். வீடு முழுவதும் ஒரே கூக்குரலாக இருந்தது. ராமுவுக்கும் அந்தச்சத்தம தாங்கமுடியவில்லை. ஆனால் மறுபடி அவர்களை சரியானபடி கொண்டுவர முடியவில்லை. தன் தப்பை உணர்ந்து வருத்தத்துடன் மறுபடி குடுகுடுப்பாண்டியிடம்சென்று நடந்ததைக் கூறினான். அவனும் அதைக்கேட்டு விழுந்து, விழுந்து சிரித்துவிட்டு ஒரு களிமண்ணை அவனிடம்கொடுத்து அதால் எதைத் தொட்டாலும் மறுபடி கண்ணுக்குத் தெரியும் என்று சொல்லி அனுப்பினான்.





# அந்தக்காலத்து மாணவர்கள்


ரஸிக குமார்

மதுரா நகரத்தில் தயார்ணவர் என்ற முனிவர் இருந்தார். அவருக்கு பல அரசர்கள் சிஷ்யர்களாய் இருந்தார்கள். ஆனாலும் அவருக்கு ஏழை சிஷ்யர்களிடத்தில்தான் அன்பு அதிகம். ஏனெனில் ராஜாக்கள் அவ்வளவு உண்மை சிஷ்யர்களாக இருந்ததில்லை ஏழை சிஷ்யர்களில் ரஸிக்குமார் என்பவர் குருவினிடத்தில் மிகவும் அன்புள்ளவர். குருவின் கட்டளை எதுவாயிருந்தாலும் அதை உடனே நிறைவேற்றும் குணம் உள்ளவர். இவ்வளவு நல்ல மாணவரிடத்தில் குருவுக்கு அன்பு இருப்பது நியாயந்தானே. ஆனால் மற்றமாணாக்கர்களுக்கு ரஸிககுமாரரிடத்தில் நம்பிக்கை இல்லை, குருவை ஏமாற்றுவதற்கு இம்மாதிரி வேஷம் போடுகிறான் என்று சொல்லி கேலி செய்தார்கள். மற்றவர்கள் சொல்வதைக் காதில்கூட வாங்காமல் தன் காரியங்களைக் கவனித்து வந்தார் ரஸிககுமார்.



காசிராஜா வழக்கம்போல் அனுப்பவேண்டிய குரு தட்சிணையை அனுப்பவில்லை. வெகு நாட்கள் பொறுத்துப் பார்த்தும் பயனில்லாமல் போய்விட்டது. குரு தக்ஷிணையை வசூல் செய்வதற்கு ரஸிககுமாரரையும் அவருடன் பத்து மாணவர்களையும் சேர்த்து அனுப்பித்தார் தயார்ணவர். அவர்கள் காசி அருகே சென்றவுடன் அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன் அவர்களை மறுநாளைக்கு வரும்படி சொன்னான். மறுநாள் அவர்கள் நகரத்தில் நுழையும்போதே அவர்களை ஒழித்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டான் அரசன்.

ரஸிக குமாரரும், மற்ற மாணவர்களும் மறுநாள் காலை நகரில் நுழைந்தார்கள். அப்பொழுது திடீரென ஒரு மதம் பிடித்த யானை அவர்களைத் துரத்த ஆரம்பித்தது. மற்ற பத்து மாணவர்களும் அதைக் கண்டு பயந்து நகரத்துக்கு வெளியே ஓடிப் போய்விட்டார்கள். ஆனால் ரஸிக குமாரரோ, தன் உயிருக்கே ஆபத்து வந்தாலும், குருவின்



கட்டளையை நிறைவேற்றுவதே தன் கடமை என்று நிச்சயித்து அதை சிறிதுகூட லட்சியம் செய்யாமல் அரண்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவரைக் கண்ட யானை உடனே பணிந்துவிட்டது. அவருடன் கூடவே சென்று பொக்கிஷத்தின் கதவுகளை உடைத்து எறிந்து அங்கிருந்த காசுகளை வெளியிலே இறைத்துவிட்டது. ரஸிககுமாரரும் குருதக்ஷிணையாகச் சேர வேண்டிய காசுகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு கிளம்பினார். அப்பொழுது யானை தன் தும்பிக் கையால் அவரைத் தூக்கி தன் மேல் வைத்துக்கொண்டு அவர் குரு இருந்த இடத்தில்கொண்டு வந்து சேர்த்தது.

---

ராமு வீடுவந்து களியால் வர்ணம் பூசியபொருள்கள், அப்பா, அம்மா, போலீஸ்காரர்கள், தன் கால்கள் எல்லாவற்றையும் தொட்டான். எல்லோரும் எப்போதும்போல் ஆகிவிட்டார்கள். அம்மாவிடம் இந்த ஆச்சரியத்தை ராமுசொன்னவுடன் குடுகுடுப்பாண்டிக்கு அப்பா ஒரு கிழிந்த சட்டை கொடுத்தனுப்பினார். அந்த குடுகுடுப்பைககாரன் வந்தால் உங்களுக்கும் ஏதாவது வாங்கிவைக்கிறேன். ஆனால் அதை ராமுமாதிரி உபயோகப் படுத்தக்கூடாது.

நடந்த விஷயங்களை அறிந்த குருவிற்கு ஆனந்தம் உண்டாகி, மற்ற மாணவர்களைப் பார்த்து, 'குழந்தைகளே! ரவிகுமாரிடம் உங்களுக்குப் பொறாமை வேண்டாம். அவன் மாதிரி இருக்க முயற்சித்தால் நீங்களும் நல்ல பெயருடன் இருக்கலாம். இல்லையேல் என்னிடம் நீங்கள் இருக்க வேண்டாம்! என்று சொல்லிவிட்டார். மற்ற மாணவர்களும் ரவிகுமாரின் உண்மை பக்தியை அறிந்து அவரிடம் அன்று முதல் அன்புடன் இருந்தார்கள்.

---

# யானைக்கதை

★

சின்ன பாப்பாக்கள் அழுதால் அம்மா அதை மடியில் உட்கார வைத்துக்கொண்டு 'ஆனை, ஆனை அழகர் ஆனை; ஆடுமாம் பெருமாளுக்கு ஆடும் ஆனை' என்று பாட ஆரம்பித்தால் குழந்தை அழுகையை நிறுத்திவிடுகிறது. கொஞ்சம் பருமனான ஆசாமியைக்கண்டால் 'என்னடா! சித்தானைக்குட்டி மாதிரி இருக்கிறான்' என்று சொல்லுகிறோம். யானையைப்பற்றி உங்களுக்குத் தெரியுமோ? அதைப் பார்த்தால்தான் பயமாயிற்றே. யானை எங்கேயோ வருகிறது என்று சொன்னால் சமையலறையிலேபோய் அம்மா பக்கத்தில் பத்திரமாக கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து கொண்டுவிடுவீர்கள். அப்படி நீங்கள் அதைக்கண்டு பயப்படாதிருக்கத்தான் அதைப்பற்றி உங்களுக்குச் சொல்லப்போகிறேன். முதலிலேயே பிள்ளையாரை வணங்கி இரண்டு குட்டுப்போட்டுக்கொண்டு ஆரம்பிக்கிறேன்.

மனிதர்களுக்கு உள்ள கெட்டிக்காரத்தனம் யானைக்கு இருந்திருந்தால், அது மனிதர்களை தொலைத்து அதுவே உலகத்தை ஆண்டுகொண்டிருக்கும் ஆனால் கடவுள் உலகத்தை அதனிடம் கொடுக்கவிரும்பவில்லை. அதற்குப் பதில் நிறையவயதைக்கொடுத்து விட்டார். கொஞ்சமல்ல, நூற்று ஐம்பது வருஷங்கள். சுமார் இருபத்தைந்து வருஷங்கள் அது தன்உடல்வளர்ச்சியிலே செலவழிக்கிறது. அதற்கு கண் சரியாகத் தெரியாது. ஆனால் காது நன்றாகக் கேட்கும். சாப்பாட்டுப் பண்டங்கள் எவ்வளவு ரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும் வாசனையினால் கண்டுபிடித்துவிடும். அவ்வளவுஉயர்ந்த மூக்கு. நீச்சலடிப்பதில் அதற்கு சமானம் வேறு ஒருவரும் கிடையாது. பெரிய மலைகளையும் வெகு சீக்கிரம் கடந்துவிடும். மிகவும் செங்குத்தான இடங்களிலே ரொம்ப ஜாக்கிரதையாகச் செல்லும் சாமர்த்தியம் உள்ளது. வரிசையாகச் செல்லுவதில் வருஷக்கணக்கிலே பயிற்சி பெற்ற பட்டாளங்கூட தோற்றுவிடும் அதன் டிரில் வாத்தியார் யார் என்று தெரிந்தால் உங்களையும் நல்ல பழக்கத்தில் கொண்டுவந்துவிடலாம். தெரியவில்லையே. இரவு நேரங்களில் அவை தண்ணீர் குடிக்கப் போகும்போதுதான், மிகவும் வேடிக்கையாக இருக்குமாம். ஆற்றங்கரைக்கு அருகில் வந்தவுடன் முதலில் ஒரு யானை மாத்திரம் ஆற்றிற்குச் செல்லும். வெகு நேரம் தண்ணீரை தடவிப் பார்த்த பிறகு ஒரு அபாயமும் இல்லாவிட்டால் மற்ற யானைகளுக்குத் தெரியப்படுத்த ஜலத்தில் 'குடுகுடு' என்று சப்தம் செய்யும். உடனே மற்ற யானைகள் வந்து நீர் குடிக்கும்.

உலகத்திலேயே இரண்டு இடங்களில்தான் யானைகள் அதிகம் இருக்கின்றன. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலுந்தான். ஆசியாவில நம் தேசத்தில்தான் யானைகள் அதிகம். ஆப்பிரிக்கயானையின் காதுகள மிகவும் பெரியதாய் கழுத்து வரையில் நீண்டிருக்கும். ஆனால் இந்திய யானைகளின் காதுகள் சிறிது சதுரமாய், சிறியதாய் இருக்கும். ஆப்பிரிக்க யானைகளின் துதிக்கையின் கடைசி பாகத்திலுள்ள முனைகள் இரண்டு பக்கத்திலும் நீண்டிருக்கும். இந்திய யானைகளுக்கு ஒரு பக்கத்தில்தான் அம்மாதிரி நீண்டிருக்கும். இந்திய யானையின் உயரம் பத்தரை அடி. ஆப்பிரிக்க யானை பதினொன்றரை அடி உயரமிருக்கும். ஆனால் இங்கிலாந்திலிருந்த 'ஜம்போ' என்று பெயர்கொண்ட யானை பன்னிரண்டு அடி உயரமும், ஆறரை டன் எடையுள்ளது. அது மிகவும் பிடிவாதக்கார யானை ஆனபடியால் அதை அமெரிக்காவுக்கு அனுப்பிவிட்டார்கள். அதனால் மிகவும் கோபம் அடைந்த ஜம்போ அமெரிக்காவில் இறங்கியவுடனே தப்பித்துக்கொண்டு ஓடி ஒரு ரயில் என்ஜினை அப்படியே தாக்கி எறிந்துவிட்டது. கோபம் வந்துவிட்டால் எந்த யானையையும் அடக்குவது கஷ்டம். ஆனால் அதற்கு சுலபமாக கோபமே வராது. அப்படி அதற்கு கோபம் அடிக்கடி வந்தால் உலகத்தில் மனிதர்களே இருக்க முடியாது. எல்லோரையும் தொலைத்துவிடும். அது அவ்வளவு சாந்தமாக இருப்பதற்கு மூளை குறைவாக இருப்பதுதான் காரணம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள் அதனால்தான் அது மனிதர்களுக்கு அடங்கி நடக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். மூளை இருந்தாலும், இல்லாவிட்டாலும் நமக்கு ஒன்றுதான். அது உபயோகம் உள்ள பிராணியா, இல்லையா என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

---

வாத்தியார் இட்டுவைப் பார்த்து:—

எத்தனை மணங்கு ஒரு பாரம்?

இட்டு:—எனக்கு ஒரு வீசையே பாரந்தான் ஸார்.








## உதவி

நாம் ஏன் பிறந்திருக்கிறோம் தெரியுமா? போண்டா, ஜிலேபி பகோடா சாப்பிடுவதற்கில்லை. ஸில்க் சட்டை என்ன, புஷ்கோட் என்ன இவைகளை அணிந்து கொண்டு பீச்சில் தடபுடலாக உலாவுவதற்காகவும் இல்லை. சாப்பிட்டான பிறகு நன்றாக தூங்குவதற்காகவும் கண்டிப்பாக இல்லை. பின் எதற்கு? பிறருக்கு உதவிசெய்யத்தான். ஏழைகள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிசெய்யத்தான். நோயாளிகள் எத்தனையோபேர்கள இருக்கிறார்கள் அவர்களுக்குத் தன் உடலைக் கொடுத்தாவது உதவி செய்யத்தான் நம்மைக் கடவுள் உண்டாக்கியிருக்கிறார். நம்முடைய வேலைகளை கவனித்துக்கொள்ள மாத்திரம் இல்லை. இவ்விஷயம் புரியாவிட்டால் தெரிந்து கொள்ளுங்கள்

மழையிலே பிறந்து, மலையிலே வளர்ந்து, காட்டிலும், நாட்டிலும் ஓடி உப்புக் கடலிலே கலக்கும் நதிகள் தங்களுக்கென ஏதாவது செய்துகொள்ளுகின்றனவா? உலகம் சந்தோஷமாக இருக்கவே அது பாடுபடுகின்றது. அவை எத்தனை அணைக்கட்டுகளில் கட்டுப்பட்டு கஷ்டப்பட்டு வெளியிலே தானாக ஓடிவந்து ஜனங்களுக்கு உதவுகின்றன.

மரங்கள் இருக்கின்றனவே உங்களை 'நான் காய், பழம், இலை, கிளை, நிழல் எல்லாம் கொடுக்கின்றேனே, எனக்கு ஏதாவது கொடுங்கள்' என்று கேட்கின்றனவா. தான் உலகிலே தோன்றியதுமுதல் கடைசி வரை தன் உடலையும் கொடுத்து மனிதனுக்கு உதவுகின்றது.

பால் இல்லாவிடில் உலகமே இல்லை என்று சொல்லிவிடலாம். அவ்வளவு அரிய உணவை அளிக்கும் பசுவிற்கு நாம் என்ன உதவி செய்கிறோம். நம்மிடம் எவ்வித உதவியையும் அவை எதிர்பார்ப்பதில்லை

நதிகள், மரங்கள், பசுக்கள் இவைகளுக்கு பகுத்தறிவு கிடையாது எனினும் பிறருக்கு உதவி செய்யவே இவை உலகில் உண்டாகி கடைசிவரை உதவிசெய்து வருகின்றன. இவை இப்படி இருக்கும்போது பகுத்தறிவுள்ள நாம் அவைகளைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றுகாண்பிக்க பரோபகாரம் செய்வதில் தளராமல் இருக்கவேண்டும். இல்லையேல் நதியும், மரமும், பசுவும் நம்மைக் கேலி செய்யும்.

---

உபாத்தியாயர்:—கார்காலம் என்றால் என்ன?

பணக்கார வீட்டுப் பையன்:— போர்டு, செவர்லட ஆஸ்டின், ப்யூக் முதலியவைகளில் எந்தக் கார் காலத்தைப்பற்றிச் சொல்ல வேண்டும் ஸார்!

# ஊர் வம்பு

அலாஸ்கா

★

வட அமெரிக்காவின் வட மேற்குப் பிரதேசத்திலுள்ள மாகாணம் இது இதன் விஸ்தீர்ணம் 590 884 சதுர மைல்கள். இதில் ஒரு பெரிய நதி இருக்கிறது. அதில் கப்பல் கூட போய் வருகிறதாம். நதியின் பெயர் யூகான. இங்கு பல எரிமலைகள் இருக்கின்றன. அதில் இன்லி என்ற மலை 20, 470 அடி உயரமும், ராங்கல் என்ற மலை 17,400 அடி உயரமும் இருக்கின்றதாம். இங்கு மரங்கள் மிகவும் அதிகம். அதைத்தவிர கம்பளி உற்பத்தியும் அதிகம். காட்லிவர் எண்ணை நாம் சாப்பிடுகிறோமல்லவா? அதற்குவேண்டிய காட என்றமீன்களும், ஸாலமன் என்றமீன்களும இங்குதான் பிடிக்கப்படுகின்றன. இங்கு தங்கச்சுரங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. நோமி முனை என்ற இடத்தில் ஏராளமான தங்கச் சுரங்கங்கள இருக்கின்றன. இங்கு எஸ்கிமோக்கள்தான் நிரந்தரமாக வசிக்கிறார்கள் முதலில் இம்மாகாணம் ரஷ்யாக்காரர்களிடம்தான் இருந்தது. 1867–ம் வருஷம் அமெரிக்காகாரர்களுக்கு 7,200,000 டாலருக்கு விற்கப்பட்டது. ஜூனோ என்ற நகரம் இதன் தலை நகரமாக விளங்குகிறது. மொத்த ஜனத்தொகை 75,036 தங்கம் தண்ணீர் மாதிரி கிடைப்பதால் இம்மாகாணத்துக்கு குபேரபட்டணம் என்று பெயர் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

# மன்னி

( பீ. ஸி. பார்வதி )

எனக்கு ராஜத்தின் செய்கை கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது தன் ஓரகத்தி விசாலத்திடம் அவள் இப்படி பரபரப்புடன் நடந்து கொள்வதைக் கண்டு வியந்தபடி நின்றேன் விசாலத்தின் பெண் கமலத்திடம் ராஜம் அவசர அவசரமாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

"கமலா, சீக்கிரம் போடி. மன்னி குழந்தையை எடுத்துக்கொண்டு கொல்லைப்புறம் போயிருக்கிறாள்" என்று பதறினாள் ராஜம் அவள் பேச்சில் பயம், ஆத்திரம், கோபம் எல்லாம் ஒருங்கே தொனித்தது

"ஐயய்யோ நிஜமாகவா சித்தி?" என்று கூவியவாறு கமலா தன் கையில் இருந்த பாத்திரத்தைக் கீழே எறிந்துவிட்டு கொல்லைப் பக்கம் நோக்கிப் பறந்தாள் அவள் போன திக்கைப் பார்த்தபடியே ராஜம் 'கமலா, மன்னிக்கு நல்ல வார்த்தை சொல்லி எப்படியாவது குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து விடம்மா!' என்று கூறினாள்

மன்னி குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனால் அதற்கு இவர்கள் இப்படி பயந்து சாவானேன்? எனக்கு ஏனோ அது விநோதமாகப்பட்டது. மன்னி குழந்தையை எடுத்துக்கொண்டிருக்கிறாள் என்றதும். மன்னியின் பெண் கமலா எதற்கு. 'ஐயய்யோ!' என்று கத்தினாள்? தன் தாய் தன்னைத் தவிர வேறு ஒரு சிசுவையும் தொடக்கூடாது என்ற வீண் பொறாமையினாலா? சே. இருக்காது அப்படி நினைப்பதற்கு அவள் என்ன பச்சைக் குழந்தையா? பின் எதற்காக கத்தினாள்? எனக்கு மூளை குழம்பியது ஒரு வேளை ராஜத்துக்குத்தான் மன்னி தன் குழந்தையை எடுத்துக்கொள்வது பிடிக்கவில்லையோ? அப்படித்தான் இருக்க வேண்டும் ஆனால், அவள் தன் வெறுப்பை மன்னியின் பெண் கமலாவிடமே காட்டிக்கொள்வாளா? நான் யோஜனை செய்தபடி உட்கார்ந்திருந்தேன். வாயைத் திறந்து ராஜத்திடம் அதைப்பற்றிக் கேட்க எனக்கு அப்பொழுது அவகாசம் கிட்டவில்லை துணிச்சலும் வரவில்லை. நான் அவளை குறை கூறுகிறேன் என்று அவள் நினைத்துவிட்டால்?

கமலாவின் குரல் பக்கத்தில் கேட்டது "நல்ல வேளை சித்தி அம்மா குழந்தையை பந்து போல மேலே போட்டுப் போட்டுப் பிடித்துக் கொண்டிருந்தாள் நான் அங்கு போனதும், 'பாருடி கமலா, இப்படி தூக்கிப் போட்டா என்ன சந்தோஷம் இவனுக்கு!' என்று சொல்லிக் கொண்டே மறுபடி மேலே போடப் போனாள் இப்படியே விட்டு வச்சா எப்போ மனம் திடீர்னு மாறிவிடுமோ என்று பயந்து குழந்தையை அவளிடமிருந்து எடுத்துக்கொண்டு 'அவனை சிரிக்கப் பண்ணனுமானா இப்படி பண்ணினாக்கூடப் போருமே!' என்று சொன்னபடி அவனைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்து விட்டேன் நல்ல வேளையா குழந்தை கலகலன்னு சிரிச்சான். இல்லாவிட்டால் அம்மாவுக்கு என் தந்திரம் தெரிஞ்சு போயிருக்கும் சீ வீட்டுக்குள்ளே எப்படி எல்லாம் தந்திரம் பண்ண வேண்டி இருக்கு பாரேன்!" என்று ஒரே மூச்சில் பேசி முடித்தாள் கமலா

குழந்தையின் கன்னத்தைக் கிள்ளி, நல்ல வேளை இந்த தடவையும் பிழைத்தாய்டா கண்ணா!" என்று கவலை தீர்ந்து பெருமூச்சு விட்டாள் ராஜம்.

எனக்கு அவர்கள் பேச்சு புரியாப் புதிராக இருந்தது இந்த சமயம் மன்னி விசாலமும் அங்கு வந்து சேர்ந்தாள் "பார்த்தாயா ராஜம். உன் பிள்ளைக்கு இப்படி தூக்கிப் போட்டால என்ன சந்தோஷம் தெரியுமோ? அவனைத் தூக்கிக்கொண்டு ஓடினா இன்னும் சிரிச்சு மகிழ்ந்துக்கறான்!" என்று ராஜத்திடம் பெருமையாகச் சொன்னாள் ராஜம் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "அப்படியா மன்னி?" என்றாள், பிறகு மன்னி தனக்கு குழந்தையின் விளையாட்டைக் காட்ட மறுபடி குழந்தையைத் தூக்கிக்கொண்டு விடுவாளோ என்று பயந்தவளாய்

'கமலா, எதுக்கம்மா குழந்தையை இந்தப் புகையிலே இங்கே வச்சிக்கணும்? வேறு காத்தாட எங்கேயாவது கொண்டு போயேன்." என்றாள் கமலாவும் அவள் குறிப்பை அறிந்து கொண்டு அங்கிருந்து போய் விட்டாள்

அன்றா முழுவதும் அவர்களுடைய இந்த நாடக பாணியான நடத்தை என் மனதை என்னவோ செய்து கொண்டே இருந்தது மன்னி இருந்த இடத்தில் ஒரு நிமிஷ நேரமாவது ராஜம் தன் குழந்தையை விட்டு வைக்கமாட்டாள் மன்னி அவனைத் தூக்கிக்கொண்டால் உடனே ஏதாவது காரணம் சொல்லி அவனை அங்கிருந்து அகற்றிவிடுவாள்.

நான் அங்கு போனதிலிருந்து மன்னி எனக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களும் பார்த்துப் பார்த்து செய்து கொடுத்தாள் அன்பு ஒழுக வார்த்தை ஆடினாள் எல்லோரிடமும் மலர்ந்த முகத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். எனக்கு அவளை ரொம்ப பிடித்துப் போயிருந்தது இவ்வளவு தங்கமான குணம் படைத்த மன்னி ராஜத்தின் குழந்தையை மட்டும் தொடக்கூடாதா? அவள் பைத்தியமா? இல்லை குழந்தையை கடித்துத் தின்றுவிடுவாளா? ராஜத்தின் நடத்தை எனக்கு அருவருப்பை அளித்தது. எவ்வளவோ பெண்கள் ஒரு மலடி தன் குழந்தையைத் தொட்டால் அதன் புஷ்டி குறைந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் ராஜம் அப்படி எண்ணுவதற்கும் இங்கு இடம் இல்லையே? மன்னி மலடி இல்லையே, கமலா மன்னியின் குழந்தைதானே? ராஜம் மன்னியுடன் சண்டை கிண்டை போட்டுக்கொண்டிருக்கிறாளா? சே, அதுவும் இருக்காது. அப்படி சண்டை போட்டுக் கொண்டிருந்தால் அவர்கள்



இப்படி அன்னியோன்னியமாக இருப்பார்களா? தான் மன்னி மேல்கொண்டிருக்கும் வெறுப்பையோ, கோபத்தையோ அவளால் இவ்வளவு சகஜமாய் கமலாவிடமே காட்ட முடியுமா?

என் கல்கத்தா பிரயாணத்தின் நடுவில் ஒரு நாள் நாகபூரில் இறங்கி என் பழைய சிநேகிதி ராஜத்தின் வீட்டில் தங்க எண்ணி அவளுக்கு லெட்டரும் போட்டிருந்தேன் ஸ்டேஷனில் என்னை எதிர் அழைக்க ராஜமும், மன்னியும்தான் வந்திருந்தார்கள். என்னைக் கண்டதிலிருந்து அவர்கள் எனக்கு வேண்டிய சிஷ்ருஷைகள் செய்வதில் கொண்டிருந்த கவனமும் சந்தோஷமும் சொல்லில் அடங்கா மன்னிக்கு நான் ராஜத்தின் சிநேகிதி என்ற முறையில்தான் பழக்கம் ஆனால் அவள் என்மேல் அபார சிநேகம் கொண்டிருந்ததாக எனக்குப் பட்டது, என் பழைய சிநேகிதியையும் அவள் சொந்தக்காரர்களையும் கண்டதில் எனக்கு ஒரே ஆனந்தம் ஆனால், அந்த ஆனந்தமெல்லாம் அன்று சமையலறையில் நடந்த அந்த நாடகத்தைக் கண்ட பின் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது சீக்கிரம் இங்கிருந்து கிளம்பினால் போதும் என்று தோன்றும்படி கூட இருந்தது ஆனால் எப்படியும் கிளம்புவதற்குள் ராஜத்திடம் அவள் ஏன் அப்படி நடந்துகொள்கிறாள் என்றுகேட்டு அறிந்துகொண்டு முடியுமானால் இரண்டொரு புத்திமதியும் சொல்லிவிட வேண்டும் என்று திட்டம் போட்டேன்.

நல்ல வேளையாக அன்று மாலை நாங்கள் உலாவச் சென்றபோது மன்னி தலைவலிப்பதாகச் சொல்லி எங்களுடன் வர மறுத்துவிட்டாள் கமலாவும் அவளுடைய சிநேகிதிகளுடன் வேறு எங்கோ போய்விட்டாள் இந்த நல்ல தருணத்தைக் கைவிட மனமில்லாமல் நான் ராஜத்துடனும் அவள் குழந்தை கண்ணனுடனும் பக்கத்தில் இருந்த சிங்காரத் தோட்டத்திற்குச் சென்றேன். முதலில் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று எனக்குப் புரியவில்லை ஏதேதோ பழைய பள்ளிக்கூட நினைவுகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டே அங்கு இருந்த ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தோம் பொழுதுபோய்க் கொண்டே இருந்தது இப்படியே வீண் பொழுது போக்கினால் நான் அறியவேண்டிய விஷயம் நின்றுவிடும் என்று தோன்றியது மெள்ள ராஜத்தின் குழந்தைக்கு நேர் கையை நீட்டி "நீ எங்கிட்டே வருவயோ?' என்றேன். அந்த சிசுவும் சிரித்துக் கொண்டு என் கைக்குள் தாவியது

"அட பார் போக்கிரியை! பல நாள் பழகினதுபோல் உங்கிட்ட வரதே!" என்று சொல்லிச் சிரித்தாள் ராஜம்.

இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் "அது சரி ராஜம் நான் ஒன்று கேட்பேன் கோபிக்காமல் பதில் சொல்லுவாயா?" என்றேன்.

அவள் ஆச்சரியத்துடன் என்னை ஏறிட்டுப் பார்த்தாள் "பார்த்தாயா! நான் எப்பொழுதாவது உன்னிடம் எதையும் ஒளித்ததுண்டா? நீ கேட்டதைச் சொல்லாமல் இருந்ததுண்டா?" என்றாள் அவள்.

"நீ புருஷன் வீட்டிற்கு வந்தபின் இப்பொழுதானே உன்னை முதலில் பார்க்கிறேன்? ஒரு வேளை சகவாச தோஷத்தினால் நீ மாறி இருக்கலாமே அதுதான் கேட்டேன்! என்று சிரித்தேன்.

"யாருடைய சகவாச தோஷம்?" என்று கேட்டு அவளும் சிரித்தாள், "இப்போ கேளு நான் யாருடைய சகவாசத்தாலும் இன்னும் மாறவில்லை. பழைய ராஜம்தான்" என்றாள்.


"சரி ராஜம். இப்போ நான் கண்ணனை தூக்கிக்கொண்டபோது நீ சந்தோஷப்பட்டாய் ஆனால் இன்று காலை விசாலம் மன்னி அவனைத் தூக்கிக்கொண்டு கொல்லைப் புறம் போனபோது நீயும் கமலாவும் ஏன் இப்படி தவியாய் தவித்தீர்கள்? மன்னியிடம் நீ ஏன் இவனை ஒரு நிமிஷம்கூட விட்டுவைக்கிறதில்லை? எல்லாவற்றையும் எனக்கு விவரமாக சொல்லலாமானால் சொல்லு!' என்றேன்.

'இவ்வளவுதானா? சரி சொல்லுகிறேன். ஆனால். அதைப்பற்றி மன்னியிடம் மட்டும் ஒரு பேச்சும் பேசிவிடாதே அப்புறம் ஏதாவது ஆனால் நான்தான் கஷ்டப்படவேணும் என்றாள் ராஜம் நான் மௌனமாய் இருப்பதாக ஒப்புக் கொண்டபின் ராஜம் சொல்லத் தொடங்கினாள்.

* * * *

எனக்கு கல்யாணம் ஆன புதிதில் அதாவது இரண்டு வருஷங்களுக்கு முன் மன்னிக்கு கண்ணனைப் போல் ஒரு வயதில் ஒரு பிள்ளை இருந்தது உனக்கு ஞாபகம் இருக்கலாம் கமலாவுக்குப் பின் பதினாறு வருஷம் குழந்தைகள் இல்லாமல் இருந்து ஒரு ஆண் குழந்தை அபூர்வமாகப்பிறந்ததில் அண்ணாவுக்கும் மன்னிக்கும் ஒரே சந்தோஷம் எப்பொழுதும் அவனைச் சீராட்டுவதிலேயே பொழுதுபோய்விடும் அவர்களுக்கு. அவனும் செல்லப் பிள்ளையாக இருந்ததால், அவன் செய்யும் விஷமம் பொறுக்கமுடியாததாக இருந்தது. அவனைக்கண்டிக்க அவர்களுக்கு மனம் வருவதே இல்லை.

கல்யாணம் ஆன புதிதில்சாதாரணமாக எல்லோருக்கும் இருப்பதுபோல் எங்களுக்கும் தனிக்குடித்தனம் பண்ணவேண்டும் என்று ஒரே ஆசை. ஆனால் அண்ணாவும் தம்பியும் ஒரே ஊரில் இருந்துகொண்டு வேறு வேறு குடித்தனம் வைத்தால் நன்றாக இருக்



"இந்த போட்டோவில் மாப்பிள்ளை ஏன் இவ்வளவு கவலையோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்."

"வீட்டுக் கஷ்டத்தையும், ரேஷன் 'க்யூ' வையும் தேடுரேன்று நினைத்துக்கொண்டிருப்பார்!"



"இந்த படை படைக்கிற வெய்யில்லே கையிலே குடை இல்லாமெ, கால்லே செருப்பும் இல்லாமெ, எங்கேடா பைத்தியக்காரனாட்டும் சுத்தறே?"

"கீழ்பாக்கத்துக்கு ஒரு அவசர காரியமா போறேன், ஸார்!"

குமா? அவர்களுடைய குழந்தை விஷமம் செய்கிறது என்று நாங்கள் பிரிந்துபோனால் அண்ணாவும் மன்னியும் எவ்வளவு வருத்தபடுவார்கள்? குழந்தையை அவர்கள் கண்டிக்காமல் இருக்கும்போது நாங்கள் மட்டும் கண்டித்தால் அண்ணாவுக்கு மனம் பொறுக்குமா? அண்ணாவும் மன்னியும் தங்கள் குழந்தைக்கு செல்லம் கொடுத்தார்களே ஒழிய, எங்கள் இருவர் பேரிலும் அவர்களுக்கு இருந்த அன்பு கொஞ்ச நஞ்சம் அல்ல அதனால் அவர்களை 'தா' என்று தூர தள்ளிவிட்டு நாங்கள் தனிக் குடித்தனம் பண்ணக் கிளம்பவில்லை ஆனால், அதற்குப் பதில் அந்த சிறுவனை சிறிதும் கவனிக்காமல் இருப்போம் அவன் கட்டிலிலிருந்து விழுந்தாலும் சரி பசி எடுத்து அழுதாலும் சரி, நாங்கள் சிறிதும் அவனைக் கவனிக்காது அவனைப்பற்றிய விஷயங்கள் யாவையும் அண்ணா-மன்னியிடமே விட்டு விட்டோம் நாங்கள் இப்படி கல் நெஞ்சர்களாக இருந்தது அண்ணாவுக்கும், மன்னிக்கும் தெரியாமல் இல்லை எங்களுக்கு குழந்தை இல்லையே என்று நாங்கள் அப்படி இருக்கிறோம் என்று நினைத்து, எங்கள் பேரில் மேலும் அவர்கள் கருணையே காட்டினார்கள் ஆனால், நாங்கள் மட்டும் முன்போலவே தான் இருந்துவந்தோம். இப்படி அந்தக் குழந்தையை நாங்கள் கவனிக்காமல் இருந்தது தான் கடைசியில் ஒரே வினையாக முடிந்துவிட்டது

எங்கள் வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் ஒரு பாழுங் கிணறு இருக்கிறது பார்த்தாயா? குழாய் வைப்பதற்கு முன் அதில் தான் நாங்கள் தண்ணீர் எடுப்பது ஒரு நாள் மன்னி கிணற்றடியில் புடவை துவைத்துக் கொண்டிருந்தாள் நான் சமையலறையில் ஏதோ வேலையாய் இருந்தேன் கமலா பள்ளிக்கூடம் போயிருந்தாள் அப்பொழுதெல்லாம் கேட்க வேண்டுமா? குழந்தையைக் கவனிக்காமல் நான் மூறைபபாக இருந்துவிட்டேன் அதனால் யாரும் வேறு அங்கு இல்லாததால் அவன் மன்னியுடன் கிணற்றடிக்குப் போயிருக்கிறான். இது மன்னிக்குத் தெரியாது புடவைக்குச் சோப்புப்போட்டுக்கொண்டிருந்தவள் குழந்தை பயந்துகொண்டு அழும் சப்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்திருக்கிறாள். உடைந்து போயிருந்த கிணற்று மதில் வழியாக குழந்தை அப்பொழுது தான் கிணற்றிற்குள் விழுந்துகொண்டிருந்தான் மன்னிக்கு அவனை எட்டிப் பிடிக்கவும் முடியாமல் போய்விட்டது. குழந்தை தொப்பென்று தண்ணீருக்குள் மறைந்தான் மன்னி அப்படியே வீரிட்டுக் கத்தினாள் பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் கூடிவிட்டார்கள் இரண்டு பேர் இடுப்பில் கயிற்றைக் கட்டிக்கொண்டு கிணற்றில் இறங்கி குழந்தையை மேலே கொண்டு வந்தார்கள் ஆனால் மேலே கொண்டு வரும் வரை குழந்தை உயிருடன் இருக்கவில்லை விழுந்த உடனேயே மூக்கினாலும் வாயினாலும் ஜலம் சுவாசப் பைக்குள் நிரம்பி இருக்கவேண்டும். சக்கரத்தில் வைத்துச்சுற்றி சுவாசப் பையில் உள்ள நீரை எடுத்துப் பார்த்தும், சூடு ஒற்றடம் கொடுத்தும் குழந்தை பிழைக்கவில்லை

குழந்தை இப்படி எதிர் பாராத விதத்தில் உயிரை விட்டது மன்னிக்கு சித்தப்பிரமையே பிடித்து விட்டது. வெகு அருமையாக வளர்த்த மகன் இப்படி அவளை ஏமாற்றியது. அவள் தலையில் பேரிடி விழுந்தது போலவே ஆகிவிட்டது அவள் அன்று முதல் ஒரு பைத்தியம் போல் ஆகிவிட்டாள் ஞாபக சக்தியே சிறிதும் இல்லாமல் போய் விட்டது நாம் எதையாவது கேட்டால் மன்னி ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் வேறு எதையாவது சொல்வாள் தனக்குத் தானே பேசிக்கொண்டு சிரிக்கவோ அழவோ செய்வாள் அண்ணாவும் ஒரே மௌனியாகி விட்டார். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பார் யாராவது பேசினாலும் சரிவர ஒரு பதிலும் அவர் அளிப்பதில்லை இவ்வளவுக்கும் நானே தான் காரணம் என்று ஏதோ ஒன்று என் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது. குழந்தையை நான் கவனிக்காமல் விட்டு வைக்கக் கொண்டுதானே அவன் கிணற்றில் விழுந்தான்? அதனால் தானே மன்னிக்கு பிரமை ஏற்பட்டது? நான் என்னையே சபித்துக் கொண்டேன். மன்னியை என் கண்ணுக்குள் வைத்து இமையால் மூடிக் காப்பாற்றுவது என் கடமை என்று கங்கணம் கட்டிக் கொண்டேன் மன்னிக்கு சீக்கிரம் குணமாக வேண்டும் என்று பகவானைப் பலவாறு பிரார்த்தித்தேன். பகவான் கிருபையால் அவளுக்கும் மெள்ள மெள்ள குணம் ஆகிக்கொண்டு வந்ததுடன், அவள் அந்தக் கோர சம்பவத்தை அடியோடு மறந்திருந்தாள், ஆறு மாதத்தில் மன்னி பழைய படியே நன்றாக ஆகிவிட்டாள் நானும் வெகு சந்தோஷத்துடன் மன்னியுடன் பேசி அவளை குஷியுடன் வைத்துக்கொண்டேன் அவளுடைய சிசுவின் சாவிற்கு நான் தான் காரணம் என்பதை அவளிடம் கூறி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று என் உள்ளம் துடித்தது. ஆனால், அந்தப் பேச்சை மறுபடியும் அவளிடம் எடுத்தால் பழையபடி அவளுக்கு மூளைக் கோளாறு ஏதாவது வந்து விடுமோ என்று பயந்து பேசாமல் இருந்தேன் ஆனால் என் செய்கைக்கு பிராயச் சித்தமாக மன்னியை மட்டும் என் உயிர் உள்ளளவும் வெகு அன்பாக நடத்த வேண்டும் என்ற தீர்மானத்துடன் இருந்தேன் அன்று முதல் அவளை விட்டுப் பிரியாமல் இருந்து வருகிறேன்.

ஒரு வருஷத்தில் மன்னி பூரண குணம் அடைந்துவிட்டாள். பழைய அன்பு உருவமாய் அவள் வீட்டில் நடமாடுவது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது இந்த சமயத்தில்தான் கண்ணன் எனக்குப் பிறந்தான் மன்னிக்கு ஒரே சந்தோஷம் பக்கத்து வீட்டுக்காரர்களை எல்லாம் அழைத்து சர்க்கரை, பழம் கொடுத்து பெருமை அடித்துக்கொண்டாள் தன் மகன் இறந்த சம்பவத்துக்குப் பின் வாய் திறந்து அவனைப்பற்றி ஒன்றுமே பேசாமல் ஒரு வருஷம் கடத்திய மன்னி என் குழந்தையைப் பார்த்து பொறாமைப் படுவாளோ என்று என் கள்ள மனம் பன்முறை சிந்தித்துப் பார்த்ததுண்டு ஆனால், மன்னி இவ்வளவு ஆசையுடன் எல்லாம் செய்வது எனக்கே ஆச்சரியமாக இருந்தது

கண்ணன் தவழ்ந்து விளையாடும் வயதை அடைந்துவிட்டான். அப்பொழுதுதான் மன்னிக்கு பழையபடி புத்தி சுவாதீனம் மறுபடி இல்லாமல் போயிற்று கண்ணனைத் தன் இறந்து போன குழந்தையைப்போல் பாவித்துக்கொஞ்சி விளையாடுவாள் முதலில் எனக்கு அது அவ்வளவாக விரோதமாகப்படவில்லை. மன்னி இஷ்டப்படியே கண்ணனை விட்டு வைத்திருந்தேன் ஆனால், நாளுக்கு நாள் அவள் செய்கை என்னை பெரும் திகிலில் ஆழ்த்தியது அவ்வளவு நேரம் பேசாமல் சாதாரணமாக இருக்க மன்னி கண்ணனைக் கண்டால் ஏதேதோ பிதற்றுவாள் ஒருநாள் அவள் கண்ணனைத் தூக்கிக்கொண்டு கொல்லைப் புறம் சென்றிருந்தாள் மன்னி பிதற்றுவாளே தவிர அவள் கைகடந்தசெயல் ஒன்றும் செய்து நான் அதுவரை கண்டதில்லை ஆனால், அன்றோ எதேச்சையாக கொல்லைப்புறம் சென்ற நான் மன்னியின் விளையாட்டைக் கண்டு தீயை மிதித்ததுபோல் திடுக்கிட்டேன்.



அவள் என் கண்ணனை அந்த பாழும் கிணற்றுக்கு நேரே நீட்டிப் பிடித்துக் கொண்டு, "நீ எனக்கு வேண்டாம் போ! என் குழந்தை அங்கே தனியே இருக்கான் நீயும் அவனோடு போய் விளையாடு! என்று சொல்லி குழந்தையை கிணற்றுக்கு நேரே குலுக்கிக் கொண்டிருந்தாள் இளம் கன்று பயமறியாதென்பதுபோல் என் குழந்தை தான் இருக்கும் அபாயகரமான நிலையைச் சிறிதும் உணராமல் மன்னியின் இந்த விளையாட்டை ரசித்தபடி சிரித்துக்கொண்டிருந்தான் நான்நின்ற இடத்தில் இருந்தபடியே கத்தினால் மன்னி கட்டாயம் திடுக்கிட்டுத் திரும்புவாள் அந்த அதிர்ச்சியில் குழந்தை அவள் கையிலிருந்து நழுவி கிணற்றின் பாதாளத்தில் விழும் என்று அறிந்துகொண்டேன் மனம் பதைக்க ஒரே எட்டில் தாவி மன்னியின் கையுடன் சேர்த்து குழந்தையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதைத் தரைப் பக்கம் இழுத்தேன் என்னைக் கண்டவுடன் என் கண்ணன் என் மேல் தாவி என்னை இறுக கட்டிக் கொண்டான் குழந்தையைக் காப்பாற்றிய பெருமையினால் என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது மன்னி என்னை முறைத்துப் பார்த்தாள். அவள் கண்களில் பயங்கர ஒளி வீசியது அவளைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது என் பார்வையைக் கீழே தாழ்த்திக்கொண்டு சாந்தமாக, 'மன்னி, குழந்தைக்கு கூழ் கொடுக்க நேரம் ஆகவில்லையா? உள்ளே போவோம் வாருங்கள்!' என்றேன். மன்னி வாய் பேசாது என்னைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தாள்

அன்று கொஞ்ச நேரத்திற்குள் மன்னியின் இந்தப் பித்து மாறிவிட்டது அவள் வேண்டுமென்றே பழிக்குப் பழி வாங்கத்தான் அப்படி செய்தாளோ என்றுகூட என குற்றமுள்ள நெஞ்சு நினைத்தது இந்த சம்பவத்தை யாரிடமும் சொல்ல எனக்கு மனம் வரவில்லை ஒரு வேளை நான் மன்னி பேரில் குற்றம் சாட்டுகிறேன் என்று யாராவது நினைத்தால்? எனக்கு வெகு பயமாக இருந்தது. என் பெற்ற மனம் தவித்தது கண்ணனை மன்னியிடம் போகவிடாமல் இருக்க பல வழிகளிலும் முயன்றேன் ஆனால் நான் ஒருத்தியாக எவ்வளவு நாள்தான் அப்படி இருப்பது? குழந்தையை யாராவது எடுத்துக் கொள்வார்கள். அவர்களிடமிருந்து அவனை மன்னி வாங்கிக்கொண்டுவிடுவாள் அவளிடமிருந்து அவனைப் பிரிக்க எனக்கு அவகாசம் இல்லாமல் போய்விடும். நானும் படாத பாடு படுவேன் சுய புத்தியுடன் இருந்தாலும் கண்ணனையும் கிணற்றையும் ஒரே சமயத்தில் பார்க்க நேரிட்டால் மன்னிக்கு உடனே வலிப்பு மாதிரி வந்து விடும் அவனைத் தூக்கிக்கொண்டு கிணற்றுக்குள் போடப் போய் விடுவாள் 'என் குழந்தை மட்டும் தனியே அங்கே இருக்கானே, நீயும் போய் அவனோடு விளையாடேன்!' என்று சொல்வாள் ஒரு நாள் அண்ணாவே அவள் அப்படி செய்வதைக் கண்டுவிட்டார் அதன் பின்தான் வீட்டில் உள்ள யாவருக்கும் இப்படி ஒன்று நடக்கிறது என்று தெரியவந்தது. அன்று முதல் குழந்தையை மன்னியின் எதிரில் வைத்துக்கொள்ளவே கூடாது என்று அண்ணாவே எல்லோருக்கும் கண்டிப்பான உத்தரவு போட்டுவிட்டார் மன்னிக்கும் கண்ணனைத் தூக்கிக்கொண்டால் தான் கிறுக்குளகுகிறது. இல்லாவிட்டால் சாதாரணமாக சாந்தமாகத் தான் இருக்கிறாள் எனக்கும் இப்பொழுதுதான் சரியாக மூச்சு வருகிறது

ராஜம் தன் கதையை முடித்தாள்.

'சரிதான் ராஜம். நீ ஏன் இந்த நெருக்கடியில் குழந்தையை வைத்துக்கொண்டு இங்கே இருக்கவேண்டும் வேறு வீடு பார்த்துக்கொண்டு போகிறதுதானே!' என்றேன் நான்

'போடி அசடே. மன்னியின் குழந்தையின் சாவுக்குக் காரணமாக இருந்த நான், என் குழந்தைக்காக அவளை விட்டு விட்டுப் போவேனா? ஒரு நாளும் மாட்டேன் மன்னியும் சௌகரியமாக இருக்கவேண்டும். என் குழந்தையும் அபாயம் இல்லாமல் இருக்கவேண்டும் நான் வேறு வீடு பார்த்துக்கொண்டு போனால் என் தீர்மானம் என்னாவது? என்றாள்.


'நீ சொல்வது சரிதான்' என்றுகூறி கண்ணனைத் தூக்கிக்கொண்டேன்

'ரொம்ப நேரம் ஆகிவிட்டதே, மன்னிக்கு தலைவலி எப்படி இருக்கிறதோ பாவம்! என்று கவலையுடன் ராஜம் எழுந்தாள்.

---


Zam-Buk ஜாம்பக்

விரைவில் வேதனை, வலிகள் பிடிப்புகளை நிறுத்தும்




உட்புகுந்து சமனமூட்டும்

ஜாம்பக்கில் சுத்திகரித்த மூலிகை எண்ணெகள் இருப்பதால் சருமத்தினூடே புகுந்து விரைவில் நிவாரணமளிக்கும் தசை வலி பிடிப்பு, வெடிப்பு வலியுள்ள பாதம் இவற்றையும் காயப் தீப்புண் பொடுகு, பூச்சிக்கடி மூலம் முதலிய சரும ரோகங்களையும் அற்புதமாகத் தீர்க்கும் மிருகக் கொழுப்பு சேராததற்கு உத்தரவாதம்.

ஏஜண்டுகள்:—தாதா அண்டு கம்பெனி லிமிடெட் மதராஸ்.

ஜாம்பக் உலகிற் சிறந்த சருமக் களிம்பு






1

வஞ்சியும் நானும் கடற்கரையில்—காதல்
வார்த்தைகளாடித் திரும்புகையில்
மஞ்சு திரண்டது வானமதில்!—ஒளி
மங்கிக் கலந்தது காரிருளில!

2

காற்றுமிகுந்தது; பொன்மணலும்—சாடிக்
கண்ணை மறைத்தது ஓர்நொடியில
தூற்றல விழுந்தது நாங்களுமே—ஓடித்
தொட்டுவிட்டோம் எங்கள் வீட்டினையே!

3

மாடியிலேறியே நின்றிருந்தோம்—கொட்டும்
மாரியின் காட்சியைக் கண்டுவந்தோம்!
கோடிமுனையினைச்சுட்டி, 'அந்தோ!—படு
கோரம்!' எனறே வஞ்சி கூச்சலிட்டாள்!

4

சுட்டிய திக்கினில் ஓர் குடிசை—தன்னைத்
துறைபொடித்ததோர் காட்சியையும்
கொட்டும் மழையிலிரண்டுருவம்—நின்று
கூவிக்கலங்கலும் கண்டயர்ந்தேன்

5

'சொத்தைக் குடிசைகள் எத்தனையோ?—இந்தச்
சோதரர் போன்றவர் எத்தனையோ?
அத்தனை மாந்தரும் இத்தரையில—பெரும்
ஆனந்தம் கொண்டிடும் நாள் வருமா?'

6

என்றுபுலம்பினேன்: வஞ்சிசொன்னாள்—சென்று
இங்கவர்தம்மை அழைத்திடென்றே!
என்றனுலாதும் பணியிதுவே—என
எட்டி நடந்தனன் அக்கணமே!






'செல்வத்துள் செல்வம் வண்மைச் செல்வம்' என்பதில் சிறிதேனும் ஐயம் இருப்பதற்கில்லை கொடைத் தன்மை மாபெருஞ்செல்வமாகக் கருதப்படும்போது, மற்றைய செல்வங்கள் அதன் முன் பறந்தோடி விடுகின்றன! கோடிக் கணக்கில் ஐசுவரியத்தைக் குவிப்பவன், அதை வண்மை நெறியில் பிரயோஜனப் படுத்தவில்லையென்றால் அவன் மக்கட் பண்பு இல்லாதவன் என்றே தீர்மானித்துவிடலாம்.

எளியவரைக் கண்டால் இன்முகங் காட்டி 'அமுதாட்டி, இயன்ற பொருளைக் கையிற் கொடுத்து அனுப்புகிறவனைத்தான் உலகத்தின் கண்கள் மறக்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றன! உலோபிகளின் செல்வத்தைவிட வள்ளல்களின் வறுமை எவ்வளவோ மேல்' என்பது அறிஞர்கள் கண்ட முடிவாகும்.

ஒரு மனிதன் உலகமுள்ளளவும் தன் கீர்த்தியை ஸ்தாபிக்க வேண்டுமானால் அவனிடம் சிறந்த பண்புகள் இருக்கவேண்டும் பண்பற்றவன் பதம் பெற மாட்டான்! இது உறுதி.

அப்பண்புகளிலே தலை சிறந்த பண்பு கொடைப் பண்பே வீரத்தில் தலை சிறந்தது கொடைப் பண்பின்

## 17

## முன்னும் பின்னும்

★

வீரமே. பகைவனை எதிர்த்துவென்று வெற்றி மாலை சூடும் வீரத்தைவிட, பகைவனை மன்னித்து அவனது தீக்குணத்தைப் போக்கிப் பழைய நன்னிலையில் பொருத்தி வைக்கும் வீரமே உயர்ந்தது

நம் நாட்டில் மாபெரும் வீரர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் மகத்தான செயல்கள் புரிந்த தீரர்கள் பலரும் இருந்திருக்கிறார்கள் அவர்களுக்குள் கர்ணன் என்ற வீரனுக்குக் கிடைத்த ஒப்பற்ற ஒரு தனிப்பெருமை சாமானியமானதன்று அவன் படைவீரர் மாத்திர மல்லன்; கொடை வீரனும் கூட.

* * * *

அன்று மகாபாரத யுத்தத்தின் பதினேழாம் நாள். கர்ணன் சிறிதும் தளராமல் தான் போரிட்டான். அவன் எதிரியின் படைக் கஞ்சவில்லை வீர விஜயனின் காண்டீபத்தைக் கண்டும் மிரளவில்லை. வீர சிங்கமே போல் கர்ஜனை புரிந்து விதம் விதமாகப் பாணங்களை எதிரியின் மேல் ஏவியே போர் புரிந்தான். பார்த்தன் மார்பைத் துளைத்து உட்புகக்கூடிய கோரமான கணைகளையும் அவன் உபயோகிக்காமல் இல்லை. ஆனால் அந்தப் பாரதப் போர் அவன் வெற்றிக்காகவா நடந்தது? பாண்டவர்களுக்கல்லவா வெற்றி கிட்ட வேண்டுமென்று விதியின் சட்டம் பிறந்திருக்கிறது!

அதனால் விஜயனின் வீர முழக்கத்தோடு கிளம்பிய கூர்ங்கணைகள் கர்ணனைத் தலை சாய வைத்து விட்டன. பற்களை நறநற வெனக் கடித்துக் கொண்டு, காண்டீபத்திலிருந்து சட சட வெனப் பொழிந்த விஜயனின் கணைகள் கர்ணனின் சாரதியை வீழ்த்தின; குதிரையைக் குப்புறச்செய்தன கடைசியில் கர்ணனது வில் அம்பு. மகுடம் எல்லாம் கீழே சிதறும்படியாகவும் செய்துவிட்டன.

அவன் அப்போது எல்லாம் இழந்தவனாய், தன் உடலில் செருகப்பட்டுள்ள கணைகளே தன் பொருளாய்த் தேரின்மேல் சாய்ந்து, 'தருமதேவதை கூட என்னைக் காக்காதா? எல்லாம் என் வினையின் பலன்' என்று கருதியபடிக் கிடந்தான்.

ஆனால் தர்மதேவதை அவனைக் காக்க முன்வராமல் இல்லை அப்பொழுது அவன்மீது விஜயனால் வீசப்பட்ட கணைகள் எல்லாம் அவனை அணுக முடியாமல் தவறிப்போய்க் கொண்டேயிருந்தன என்றால், அது தர்மத்தின் தேவி தயை புரிந்ததைத் தானே சுட்டிக் காட்டுகிறது!

விஜயன் மருண்டான்; 'கண்ணா!' என்றான் 'நான் விடுகின்ற கணைகள் தேர்த்தட்டிலேயே விழுந்துவிடுகின்றனவே! எனக்கு இதன் அர்த்தம் சிறிதும் விளங்கவில்லை. வியப்பினும் வியப்பாக அல்லவா இது இருக்கிறது! என்றான்.

கண்ணன் விஜயனின் அவ்வார்த்தையைக் கேட்டதும் சற்றே குறுநகை பூத்தான். 'விஜயா! இதில் என்ன வியப்பிருக்கிறது! கோடிக் கணக்கான மக்களிலே அவன் ஒரு தனிப்பட்ட பெருமையுடையவன்! அவன் செய்துள்ள தர்மம் அவன்முன் நிற்கும்போது உன் கணைகள் அங்கே எப்படிப்போக முடியும்!' என்று நிதானமாக விஷயத்தைக் கூறினான்.

விஜயனுக்கோ பரபரப்பும் ஆத்திரமும் கரையில்லா வெள்ளமேபோல் பெருகிக்கொண்டிருந்தன! அன்று கர்ணன் மடிந்தால்தான் விஜயனின் உள்ளத்திற்கு நிம்மதி கிடைக்கும் பகைவர்களுள் எஞ்சியுள்ள மகா வீரன் அவன். அவன் வெறும் படை வீரன் என்று மட்டும் இருந்தால் அவனை அழித்துவிடுவது சுலபம்தான்! கொடை வீரத்தால் அல்லவா தர்ம தேவதை வீர லட்சுமியுடன் அவனிடம் குடிகொண்டிருக்கிறாள்!

இவற்றையெல்லாம் யோசித்து மனங் கலங்கிய விஜயன், 'கண்ணா! என்ன செய்யலாம்!' என்றான்

'நீ இங்கேயே இரு! நான் சற்றே போய் வருகிறேன். நான் திரும்பி வருகிறவரைக்கும் போரை நிறுத்திவை' என்று கூறிப் புறப்பட்டான் கண்ணன் விஜயன் அவன் செல்வதையே பார்த்துக்கொண்டு வெறித்து நின்றான்.

சிறிது நேரத்திற்குள் கண்ணனின் உருவம் ஓர், அந்தண உருவமாக மாறியதை மட்டும்தான் அவனால் காண முடிந்தது. அந்தணனாக மாறிய கபட வேட தாரி நேராகக் கர்ணனிடம் சென்றான். சோகமான சூழ் நிலையிலே மிகவும் வேதனையுடன் கிடந்த கர்ணனிடம் போய், 'மகாராஜாவே! என்றான்.

தன்னிடம் யாசகம் கேட்க யாரோ வந்திருக்கிறார் என்பதை அந்நேரத்திலும் அறிந்துகொண்டுவிட்ட அவன். 'பிராமணோத்தமரே! வாருங்கள்! என்ன வேண்டும்!' என்று கேட்டான்

பிராமணனுக்கு அவன் நிலை வருத்தத்தையும் இரக்கத்தையுமே கொடுத்தது ஆனால் அந்தப் பிராமணனின் உட்புகுந்திருந்த கண்ணபிரான் கொஞ்சமும் தளர்ச்சிகொள்ளாமல், 'மகாராஜாவே! நீ' யாசிக்கிறவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் எதையும் கொடுக்கிற வள்ளியோன் என்று கேள்விப்பட்டேன். என் தரித்திரத்தின் கோளாறால் நீயும் இத்தகைய நிலையில் இப்போதிருக்கக் கண்டேன். ஆனாலும், உன்னால் இயன்றதை நீ கொடுப்பாய் என்ற நம்பிக்கை மாத்திரம் இப்பொழுதும் என்னை விட்டு நீங்கவில்லை என்றான்.

கர்ணனுக்குத் துயரம் தாங்கமுடியவில்லை. ஐயா! இப்பொழுது என்னிடம் என்ன இருக்கிறது! இருப்பதைக் கேளுங்கள், கொடுக்கிறேன்! என் ஆவியோ நிலையிற் கலங்கியிருக்கிறது. ஆத்மா உள்ளேயிருக்கிறதோ, வெளியேறிவிட்டதோ என்பதைக் கூட என்னால் இப்பொழுது உணர முடியாத சமயம். வேண்டிய பொருள்களையெல்லாம் கொடுக்கும் அக்காலத்தில் நீங்கள் வரவில்லையே! என்றான்.

கண்ணன் தைரியத்துடன் தான் வந்த காரியத்தை முடித்துக்கொள்ள விரைந்தான் 'நீ செய்த தர்மம் உன்னிடம் இருக்கிறது! அச் செல்வத்தை எனக்குக் கொடு' என்றான் சிறிதும் ஈரமின்றி.

'அந்தணரே! அவ்வாறே நான் செய்த தர்மத்தின் பலன் முழுவதையும் உமக்கு அளித்தேன், ஏற்றுக்கொள்ளுங்கள் என்றான் கர்ணன் சிறிதும் சலியாமல்.

'நீர் வார்த்துக் கொடுத்தால்தான் அது சாத்தியமாகும்' என்றான் அந்தணனான கண்ணன்.

உடனேயே கர்ணன் தன் மார்பிலிருந்து கணையொன்றை உருவி, அங்கிருந்து உதிர்ந்த செந்நீரைக்கொண்டு தாரைவார்த்துக் கொடுத்தான்

கண்ணன் அதைப்பெற்ற பின்னும் அங்கிருந்து நகரவில்லை மகாராஜாவே! நீ என்னிடம் உனக்கு வேண்டிய வரம் ஒன்றைக் கேள்' என்றான். சுவாமி! இன்னும் ஏழேழு பிறவிகளை 'நான் எடுத்தாலும் அப் பிறவிகளில் என்னிடம் 'இல்லை' யென்று சொல்லி வந்தவர்களுக்கு நான் இல்லை' என்னாமல் கொடுக்கக்கூடிய மனத்தையளிக்கவேண்டும்' என்றான்.



கண்ணன் அவ்வாறே வரமளித்துவிட்டுத் தன் சுயரூப தரிசனத்தை அவனுக்குக் காட்டி நின்றான். கை கூப்பி வணங்கிய கர்ணன் வாயாரப் போற்றினான் தேவனை.



'உலகத்துக்கே ஒரு கொடையாளி' என்று கர்ணனைத் தனக்குள் புகழ்ந்தபடியே பார்த்தனிடம் வந்து, பகலவன் மறையுமுன் கர்ணனைக் கொல்வாய்!' என்று கட்டளையிட்டான் அடுத்த காரியம் நடைபெறவேண்டுமல்லவா!

தர்மதேவதையின் பாதுகாப்பைத் தானஞ் செய்துவிட்ட தியாகி அர்ச்சுனனின் அந்தக் கடைசிக் கணை முன் உயிர்த்தியாகமும் புரிந்தான்! துரியோதனனின் நன்றிக்குத் தன் உயிரையே அளித்து ஈடு செய்தும் விட்டான் அவ்வீரன்!



இது ஓர் உருக்கமான வரலாறு அல்லவா? இறப்பதற்கு முன் அவன் செய்த தர்மம் இது! இறந்தபின் ஈந்தவன் ஒருவன் வரலாற்றையும் இங்குக் கூற விரும்புகிறேன் இறக்கும்போது, 'இனி எப்போதும் வண்மை வழங்கவேண்டும்' என்று அவன் வரங் கேட்டதுபோல், இம் மனிதனும் ஒரு வரங்கேட்டான் இறக்குமுன்! கர்ணன் எம்பெருமானைக் கேட்ட வரம் அது இவன் தன் அருகிலிருந்தோரிடம் வேண்டிய வரம் இங்கே இனி கூறப்போவது

'சீதக்காதி' என்பவன் ஒரு முகமதிய வள்ளல் பாண்டிய நாட்டில் பிறந்து வாழ்ந்தவன் அவன் கொடிய பஞ்சகாலத்திலும்கூட அவன் மனத்தில்வண்மைப்பஞ்சம் ஏற்பட்டதில்லை. 'சரிக்குச் சரி பொன்னும் நெல்லும் விற்கும் பஞ்சகாலத்திலும் அவன் வரையின்றி வழங்கியவன்.

அவனது தமிழ்க் காதல் மகத்தானது தமிழ்ப் புலவர்கள் என்றால் அவனுக்கு ஆனந்தம் அவனது பெருமதிப்புக்குப் பாத்திரமாய் அக்காலத்தில் வாழ்ந்து வந்த புலவர் படிக்காசுத் தம்பிரான் என்பவர். வள்ளல் சீதக்காதி இறக்கும்போது அப்புலவர்பிரான் அவ்விடத்தில் இல்லை 'அவரைப் பார்த்துப் பின் இறக்கவேண்டும்' என்பதுவே அவனது எண்ணம். ஆனால் அதற்குள் விதி குறுக்கிட்டு விட்டது

ஒரு நாள் அவன் இறந்துவிடக் கூடிய நிலையில் இருந்தான் அவனுக்கே அது தெரிந்தும் விட்டது! 'புலவரை இனிமேல்காண்பதற்கில்லை. புலவருக்குப்பரிசளிக்கும் பாக்கியமும் இனிமேல்கிட்டப்போவதில்லை'என்று தோன்றிவிட்டது உடனே பக்கத்திலிருந்தவரைக் கூப்பிட்டான். அன்பர்களே! நான் இறந்த பின் என் உடலை அடக்கஞ் செய்தாலும் என் கைவிரலில் உள்ள மோதிரம் மட்டும் விரலிலேயே இருக்கட்டும் கழற்றிவிட வேண்டாம் என்று வேண்டிக்கொண்டான்.

பிறகு அவன் இறக்கவே, அவன் வேண்டுகோளின்படி மோதிரத்தைக் கழற்றாமல் அவனை அடக்கம் செய்தார்கள் சமாதியும் கட்டப்பட்டு முடிந்துவிட்டது காரியம்.

எல்லாம் ஆனபின் வந்தான் புலவன் "எங்கே வள்ளல்?" என்று கேட்டான் 'இங்கே' என்று சுட்டிக் காட்டிச் சமாதியினருகே வருத்தத்தோடு அவரை அழைத்துச்சென்றார்கள் அன்பர்கள்.

புலவரின்மூச்சுத்திணறியது மனங் கலங்கிற்று 'இனி இந்த உலகத்தில் இருந்தென்ன பயன்! வள்ளல்' இவனைப்போல் எவரேனும் உண்டோ' என்று கருதிய புலவர்,

'பூமாது இருந்தென்ன
புவிமாது இருந்தென்ன பூதலத்தில்
நாமாக இருந்தென்ன
நாமிருந்தென்ன நன்னாவலர்க்குக்
கோமான் அழகமர்மால்
சீதக் காதி கொடை மிகுந்த
சீமான் இறந் திட்டபோதே
புலமையும் செத்ததுவே'

என்று மனம் நொந்து பாடினார் புலவர்.

அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது சவக்குழி பிளந்தது வள்ளலின் கைவிரல் வெளியே தோன்றியது விரலிலே பளிச்சென்று மின்னியது அந்த மோதிரம்!

புலவர் திகைத்தார் "ஆகா! இவனல்லவா கொடைவீரன்! செத்துங் கொடுத்த இச்சீதக் காதியை இந்த உலகமே மறக்காது!' என்று கூறி மோதிரத்தை எடுத்துக்கொண்டார். அதன் பின் சவக்குழி மூடிக்கொண்டும் விட்டது! என்ன அதிசயம், பாருங்கள்! வள்ளன்மைக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்பதற்கு வள்ளல் சீதக்காதியின் சரித்திரம் ஒரு எடுத்துக்காட்டு என்பதில் மேலான சந்தேகமில்லையல்லவா?

* * *

வண்மையில் வீரங்காட்டிய கர்ணனும், செத்துங்கொடுத்த பராக்ரமம் பெற்ற சீதக்காதியும் 'வள்ளல்களை அளந்து பார்க்கும் துலை' முனையில் ஒரே தரத்தினர்தாம்! அவர் தம் வண்மை வீரமும் சிறந்தொரு எடுத்துக் காட்டு!




## [சில்லரை விலைகள்]
### (விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, ஜூன் 19—

அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர இது பயன்படும்.

| | | ரு | அ | பை. |
|---|---|---|---|---|
| உப்பு | 1-படி | 0 | 1 | 0 |
| துவரம் பருப்பு | 1-படி | 0 | 15 | 6 |
| உளுத்தம் பருப்பு | ,, | 1 | 2 | 0 |
| பைத்தம் பருப்பு | ,, | 1 | 2 | 0 |
| உளுந்து | ,, | 0 | 15 | 0 |
| கடலைப் பருப்பு | ,, | 0 | 10 | 0 |
| எள்ளு | ,, | 1 | 6 | 0 |
| கடலை | 1-வீசை | 0 | 8 | 5 |
| கடலை மாவு | ,, | 0 | 10 | 1 |
| கடுகு | ,, | 1 | 12 | 0 |
| வெந்தியம் | ,, | 1 | 12 | 0 |
| மிளகு | ,, | 18 | 8 | 0 |
| மிளகாய்-ராமநாதபுரம் | ,, | 3 | 10 | 0 |
| தனியா | ,, | 2 | 8 | 0 |
| புளி [புதுசு] | ,, | 1 | 4 | 0 |
| சீரகம் | ,, | 4 | 0 | 0 |
| வெல்லம் | ,, | 1 | 6 | 0 |
| நாட்டு சர்க்கரை | ,, | 1 | 7 | 0 |
| அஸ்கா சர்க்கரை | ,, | 1 | 5 | 0 |
| மஞ்சள் | ,, | 1 | 14 | 0 |
| பூசு-மஞ்சள் | ,, | 2 | 0 | 0 |
| குங்குமம் | ,, | 1 | 8 | 0 |
| பாதாம் | ,, | 3 | 8 | 0 |
| சீயக்காய் | ,, | 1 | 2 | 0 |
| சீயக்காய் பொடி | ,, | 1 | 12 | 0 |
| வாஷிங் சோடா | ,, | 0 | 9 | 0 |
| திராக்ஷை | ,, | 5 | 4 | 0 |
| மிந்திரிபருப்பு | ,, | 4 | 8 | 0 |
| களிப்பாக்கு | ,, | 5 | 6 | 0 |
| நெய் | ,, | 8 | 0 | 0 |
| நல்லெண்ணெய் | ,, | 3 | 3 | 0 |
| ஜவ்வரிசி | ,, | 1 | 14 | 0 |
| தேங்காய் எண்ணெய் | ,, | 3 | 8 | 0 |
| கடலெண்ணெய் 1-வீசை | | 2 | 9 | 0 |
| விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு. | | 2 | 0 | 0 |
| ஷை சிறியது | | 0 | 10 | 0 |
| வாசனை விளக்கெண்ணெய் | | | | |
| 4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு | | 1 | 5 | 6 |
| 16 ,, ,, பாட்டில் 1-க்கு | | 3 | 1 | 6 |
| சாம்பிக்கொட்டை பீபரி 1 வீசை | | 5 | 9 | 0 |
| ,, 'A' ,, ,, | | 5 | 3 | 0 |

| | | ரு | அ | பை. |
|---|---|---|---|---|
| பார்லி | 1-வீசை | 1 | 8 | 0 |
| மைலோ (பெரியது) | ,, | 2 | 12 | 0 |
| கரி 1 மூட்டை | (56 ப) | 4 | 0 | 0 |
| காமதேனுவனஸ்பதி 10 பவுண்டு டின் | | 11 | 8 | 0 |
| ,, 5 ,, | | 6 | 2 | 0 |
| ,, 2 ,, | | 2 | 6 | 0 |
| 'டால்டா' வனஸ்பதி 10 ப | | 11 | 12 | 0 |
| ஷை 5 ப | | 6 | 2 | 0 |
| கற்பூரம் | 1-பலம் | 0 | 6 | 0 |
| சாம்பிராணி | 1 பலம் | 0 | 6 | 0 |
| பெருங்காயம் | ,, | 0 | 4 | 0 |
| லவுங்கம் | ,, | 0 | 2 | 6 |
| ஏலக்காய் | ,, | 0 | 15 | 0 |
| எல் ஜி பெருங்காயம் 1 சேர் | | 2 | 2 | 0 |
| தீப்பெட்டி. 1 டஜன் | | 0 | 8 | 3 |
| ஓவல்டின் | | 3 | 10 | 0 |
| 'ரௌண்டிரீஸ் (R T) கொக்கோ ½ ப | | 1 | 8 | 0 |
| ஸன்லைட் சோப் | பெரியது | 0 | 5 | 3 |
| ,, | சிறியது | 0 | 3 | 0 |
| ஹமாம் சோப் | | 0 | 6 | 0 |
| லைப்பாய் | | 0 | 5 | 6 |
| டாம்கோ 501 பார் | | 1 | 3 | 0 |
| லக்ஸ் | | 0 | 6 | 0 |
| ரெக்ஸோனா | | 0 | 7 | 0 |
| மார்கோ சோப்பு | | 0 | 8 | 6 |
| 777 பார் 1-க்கு | | 1 | 3 | 0 |
| காந்தி டாய்லட் சோப் 1-க்கு | | 0 | 6 | 0 |
| மைசூர் 'ஸாண்டல் சோப | | 0 | 9 | 3 |
| கேரளா ஸாண்டல் சோப்பு | | 0 | 7 | 6 |
| மெடிகோ டாயிலட சோப் | | 0 | 8 | 6 |
| காடரீஜ் சோப் | நெ 1 | 0 | 11 | 0 |
| மேட்டூர் சந்தன ஸோப் 1 கட்டி | | 0 | 8 | 6 |
| ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு | | 0 | 6 | 0 |
| ,, கெஸ்ட் ஸைஸ் | | 0 | 2 | 0 |
| காவேரி ஸூபர் கார்பாலிக் (பெரிது) | | 0 | 4 | 3 |
| ,, (சிறியது) | | 0 | 2 | 3 |
| காவேரி வாஷிங் கேக் | | 0 | 3 | 9 |
| காவேரி வாஷிங் க்யூப் | | 0 | 3 | 0 |
| காவேரி பார் ஸோப் | | 1 | 2 | 6 |
| டாம்கோ ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்) | | 1 | 1 | 0 |
| ஷை (பெரிய பாட்டில்) | | 2 | 11 | 0 |
| குங்குமப் பூ [1 பாட்டில்] | | 1 | 4 | 0 |
| பச்சை கற்பூரம் 1 விராகனிடை | | 0 | 6 | 0 |
| "பினைல்" பாட்டல் | | 0 | 13 | 0 |
| குடிகூரா பவுடர் | 1 டின் | 2 | 6 | 0 |
| நீம் டூத் பேஸ்ட் | | 1 | 0 | 0 |
| மாக்லீன் பேஸ்ட் | | 1 | 0 | 0 |
| பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது) | | 2 | 12 | 0 |
| 7 ஓ க்ளாக் க்ஷவர ப்ளேட் (10 கொண்ட பாக்கட்) | | 0 | 15 | 0 |
| ஷை (5 கொண்ட பாக்கட்) | | 0 | 7 | 6 |
| கோரா டீ (டஸ்ட்) 1-பவுன் | | 2 | 5 | 6 |
| கோரா டீ ½ பவுன் | | 0 | 9 | 6 |
| கோரா டீ ¼ பவுன் | | 0 | 4 | 9 |